கல்கி

KALKI
7.3.1971
40 காசு



she is the bearer of tradition...

IN

CENTURY SAREES



THE CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.

Century — For 100% cotton textiles

Adroit/CM/43





விளைவுகளே கூறுகின்றன! துவைத்த துணிகளை அலசுவதற்குமுன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்க்கவும். பிறகு பாருங்கள் சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது என்று! சட்டை, புடவை, படுக்கை விரிப்பு, டவல் எல்லாமேதான்!

இத்தனைக்கும் ஆகும் செலவு, துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவு! டினோபால் வாங்குங்கள். ரெகுலர் பாக், எகானமி பாக் மற்றும் ஒரு வாளித் துணிக்கு ஒரு பாக்கெட் ஆகிய மூன்று அளவுகளில் கிடைக்கிறது.

டினோபால் என்ற பெயர் ஜே.ஆர்.கெய்கி எஸ்.ஏ. பாஸ்ல், ஸ்விட்சர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த.பெ. 11050, பம்பாய்-20 BR.


Shilpi HPMA 12A/70 Tam






"மான் விழியாள்" என பிறர் போற்றும் கண்ணழகி!

கண்ணுக்கு களிப்பூட்டும் அவள் கண்ணழகுக்கு காரணம்... ல்யூர் அவுட்டர் ஐ க்ரீம்.



பெரும்பாலோர் கண்களின் கீழ் கருவளையம், சுருக்கம் இவற்றால் அவதியுறுகிறார்கள். வயதாக ஆக இது இன்னும் அதிகரிக்கும். பெண்ணின் வடிவழகுக்கு அடிப்படையான விழியழகைக் கெடுத்துக் கொள்வதா? அதுவும் ல்யூர் அவுட்டர்



ஐ க்ரீம் இருக்கையில்! கண்களைச் சுற்றி தினமும் தடவி வந்தால், கன்னியரின் களையூட்டும் கண்களைத் தந்துவிடும். ஓய்வும், உறக்கமும் கூடவே அளித்தால், இதனைப் பயன்படுத்தும் மகளிருக்கு மயக்கும் விழிகள் சொந்தமாகிவிடும்.

கண்ணை இமை காப்பது போல, கண் அழகைக் காப்பது...ல்யூர் அவுட்டர் ஐ க்ரீம்

டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்: தென் இந்தியா
டி.டி. கிரிஷ்ணமாச்சாரி & கோ



கல்கி பொருளடக்கம்

சாதாரண, மாசி 23 * **மார்ச்சு 7, 1971**

மீண்டும் எச்சரிக்கிறோம் !	(தலையங்கம்)	...	7
ராஜாஜியின் கருத்துக்கள்	...	...	9
ரகுபதி ராகவ	தமிழாக்கம்: ராஜாஜி	...	14
மோகினித் தீவு	அமரர் கல்கி	...	17
பொன்னியின் செல்வன்	அமரர் கல்கி	...	25
உண்மையே வெல்லும்	இரா. கோபாலகிருஷ்ணன்	...	34
ராமாயணம்	ராஜாஜி	...	38
சிங்கக் கழுகு	பீட்டர் ஓ டான்னல்	...	42
காணிக்கை	ஆர்வி	...	46
போராட்டங்கள்	ர. சு. நல்லபெருமாள்	...	54
வலையில் விழுந்த மான்	லோமாஸ்	...	62
ராஜாஜி உதிர்த்த உவமைகள்	...	...	69
நப்பசலையின் காதல் (சிறப்புச் சிறுகதை)	கோவி. மணிசேகரன்	...	70
வயிரத்தோடு	பெ. தூரன்	...	78

அட்டைப்படம் : 'மலர்ப் புன்னகை' -ரவீந்திரபல்லா.

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கிக்கு வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றில் பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவை, போதிய தபால்தலைகளுடன் கூடிய முகவரியிட்ட உறையோடு வந்திருந்தால் அவ்வப்போது திருப்பி அனுப்பப்படுகின்றன. போதிய தபால் தலைகளுடன் வராத கதை, கட்டுரை கவிதை, துணுக்குகள் பற்றி இக்காரியாலயம் பொறுப்பேற்பதற்கில்லை.










கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!



தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே... உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

DC G.41 TM

மலர் 30

இதழ் 32

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்



மீண்டும் எச்சரிக்கிறோம்!

இப்போது நடக்கிற தேர்தல் போராட்டம் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துச் செய்த சுதந்திரப் போராட்டத்தைவிட முக்கியத்துவம் வாய்ந்தது. பிரிட்டிஷ் ஆட்சியைச் சகிக்க முடிந்தது. 1947-ல் இல்லாவிடினும், சிறிது காலம் தாழ்த்தியாகிலும் இயல்பாகவே பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றிருக்க முடியும். ஆனால் **இந்த 1971 மார்ச் மாதத்தில் ஸ்ரீமதி இந்திரா காந்தியின் ஆட்சியை ஒழிக்காவிடில் பின் ஒரு போதுமே தேசத்துக்கு விமோசனம் கிட்டாது.** ஏனெனில், மறுபடியும் ஸ்ரீமதி இந்திரா பதவிக்கு வருவாராகில் கலப்பற்ற கம்யூனிஸ ஆட்சிக்கு இந்தியா இரையாகிவிடும். இந்திரா வெற்றி பெறுவாராகில் தேசத்தை அப்படியே தட்டில் வைத்து ருஷ்யாவுக்குத் தாம்பூலமாக வழங்கிவிடுவார். அதன்பின் ஜனநாயகத் தேர்தலுக்கே இடமிராது. அடிமை வாழ்விலிருந்து விடுபட வாய்ப்பே இராது.

இது மூதறிஞர் ராஜாஜியின் எச்சரிக்கை.

இந்தப் பயங்கர உண்மையை மக்கள் அனைவரும் தீவிரமாக உணர்ந்து, தேசத்தைச் சர்வ நாசத்திலிருந்து காப்பாற்ற இந்தத் தேர்தலையே பகவத் பிரசாதமாகக் கருதி, ஸ்ரீமதி இந்திரா கட்சிக்கும், அவரது கூட்டணிக் கட்சிகளுக்கும் படுதோல்வி தரவேண்டும்.

வியாபார சமூகத்தினர் அச்சத்தின் பேரில் இந்திரா - தி. மு. க.வை ஆதரிக்க முற்படுவதன் பொருளின்மையை ராஜாஜி தெளிவாக விளக்கியுள்ளார். இப்போது தங்கள் வியாபாரத்துக்குக் குந்தகம் உண்டாகக் கூடும் என்று இந்திரா - தி. மு. க. கூட்டணியை இவர்கள் ஆதரிக்கப் போக, பிறகு **கம்யூனிஸ ஆட்சி ஏற்பட்டால் அப்போது சுதந்திரத் தொழில் என்பதே அடியோடு மறைந்து விடும்:** தாற்காலிக லாபத்தை எண்ணிப் புது காங்கிரஸ் - தி. மு. க.வை ஆதரிப்பது தற்கொலைக்கு வழிவகுத்துக் கொண்டதாகவே ஆகும்.

திரு காமராஜ் அவர்கள் ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்: கட்சிகளுக்கிடையே உள்ள கொள்கைமாறுபாடுகள் ஒருபுறம் இருக்கட்டும். ஏழை மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதில் எந்தக் கட்சிக்கும் அபிப்பிராய பேதமில்லை. இதற்குப் பல வழிகளைப் பல கட்சிகள் சொல்கின்றன. அவை யாதாயினும், **அவற்றை அமல் செய்பவர்கள் யோக்கியர்களாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.** நாணயமுள்ளவர்களாக, நேர்மையுள்ளவர்களாக, சத்தியத்துக்கும் தெய்வத்துக்கும் அஞ்சுபவர்களாக, லஞ்ச ஊழலினால் மாசுறாதவர்களாக இருப்பவர்களே ஆட்சிபீடத்தில் இருக்க வேண்டும். இந்த யோக்கியதாம்சங்கள் ஒருவரிடம் இருப்பதையும் இல்லாததையும் நீதி விசாரணை செய்து நிரூபிப்பது இயலாத காரியம். ராஜாஜி கூறுவதுபோல் நம் நாட்டுக் குடும்ப வாழ்வில் கணவன், மனைவி, பிள்ளை, நாட்டுப் பெண், மருமகன் என்று பலர் கூடி வாழ்வதால் சொத்து, பணக் கணக்குகள் பல பெட்டிகளில் இருக்கும். எனவே ஒருவரின் ஊழலையோ, தூய்மையையோ நீதி விசாரணையில் உறுதிப்படுத்த முடியாது. ஆனாலும் இதுபோன்ற விஷயங்களில் பரவலான பொதுஜனக் கருத்துக்குப் பெரு மதிப்பு நிச்சயமாக உள்ளது. நீதிமன்றத் தீர்ப்பே வேண்டாம். சந்தேகத்துக்கு இடமானாலே போதும், அப்படிப்பட்டவர்களை ஒருகாலும் அரியாசனத்தில் அமர்த்தலாகாது.

மிகவும் சக்திவாய்ந்த அதிகார ஸ்தானத்தில் இருக்கும் பிரதம மந்திரிக்குத் தேவையான சீரிய, நேரிய குண நலன்கள் ஸ்ரீமதி இந்திரா அம்மைக்கு இருப்பதாக எவருமே சொல்வதற்கில்லை. ராஷ்டிரபதித் தேர்தலில் முதலில் தாமே பிரேரித்த நபரைப் பிற்பாடு அவர் காலை வாரி விட்டதும், ராஜமானியத்தை நிறுத்துவதற்காகச் சத்தியப் பிரமாணமான பழைய பிரதிக்ஞையைக் கூசாமல் முறித்ததும், தம்



பிப்ரவரி 25உ கடற்கரையில் நடந்த ஜனநாயக முன்னணிக் கூட்டத்தில் லட்சக்கணக்கானவர்கள் முன்னிலையில் ஸ்ரீ காமராஜுக்குத் திலகமிட்டு வாழ்த்தினார் ராஜாஜி. படம் : இந்தியன் எக்ஸ்பிரஸ்

தனியொருவரின் அதிகார சக்தி மக்கட் சபையில் குறையக் கூடாது என்பதற்காகத் தமிழகத்தில் தமது கட்சியையே சூனியமாக்கியிருப்பதுமே போதும், அவரிடம் நாட்டை ஒப்புவிப்பது எப்பேர்ப்பட்ட பேராபத்து என்று உணர்வதற்கு. நேர்மைதான் இல்லையென்றாலும், திறமையாவது உள்ளதா எனில், வங்காளத்தில் எவ்விதத் தடையுமின்றி இடைவிடாமல் நடைபெற்று வரும் அதி கோரமான வன்முறை ஒன்றே போதும், அவரது திறமையின்மையை நிரூபிப்பதற்கு.

நேர்மையோ, திறமையோ சிறிதும் இல்லாவிடினும் யதேச்சாதிகாரம் செலுத்த ஆசை மட்டும் நிறைய இருக்கிறது இந்திரா அம்மையாருக்கு. ஆசை பிசாசாக உட்புகுந்து விட்டால், அந்த ஆசைக்குச் சிறிது இடையூறு ஏற்பட்டாலும் கோபம் உண்டாகிறது. கோபத்தில் தெள்ளிய சிந்தனையே குலைகிறது. அறிவு அடி நாசமாகிறது. அறிவு போனபின் மனிதனே அழிகிறான். இப்படியாக பகவத் கீதை, ஆசை-அதன் எதிர்வினைவான கோபம்-அதிலிருந்து பிறக்கும் சிந்தனைக் குழப்பம் - அதன் இறுதிவினையான ஆன்மநாசம் என்று எச்சரிக்கும் அழிவுப்பாட்டைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார் ஸ்ரீமதி இந்திரா. இவர் தேசத்தின் தலைமையேற்றால் இவரது ஆசை ஆன்ம நாசத்தோடு மட்டும் முடியாது. தேசத்தையே நாசமாக்கும்.

மக்கள் வாழ வேண்டுமாயின், ஜனநாயகம் வாழ வேண்டுமாயின், சட்டத்துக்கிசைந்த ஆட்சி வாழவேண்டுமாயின், நேர்மையும் தகுதியும் வாழ வேண்டுமாயின் மார்ச்சு மாத மத்தியுடன் இந்திரா ஆட்சிக்கும் தி. மு. க. ஆட்சிக்கும் மங்களம் பாட வேண்டியது மக்கள் கடமை!

நாட்டில் கம்யூனிஸ விஷத்தைக் களைய வேண்டும். மயக்கு சோஷலிஸத்தை அகற்றி, மக்களுக்கு உழைப்பின் மேன்மையை உணர்த்த வேண்டும். அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி நாட்டில் செல்வச் செழிப்பினை உண்டாக்க வேண்டும். இந்தச் செல்வச் செழிப்பின் பயனை ஏழை எளியவர்களும் அநுபவிப்பதற்கு வழி காண வேண்டும். நேர்மையும் நாணயமும் மிக்க நிர்வாகிகளைக் கொண்டே இவ்விதத்தில் மக்களை உயர் நிலைக்கு இட்டுச் செல்ல முடியும். இப்படிப்பட்ட நேர்மையான, நாணயமான, சட்டத்துக்குக் கட்டுப்பட்ட, மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களை மதிக்கின்ற அரசாங்கத்தை ஏற்படுத்தும் திருப்பணிக்காகவே ராஜாஜியும் திரு காமராஜும் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். ''இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைத் தீர்க்கக் கூடிய ஒரே தலைவர் மூதறிஞர் ராஜாஜி'' என்று மனமார உணர்ந்து அவருடன் தோளோடு தோள் நிற்கிறார் திரு காமராஜ். தம் யோசனைகளைச் செயலாக்கித் தேசத்தை நாசத்திலிருந்து மீட்கக் கூடியவர் திரு காமராஜ் அவர்களே எனக்கருதி ராஜாஜி அவருக்கு வீர திலகமிட்டு இந்தத் தர்ம யுத்தத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார். வீர திலகம் வெற்றித் திலகமாவதற்கு இறைவன் இன்னருள் புரிவானாக!

ராஜாஜியின் கருத்துக்கள்

ராஜ்ய முதன் மந்திரி ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள விஷயத்திலும்கூட நீதிமன்றம் சுதந்திரமாகவே இயங்குகிறது என்று மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சென்னை ஹைகோர்ட் நிரூபித்துள்ளது.. திரு ஈ.வெ. ரா.வின் தெய்வ நிந்தனையை எடுத்துக் காட்டும் சுவரொட்டியைத் தமிழக அரசாங்கம் தடை செய்தது சட்டப்படி செல்லாது என உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. போலீஸார் பறிமுதல் செய்த சுவரொட்டிகளை, இவ்வழக்குத் தொடுத்த வாதிக்குத் திருப்பித் தந்துவிட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

மேற்படி சுவரொட்டி மத உணர்ச்சியைப் புண்படுத்தக்கூடும் என்று ஒரு பொய்க் காரணத்தைக் காட்டிச் சர்க்கார் அதற்குத் தடை விதித்தது. ஆனால் உண்மை என்ன வெனில், சேலத்தில் ஆபாச ஊர்வலம் நடத்தி மக்களை வெகுண்டெழத் தூண்டியவர்மீது நடவடிக்கை எடுக்க முன்பு அரசாங்கத்துக்கு விருப்பம் இல்லை. மேற்படி ஊர்வலம் பற்றிய உண்மை பிரபலமாவதால் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைத் தவிர்க்கவே தமிழ்நாடு அரசாங்கம் விரும்பியது. இந்தத் தந்திர ஜாலத்தை ஹைகோர்ட் உட்புகுந்து கவனித்து விட்டது என்றே சொல்லத் தோன்றுகிறது.

★


தேர்தல் மிக நெருங்கி வருகிற சமயத்தில் மத்திய, மாநில அரசாங்கங்கள் பல 'தயாள'த் திட்டங்களை அமுல் செய்து, அவற்றினால் பயன் பெறுவோரின் வாக்குகளைப் பெற முயலும் பழக்கம் பற்றி 'ஹிந்து' தலையங்கம் எழுதியுள்ளது. அது பின்வருமாறு முடிவுறுகிறது:

> இந்த வழக்கத்துக்கு அவர்கள் (அரசாங்கங்களை நடத்தும் கட்சிகள்) முடிவுகட்டுவதற்குக் காலம் வந்து விட்டது. இவ்விஷயமாக ஏகப்பட்ட விவாதம் நடந்திருக்கிறது. ஆனால் ஸ்தூலமாகக் காரியம் ஏதும் நடக்கவில்லை. குடும்பப் பென்ஷன், பஞ்சப் படி உயர்வு, ஊதிய உயர்வு, இடைக்கால கஷ்ட நிவாரணம் போன்ற கொள்கைப் பிரகடனங்களைத் தேர்தல் நெருங்குகையில் வெளியிடலாகாது என்று தடை விதிப்பதற்கு ஆளும் கட்சிகள் யாவும் உடன்படத் தடை என்ன? ஒரு சில விஷயங்களில் நிர்ப்பந்தத்தின் மீது, ஆட்சிபுரிவோர் இம் மாதிரி முடிவெடுக்க நேரலாம். உதாரணமாக, சந்தர்ப்பவாதிகளான சில தொழிற் சங்கத் தலைவர்கள் நேர் வழியிலோ, கோணல் வழியிலோ தங்கள் ஆதரவாளரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தேர்தல் சமயம் பார்த்து ஆளும் கட்சியின முற்றுகை யிடலாம். அக்கட்சியும் வேறு வழி இன்றி அரசியல் எதிராளிகளின் போட்டியைச் சமாளிக்க விட்டுக் கொடுக்க நேரிடலாம். எனவே, இவற்றை யெல்லாம் பார்த்தால், தேர்தல் நடத்துவதற்க அறிவிப்புச் செய்து சட்டசபைகளைக் கலைத்த பின்பு, முக்கியமான கொள்கைப் பிரகடனங்களை — குறிப்பாக, பெரிய பணச் செலவு ஏற்படுகிற பிரகடனங்களை — அரசாங்கம் வெளியிடலாகாது எனச் சம்பிரதாய பூர்வமாகவோ, சட்டரீதியாகவோ முடிவு எடுக்க வேண்டியது அவசியமெனத் தோன்றுகிறது. ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார்?


★

1962ம் ஆண்டுத் தேர்தலில் என் புதல்வர் ஸி. ஆர். நரஸிம்மன் கிருஷ்ணகிரி சட்ட சபைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டபோது, நான் நரஸிம்மனை எதிர்த்து எதுவும் பேசவேண்டாம் என்று தி. மு. க. தலைவர்களைக் கேட்டுக் கொண்டேனும்! இவ்வாறு திரு கருணாநிதி ஒரு பிரசங்கத்தில் கூறியதாகத் தி. மு. க.வின் முக்கிய தினப் பத்திரிகையான 'முரசொலி'யில் பிரசுரமாகியிருக்கிறது. இது அப்பட்டமான பொய். இப்படிப்பட்ட ஒரு செயலைப் பற்றி என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியாது. '1959ல் சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்த நீங்கள், 1962ல் காங்கிரஸ் வேட்பாளராக நின்ற உங்கள் புதல்வரை எதிர்த்து ஏன் கிருஷ்ணகிரியில் பிரசாரம் செய்யவில்லை?' என்று என்னைக் கேட்கிறார் திரு கருணாநிதி. அரசியல்வாதிகளையும் சில பண்புகள் கட்டுப்படுத்துகின்றன என்ற ஒன்றைத்தான் அவருக்கு நான் விடையாகக் கூற முடியும்.

திராவிடக் கழகத்தினர் சேலத்தில் நடத்திய ஆபாச ஊர்வலத்தைக் கண்டித்து பிப்ரவரி 24ந் தேதியன்று மாநிலமெங்கும் பரவலான ஹர்த்தால் நடைபெற்றது. பல இடங்களில் தெய்வத் திரு உருவப் படங்கள் கோலாகல பவனியாக எடுத்துச் செல்லப்பட்டன. சேலத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் தெய்வ உருவங்களின் ஊர்வலத்தில் உற்சாகமாகப் பங்கு கொண்ட காட்சி.



இந்தியாவைக் காப்போம்! ஜனநாயகத்தைக் காப்போம்!



கடந்த இரண்டாண்டு காலமாக, இந்தியாவின் அரசியல், பொருளாதார நிலைமைகள் அபாயகரமான தன்மையில் சீர் கெட்டு வருகின்றன. பலாத்கார மனப்போக்கு நெடுகிலும் பரவுகிறது. இந்தப் போக்கு ஏற்கனவே வங்காளத்தில் அமைதியான வாழ்வை நிலைகுலையச் செய்துவிட்டது. ஒரு பாவமுமறியாத, நூற்றுக்கணக்கான ஆண், பெண்களின் உயிர்களைப் பலி கொண்டு விட்டது. இந்த நிலைமை, இந்திய நாட்டின் இதர பகுதிகளுக்கும் பரவத் தொடங்கி யிருக்கிறது.


எனவே, தற்போதைய அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கக் கூடியதைவிட, அதி தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டாலொழிய, அராஜக நிலைமை ஏற்படக் கூடும். ஜனநாயகம் அழிந்து போய் விடும். அரசியல் சாசனத்தின் பூரணத்துவத்திற்கே ஆபத்து வந்திருக்கிறது. அடிப்படை உரிமைகளுக்குக் குழி பறிக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. பொறுப்பற்ற தன்மையில் செய்யப்படும் சர்க்காரின் செலவுகள், பல கோடி ரூபாய்கள் மூலதனமாக முடக்கப்பட்டுள்ள சர்க்கார் துறைத் தொழில்களில் ஏற்படும் தொடர்ச்சியான நஷ்டங்கள் ஆகியவை பொருளாதாரத்தை மிகவும் சீர்குலைத்திருக்கின்றன. தேசியப் பொருளாதாரம் பண வீக்கத்தை ஏற்படுத்தும் சக்திகளின் கையில் சிக்கித் திணறுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, ஒழுக்க மாண்புகள் மறைந்துவிட்டன. முடிவு முக்கியமே தவிர, அதை அடையக் கையாளும் வழிகள் முக்கியமல்ல என்ற நாசகாரக் கொள்கை, பகிரங்கமாக, வெட்கங்கெட்ட முறையில் பின்பற்றப்படுகிறது. நியாயமற்ற தூண்டுதல்கள், அடாத அதிகாரம், முறைகேடான வற்புறுத்தல்கள் ஆகியவற்றை மூல பலமாகக் கொண்ட அரசியல் சந்தர்ப்பவாதம், அரசியல் அதிகாரத்தை அடையவும், அதை நிலைநிறுத்தவும் கையாளப்படும் முக்கிய உபாயமாகி விட்டது.

இந்தத் தீய சக்திகளின் கூட்டை முறியடிக்கவும், ஒழுக்க நெறிகளை நிலைநாட்டவும், சட்டம் அமுல் நடத்தப்படவும், தனி மனித சுதந்திரம் பாதுகாக்கப்படவும், முறையான பொருளாதாரவளம் தலைதூக்கவும் வகை செய்யக்கூடியமுறையில் இந்திய ஜனநாயகத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கு மக்கள் சபைக்கான தேர்தல், இந்திய மக்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறது.

மக்கள் சபைத் தேர்தலில் நான்கு கட்சிகள் இணைந்த ஜனநாயகக் கூட்டணி பரிபூரண மெஜாரிட்டிக் கட்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் மேலே குறிப்பிட்ட நன்மைகளை அடைய முடியும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். இல்லையென்றால், பிரதமரின் சாகசக் கொள்கைகளும், கம்யூனிஸ்டுகள் மற்றும் இதர சமூகவிரோத சக்திகளின் ஆதரவை நாடத் தயங்காத அவரது போக்கும் நாட்டின் வருங்காலத்தைச் சீர்திருத்த முடியாத வகையில் பாழ்படுத்திவிடும்.

எனவே, ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு உறுதியுடன் வாக்களிக்கும்படி ஆண், பெண் வாக்காளர்கள் அனைவரையும் ஆர்வத்தோடு வேண்டுகிறோம். மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் பல லட்சக்கணக்கான தேசபக்தர்கள் தியாகங்கள் பல செய்து பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க வழி அது ஒன்றேதான்!

இந்தச் சின்னங்களில் வாக்களியுங்கள்





கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!

கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினறுகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினைத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!



உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப் மனங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.

டாடா தயாரிப்பு.

ஏன் முடியாது?

லாஸ் ஏன்ஜலஸ் நகரில் வாட்ஸ் என்ற பகுதியில் ஒரு வீடு. இதில் வசித்த ஸைமன் ரோடியா கொல்லைப்புறத்தில் ஒரு விநோதமான காரியத்தில் ஈடுபட்டார். பயனற்றவை என்று தூக்கி எறியப்பட்ட எஃகுக் கம்பிகள், உடைந்த கண்ணாடிகள், கடலிலிருந்து கிடைக்கும் சங்கு, சிப்பி முதலானவை — இவற்றைக் கொண்டு கனவுலகக் காட்சி போன்று ஒரு விசித்திரமான லோகத்தைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தார். மிக உயரமாக ஆனால் கோணல் மாணலாக உருவாயின இவர் கோபுரங்கள். ரோடியா இத்தாலியிலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர். படிப்பறிவு இல்லை. கலை நுணுக்கமும் கற்று அறிந்தவரில்லை. அவரது பக்கத்து வீட்டுக்காரர்கள் இந்தக் கோபுரங்களை ஒரு பைத்தியக்காரனின் காரியம் என்று எண்ணினர். அவற்றின் அருகில் வசிக்க நேர்ந்திருக்கிறதே என்று அலுத்துச் சலித்துக் கொண்டனர். 79ஆம் வயதில் ரோடியா தமது இல்லத்தைப் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவருக்குச் சல்லிக் காசும் பெற்றுக் கொள்ளாமல் எழுதி வைத்து விட்டுப் போய்விட்டார். தமது வாழ்நாள் முழுதும் பாடுபட்டு உருவாக்கிய சிகரங்களை விட்டுப் பிரிந்து தாம் மரணத்தைத் தழுவச் செல்வதாகக் கூறிப் போனார். சிறிது காலத்துக்குள் கலை வல்லுநர்கள் ஸைமன் ரோடியாவின் சிருஷ்டிகளைப் பார்த்து விட்டு அற்புதம் என்றும் அவற்றை உருவாக்கியவனே மேதை என்றும் புகழ்ந்தார்கள். இன்று கலையில் ஈடுபாடு கொண்டவர்கள் யாராயினும் சரி, லாஸ் ஏன்ஜலஸ் நகருக்குப் போனால் இந்தப் ''பைத்தியக்காரக் கோபுர''ங்களைக் காணத் தவறுவதில்லை.

ஊரை விட்டுப் போய் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஸைமன் ரோடியா வடக்கு கலிஃபோர்னியாவில் கண்டுபிடிக்கப்பட்டார். அவருக்கு நிறையப் புகழ் ஏற்பட்டிருப்பதைச் சொல்லித் திரும்பி வருமாறு அழைத்தபோது 33 ஆண்டுகள் பாடுபட்

கோணல் மாணல் கோபுரம்: வானளாவும் கட்டடம்

டுத் தாம் உருவாக்கிய அந்தக் கலைப்படைப்புடன் தாம் மீண்டும் எந்த விதத்திலும் சம்பந்தப்பட விரும்பவில்லை என்று பிடிவாதமாய் மறுத்துவிட்டார்! தமது படைப்பை மறுமுறை கண்ணால் பாராமலே 1959ல் காலமானார்.

* * *

நியூயார்க்கில் உலக வியாபாரக் கேந்திரத்தின் புதுக் கட்டடத்தில் இரண்டு வானளாவும் கோபுரங்கள். ஒவ்வொன்றும் நூற்றிப் பத்து மாடிகள் கொண்டது. நியூயார்க் துறை முகத்துக்கு மேலாக 1350 அடி உயரம் எழும்பி வானை அளாவும் இந்தக் கோபுரங்கள் 1973ல் முழுமையாகக் கட்டி முடிக்கப்படும். எனினும் இக்கேந்திரம் 1970 முதலே வாடகைக்கு வருவோரை வரவேற்கத் தொடங்கி விட்டது. ஹட்ஸன் நதி அருகே பதினாறு ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படும் இந்தக் கட்டிடம் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களில் ஈடுபட்டோருக்குச் சிறப்பு அங்காடியாக, சூப்பர்மார்க்கெட்டாகத் திகழும். பொருள்களை உலகம் முழுமைக்கும் விற்பதோ உலகம் முழுமையிலிருந்தும் வாங்குவதோ இங்கு நடக்கும். மொத்தம் ஆறு கட்டடங்கள். இரண்டு வானளாவும் கோபுரங்கள். மீதம் நான்கும் சிறியன. ஒரே இடத்தில் உள்ள காரியாலயங்களின் பரப்பளவு என்று பார்க்கையில் இதுவரை பென்டகன் கட்டிடம் தான் (அமெரிக்காவின் ராணுவத் தலைமையகம்) முதன்மை ஸ்தானம் பெற்று வந்தது. ஆனால் இப்போது உருவாகிவரும் உலக வியாபாரக் கேந்திரத்தில் காரியாலயங்களுக்கு, பென்டகனைவிட எண்பது ஏக்கர் அதிகமான பரப்பளவு கிடைக்கும்!

இந்த உலக வியாபாரக் கேந்திரத்தைக் கட்ட அதன பாதாள அஸ்திவாரம் போட்டபொழுது வெட்டி எடுக்கப்படவிருந்த பன்னிரண்டு லட்சம் கன கஜம் மண்ணையும் கல்லையும் என்ன செய்வது என்ற பிரச்னை எழுந்தது. எங்கேயாவது தூக்கிக் கொண்டு போவதற்குப் பதில் ஹட்ஸன் நதியின் சில பகுதிகளைத் தூர்த்தார்கள். இதனால் புதிதாக 23 ஏக்கர் நிலம் நியூயார்க் நகருக்குக் கிடைத்தது. இப்புது நிலப்பரப்பின் மதிப்பு தொண்ணூறு மிலியன் டாலர் (அறுபத்தேழரைக்கோடி ரூபாய்)!



ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம் : ராஜாஜி

66

பிரம்மசரியத்துக்கு முதல்படி அதன் அவசியத்தை உணர்வது. அதைப் பற்றி மனத்தில் சந்தேகம் இருந்தால் ஒருநாளும் பிரம்மசரிய விரதத்தை அனுசரிக்க முடியாது.

அடுத்தபடி என்னவென்றால் பொதுவாக எல்லாப் புலன்களையும் அடக்கியாளுதல். உண்பதில் நாக்கைக் கட்டாதவன் பிரம்மசரிய மலையின் மேல் ஏற முடியாது. உயிரைக் காப்பதற்காக உணவு உட்கொள்ள வேண்டுமேயொழிய ருசியான சாப்பாட்டின் வழி இன்பம் அடைவதற்காக உணவு என்று கருதலாகாது. பரிசுத்தக் காட்சிகளைத்தான் பார்க்க வேண்டும். சிற்றின்பக் காட்சிகளில் கண்களைச் செலுத்தலாகாது. நடக்கும்போது இங்குமங்கும் பார்வையைச் செலுத்தாமல் கீழ்நோக்கி நடப்பது பண்பாடு அடைந்தவனுடைய முறை. பிரம்மசரியத்தைக் கோருபவன் கெட்ட பேச்சுகளுக்குக் காது கொடுக்க மாட்டான். வாசனைப் பொருள்களின் இன்பத்தைத் தேட மாட்டான். அறவழியில் நடப்பவனுக்கு அத்தர் சந்தனாதி வாசனைத் திரவியங்களைக் காட்டிலும் மழை பெய்த மண்ணின் வாசனை மிகச் சிறந்த நறுமணமாகும். பிரம்மசரியத்தை அடைய விரும்புகிறவனுக்குச் சோம்பல் உதவாது. நாள் முழுதும் நல்ல பணியில் தன்னுடைய அங்கங்களைச் செலுத்த வேண்டும். அவ்வப்போது உபவாசம் இருக்க வேண்டும்.

மூன்றாவது, சகவாசம் நல்ல சகவாசமாக இருக்க வேண்டும். படிக்கும் புத்தகங்களும் நல்ல புத்தகங்களாக இருக்க வேண்டும். சுத்தமாக இருக்க வேண்டும். நல்லவர்களுடைய சகவாசமும் பாப கருத்துக்களை ஒதுக்கிய புத்தகங்களும் அத்தியாவசியம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பிரார்த்தனையும் ஜபமும் அவசியம். உள்ளத்தைச் செலுத்திய ஜபம் தினம் தவறாமல் செய்து ஆண்டவன் அருளை வேண்டிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இவையொன்றும் கடினமல்ல. சாதாரண மக்கள் அனுசரிக்கக் கூடிய முறைகள். பிரம்மசரியத்தை உண்மையில் விரும்பினால் இந்த முறைகளில் ஒரு கஷ்டமுமிராது. அடைய வேண்டும் என்கிற விருப்பம் உறுதியாக இல்லாமற் போனாலேதான் இந்த முறைகளில் ஒருவன் கஷ்டப்படுவான். பார்க்கப் போனால் நான் சொல்லிய பண்பாடுகளும் கட்டுப்பாடுகளும் சாதாரண மக்கள் ஓரளவு ஒப்புக்கொண்டு நடந்து வருவதினாலேதான் உலக வாழ்க்கை நடைபெற்று வருகிறது. சாதிக்க முடியாத விஷயம் ஒன்றுமில்லை.

(யங் இந்தியா, 29 - 4 - 26)

பிரம்மசரியத்தில் வெற்றியைக் காண விரும்புகிறவர்கள் ஒரு புலனை மட்டிலும் கட்டுப்படுத்திவிட்டு மற்ற விஷயங்களில் சாதாரண மக்களைப் போலவே நடந்து கொள்ளலாம் என்று எண்ணுவதனாலேதான் வெற்றி காணாமல் இருக்கிறார்கள். உண்பதிலும் பார்ப்பதிலும் கேட்பதிலும் எல்லோரையும் போலவே இருந்தால் பிரம்மசரியத்தில் வெற்றி எப்படிக் காண முடியும்? வெனிற்காலத்தில் மார்கழி மாதத்தின் குளிர்ச்சியைத் தேடுவது போலாகும். பிரம்மசாரியினுடைய வாழ்க்கை வேறு; மற்றவர்கள் வாழ்க்கை வேறு; இந்த வேறுபாட்டை நன்றாக உணர வேண்டும். இருவருக்கும் கண்கள் ஒன்றே. ஆனால் பிரம்மசாரி ஆண்டவனுடைய விபூதியைக் காண்பான் ; மற்றவர்கள் காண்பது கூத்தும் வேடிக்கையும். இருவருக்கும் காது ஒன்றே. ஆனால் ஒருவனுடைய செவியில் கேட்பது நாராயணன் புகழ்; மற்றவன் செவி கிராம்ய ஹாஸ்யங்களில் இன்பங் காணும். இருவருமே தூங்காமல் ஜாகரணம் அனுஷ்டிக்கலாம். ஒருவன் பிரார்த்தனைக்கோ சத்காலட்சேபக் கதைகள் கேட்கவோ அப்படிச் செய்வான். மற்றவன் கூத்துக்கும் கேளிக்கைக்கும் தூக்கத்தைக் கைவிடுவான். இருவருமே உணவு உண்கிறார்கள். ஒருவன் ஆண்டவன் கோயில் கொண்டிருக்கும் உடலைச் சரியான நிலையில் வைத்திருப்பதற்காக உண்கிறான். மற்றவனோ ருசிகள் அனுபவிக்க அளவுக்கு மீறித் தின்று பூஜாபாத்திரமாகிய வயிற்றைச் சாக்கடையாக்கிக் கொள்கிறான். பிரம்மசரிய விரதம் பூண்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இவ்வாறு மிக வித்தியாசம். விரதத்தில் படிப்படியாக வெற்றி பெறும்போது இந்த வித்தியாசமும் வர வர அதிகமாவதைக் காணலாம்.



மோகினித் தீவு

அமரர் கல்கி

எட்டாம் அத்தியாயம்

பூரண சந்திரன் உச்சி வானத்தைத் தாண்டி மேற்குத் திசையில் சற்று இறங்கி நின்றான். சந்திரன் நின்ற நிலை, அந்த அதிசயத் தம்பதிகள் கூறி வந்த கதையைக் கேட்டுவிட்டுப் போகலாம் என்று தயங்கி நிற்பது போலத் தோன்றியது. காற்று அடித்த வேகம் வர வரக் குறைந்து இப்போது நிச்சலன மாகி யிருந்தது. அந்த மோகினித் தீவின் காவலர்களைப் போல் நின்ற மரங்கள் அச்சமயம் சிறிதும் ஆட வில்லை; இலைகள் சற்றும் அசையவில்லை. கடலும் அப்போது அலை ஓய்ந்து மௌனம் சாதித்தது. சுகுமாரன்—புவன மோகினியின் கதையைக் கேட்பதற்காகப் பிரகிருதியே ஸ்தம்பித்து நிற்பது போலக் காணப்பட்டது.

இப்போது நான் அந்த வரலாற்றைத் திருப்பிச் சொல்லும்போது வார்த்தைகள் உயிரற்றும் உணர்ச்சியற்றும் வருவது எனக்கே தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் அவர்கள் மாற்றி மாற்றிக் கதை சொல்லி வந்தபோது ஒவ்வொரு சம்பவத்தையும் என் கண் முன்னால் நேரில் காண்பது போலவே இருந்தது. ஒவ்வொரு கதாபாத்திரத்தைப் பற்றி அந்தத் தம்பதிகளில் ஒருவர் கூறியபோது நான் அந்தக் கதா பாத்திரமாகவே மாறிவிட்டேன். கதா பாத்திரங்கள் அநுபவித்த இன்ப துன்பங்களை யெல்லாம் நானும் சேர்ந்து அநுபவித்தேன்.

இடையிடையே சில சந்தேகங்களும் கேள்விகளும் என் மனத்தில் உதித்துக் கொண்டு வந்தன. இந்தச் சுந்தர புருஷன் யார்? இவனுடைய காதலியான வனிதாமணி யார்? எப்போது இந்தத் தீவுக்கு இவர்கள் வந்தார்கள்? இவர்கள்

தங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் இந்தப் பழைய காலக் கதையைச் சொல்லி வரும் காரணம் என்ன? அந்தக் கதைக்கும் இவர்களுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? அல்லது அக்கதைக்கும் இந்தத் தீவுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்க முடியுமா? 'புவனமோகினி' என்ற பாண்டிய குமாரியின் பெயருக்கும் 'மோகினித் தீவு' என்னும் இத்தீவின் பெயருக்கும் ஏதாவது பொருத்தம் உண்டா? இம்மாதிரியான கேள்விகளும் ஐயங்களும் அடிக்கடி தோன்றி வந்தன. ஆனால் அவர்களிடம் அவற்றைக் குறித்துக் கேட்டுச் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பெண்மணி மூச்சு விடுவதற்காகக் கதையை நிறுத்தினால் ஆடவன் கதையைத் தொடர்ந்து ஆரம்பித்து விடுகிறான். ஆடவன் சற்று நிறுத்தினால் பெண்மணி உடனே ஆரம்பித்து விடுகிறாள்!

இப்படி மாற்றி மாற்றி மூச்சு விடாமல் சொல்லிவந்தபோதிலும், அவர்கள் கதை சொன்ன முறையில் ஒரு 'பாணி' இருந்தது. ஓர் 'உத்தி' இருந்தது என்பதைக் கண்டு கொண்டேன். பாண்டிய குமாரிக்கு நிகழ்ந்த சம்பவங்கள், அவளுடைய ஆசாபாசங்கள், அவளுடைய உள்ளத்திலே நிகழ்ந்த போராட்டங்கள் இவற்றையெல்லாம் அந்த மோகினித் தீவின் அழகி கூறி வந்தாள். சோழ நாட்டு இளவரசனைப் பற்றியும் அவனுடைய மனோ நிகழ்ச்சிகள் — செய்த காரியங்கள் இவற்றைப் பற்றியும் அந்த அழகியின் காதலன் சொல்லி வந்தான்.

இப்படிப் பங்கு போட்டுக் கொண்டு அவர்கள் கதை சொன்ன விசித்திர முறை எனக்கு ஒரு பக்கத்தில் வியப்பு அளித்துக் கொண்டு வந்தது. மற்றொரு பக்கத்தில் கதையை மேலே தெரிந்து கொள்ள ஆசை வளர்ந்து வந்தது.

பாண்டியகுமாரி போர்க்களத்துக்குப் போனாள் என்று சொல்லிவிட்டு அந்தப் பெண்மணி கதையை நிறுத்திய போது வழக்கம் போல் ஆடவன் குறுக்கிடாமல் இருந்ததைக் கண்டேன். ஆனால் அந்த இடத்தில் என் மனத்தில் மேலே நடந்ததைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் பொங்கிற்று.

''போர்க்களத்திலே என்ன நடந்தது? யுத்தம் எப்படி முடிந்தது? பாண்டிய குமாரி போரில் வெற்றி பெற்றாளா?'' என்று பரபரப்புடன் கேட்டேன்.

என்னுடைய கேள்வியிலிருந்தும் குரலில் தொனித்த கவலையிலிருந்தும் அந்தத் தம்பதிகள் என்னுடைய அநுதாபம் புவனமோகினியின் பக்கம்தான் என்





பதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர்கள் இருவருடைய முகத்திலும் புன்னகை மலர்ந்தது. அந்தச் சுந்தர புருஷன் தன் நாயகியின் முகவாயைச் சற்றுத் தூக்கிப் பிடித்து நிலா வெளிச்சத்தில் அவளுடைய முகத்தை உற்று நோக்கினான்.

''கண்மணி! பார்த்தாயா? இந்த மனிதர் பாண்டிய குமாரியைப் பற்றி எவ்வளவு கவலை கொண்டுவிட்டார் என்று தெரிகிறதல்லவா? இவருடைய நிலைமையே இப்படி இருக்கும்போது சோழ நாட்டு வீரர்கள் போர்முனையில் புவனமோகினியைப் பார்த்ததும் திணறித் திண்டாடிப் போய்விட்டதில் வியப்பு என்ன?'' என்றான்.

அவன் ஆதரவோடு முகத்தைப் பிடித்திருந்த கையை அந்தப் பெண்ணரசி மெதுவாக அகற்றிவிட்டு, ''ஏதாவது இல்லாததும் பொல்லாததும் சொல்லாதீர்கள்!'' என்றாள். பிறகு என்னைப் பார்த்துச் சொன்னாள்:

''சோழ நாட்டு வீரர்கள் ஒன்றும் திண்டாடிப் போகவில்லை. புவன மோகினிதான் திணறித் திண்டாடிப்



"அடையாள மை கொஞ்சம் தரீங்களா? எங்க பஜனை மடத்தில் ஒரு தடவை சுண்டல் வாங்கினவன் மீண்டும் வாங்காமலிருக்க அடையாளம் வைக்கவேண்டியிருக்கு!"

போனுள். அந்தப் பேதைப் பெண் அது வரையில் போர்க்களம் என்பதையே பார்த்ததில்லை. அவளுக்கு யுத்த தந்திரம் ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. அன்று வரையில் அவள் ஆடல் பாடல்களிலும், வேடிக்கை விளையாட்டுக்களிலும் கோயில் குளங்களுக்குப் போவதிலும் உல்லாசமாகக் காலம் கழித்து வந்தவள்தானே! திடீரென்று யுத்த களத்தில் கொண்டு போய் நிறுத்தியதும் அவளுக்குத் திக்கு திசை புரியவில்லை. பெரியவர்களுடைய புத்திமதியைக் கேட்காமல் வந்து விட்டதைக் குறித்து வருந்தினுள். அவள் போர்க்களத்துக்குச் செல்வதை, மந்திரிகள், பிரதானிகள், மற்ற படைத் தலைவர்கள் யாரும் விரும்பவில்லை. ஒற்றர் தலைவன் தினகரன் 'அவள் போனுல் நிச்சயம் தோல்விதான்!' என்று சபதம் கூறினுன். வயது முதிர்ந்த பெரியவர்கள் 'அரசர் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருக்கையில் பாண்டிய குமாரிக்குப் போர்க்களத்தில் ஏதாவது நேர்ந்து விட்டால் பாண்டிய ராஜ்யம் என்ன ஆவது?' என்று கவலைப் பட்டார்கள். இவ்வளவு பேருடைய கருத்துக்கும் மாருகவே புவனமோகினி யுத்த களத்துக்குப் புறப்பட்டுப் போனுள். அதற்குத் தூண்டுதலாக அவளுடைய இதய அந்தரங்கத்தில் மறைந்து கிடந்த சக்தி என்னவென்பதை உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். சிற்ப மாணவன் வேடம் பூண்டு வந்து அவளை வஞ்சித்து விட்டுச் சென்ற சோழ ராஜ குமாரனைப் போர்க்களத்திலே நேருக்கு நேர் பார்க்கலாம் என்ற ஆசைதான். அந்தப் பாழும் விருப்பமே அவளைப் போர்க்களத்தில் முன்னணியில் கொண்டு போய் நிறுத்தியது. ஒரு பெண் போர்க் கோலம் பூண்டு, பாண்டிய சைன்யத்தில் முன்னணியில் வந்து சண்டைக்கு ஆயத்தமாக நிற்பதைப் பார்த்து விட்டுச் சோழ நாட்டு வீரர்கள் குலுங்கச் சிரித்தார்கள். வஞ்ச நெஞ்சம் கொண்ட சுகுமாரன் சோழர் படைக்குப் பின்னுல் எங்கோ நின்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்....."

இதைக் கேட்டதும் அந்தப் பெண்ணின் நாயகன் ஆத்திரத்துடன் குறுக்கிட்டுப் பேசினுன்: "இவள் சொல்வதை நீங்கள் நம்ப வேண்டாம். சோழ நாட்டு வீரர்கள் பாண்டிய குமாரியைப் பார்த்துச் சிரிக்கவில்லை. அவர்கள் திகைத்துப் போய் நின்ருர்கள். சுகுமாரன் பின்னுல் நின்று தனக்குள் சிரித்துக் கொண்டிருக்கவும் இல்லை. அந்த அபாக்கியசாலி தன்னுடைய இதயத்தைக் கவர்ந்த புவனமோகினியுடன் எதிர்த்து நின்று யுத்தம் செய்யும்படியாகி விட்டதே என்று மனம் நொந்து வேதனைப் பட்டான். ஒருவரும் பாராத தனி இடத்தைத் தேடிச் சென்று கண்ணீர் வடித்தான். முதலில் சிலநாட்கள் அவன் போர்க்களத்தில் முன்னணிக்கே வரவில்லை. பாண்டிய குமாரியை நேருக்கு நேர் சந்திப்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டுதான் அவன் பின்னுல் நின்ருன். ஆனுல் சுகுமாரன் முன்னணிக்கு வரவேண்டிய அவசியம் சீக்கிரத்திலேயே ஏற்பட்டு விட்டது. பாண்டிய குமாரிக்கு யுத்த தந்திரம் ஒன்றும் தெரிந்திருக்கவில்லை என்று இவள் சொன்னுள் அல்லவா? அது என்னவோ உண்மைதான். அதுவரையில் அவள் போர்க் களத்தைப் பார்த்ததில்லை யென்பதும் மெய்தான். ஆனுல் அவ்விதம் அவள் போர்க்களத்தைப் பாராமல் இருந்ததே அவளுக்கு மிக்க உதவியாய்ப் போய்விட்டது. போர் முறைகளைப் பற்றி அவளுடைய அறியாமையே ஒரு மகத்தான யுத்த தந்திரம் ஆகிவிட்டது.

போர் முறைகள் தெரிந்தவர்கள் சாதாரணமாய்ப் போகத் தயங்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் பாண்டிய குமாரி சர்வ சாதாரணமாகப் போகலுற்ருள். பெண்களிடம் சாதாரணமாகக் காண முடியாத நெஞ்சுத் துணிவையும் தைரியத்தையும் அவள் காட்டினுள். அந்தத் துணிச்சலும் தைரியமும் சிறந்த கவசங்களாகி அவளைக் காத்தன. அவள் காட்டிய தீரம் பாண்டிய வீரர்களுக்கு அபரிமிதமான உற்சாகத்தை ஊட்டியது. போர்க்களத்தில் பாண்டிய குமாரி எந்தப் பக்கம் தோன்றினுலும் அந்தப் பக்கத்

கொட்டாவி விடாமல் காரியத்தில் ஈடுபடுங்கள்



காரியாலயத்திலும் சரி, சமூகத்திலும் சரி, முன்னேற்றம் அடைய ஆரோக்கியமும் தெம்பும் தேவை.

சரீரத்தின் வலுவையும் சக்தியையும் நிலை நாட்ட சமசத்துணவு தேவை. ஆனால், பெரும்பான்மையோர் உடலுக்கு எது தேவையோ அதைச் சாப்பிடுவதில்லை. போதாக்குறைக்கு சீதோஷ்ண நிலையும் அயர்ச்சியை அளிக்கிறது.

ஆகவே, சரீரத்திற்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கச் செய்வதெப்படி? சுலபம் தான். தினமும் 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே சாப்பிட்டால் போதும். இதில் 11 வைட்டமின்களும் 5 தாது உப்புக்களும் அடங்கியுள்ளன. இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து விடாமினெட்ஸ் ஃபோர்டே வாங்குங்கள். இந்த மின்னும் சிவப்பு மாத்திரைகளில் ஜீவ சத்து நிறைந்துள்ளது. தினமும் ஒரு மாத்திரை உட்கொண்டால் தெம்புடனும் சுறுசுறுப்புடனும் திகழ முடியும்.

விடாமினெட்ஸ் ஃபோர்டே 'ரோஷ்'

'நாளொன்றுக்கு 15 பைசாவிலும் குறைந்த செலவில் ஆரோக்கியமும் சக்தியும் பெறுங்கள்'

'ரோஷ்' தயாரிப்பு

ஏகபோக விநியோகஸ்தர்கள் :
வால்டாஸ் லிமிடெட்

VT-9544

சிறந்த எதிர்காலமுள்ள தொழிற்சாலைகள் ...


...வெளிப்புறத்திலிருந்து மூலதத்துவங்களின் தாக்குதல்களையும் உட்புறச் செயற்பாட்டின் அழுத்தங்களையும், தகுமுறை தகுமுறையாக எதிர்த்துத் தாங்கி நிற்பதற்கேற்ப நிர்மாணிக்கப்-படும் தொழிற்சாலைகளே. எஸிஸி சிமெண்ட் கொண்டு கட்டப்படும் தொழிற்சாலைகள் இத்தகைய சிறந்த எதிர்காலமுள்ள தொழிற்சாலைகளாகும்.

எஸிஸி சிமெண்ட் நாள் முழுவதும், இடைவிடாமல், எல்லா எஸிஸி தொழிற்சாலைகளிலும் சோதிக்கப்படுகிறது. தவிர, கல்கத்தாவிலும், பம்பாயிலும் உள்ள அரசாங்க சோதனைக் கூடங்களிலும் சாம்பிள்கள் முறையாக சோதிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. எஸிஸி சிமெண்ட் விஷயத்தில், தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆஃப் இந்தியா, 66-எ, ராஷ்ட்ரபதி ரோடு, செகந்திராபாத் அவர்களுடைய இலவசத் தொழில் நுட்பச் சேவையும், நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனையும் உங்களுக்குக் கிடைக்கிறது. உங்கள் தேவைகளுக்கு, அருகாமையிலுள்ள எஸிஸி ஸ்டாக்கிஸ்டையோ, தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிட்., 175/1, மவுண்ட் ரோடு, மதராஸ், அவர்களையோ அணுகுங்கள்.

எஸிஸி தரத்தில் உயர்ந்த தயாரிப்புகளுக்கு நீங்கள் பெறும் உத்தரவாதம்

தி அஸோஸியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்.

தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்.



SISTA'S-CMI-434 TM

தில் உள்ள பாண்டிய வீரர்கள் வீர கோஷத்தை எழுப்பிக் கொண்டு சோழர் படையின் பேரில் பாய்ந்தார்கள். அதற்கு மாறாகச் சோழ வீரர்களோ புவனமோகினியைச் சற்றுத் தூரத்தில் கண்டதுமே வில்லையும், அம்பையும், வாளையும், வேலையும் கிழே போட்டு விட்டு அந்த அழகுத் தெய்வத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பயம் என்பதே அறியாமல் புவன மோகினி அங்குமிங்கும் சஞ்சரிப்பதைப் பார்த்த சோழநாட்டு வீரர்களில் பலர் மதுரை மீனாக்ஷி அம்மனே மானிடப் பெண் உருவம் எடுத்துப் பாண்டிய நாட்டைப் பாதுகாப்பதற்காக வந்திருக் கிறாள் என்று நம்பினார்கள். அவளைத் தூரத்தில் கண்டதும் சிலர் கையெடுத் துக் கும்பிட்டார்கள். சிலர் பயந்து பின் வாங்கி ஓடினார்கள். சிலர் பின் வாங்கி ஓடுவதற்கும் சக்தியில்லாமல் திகைத்துப் போய் நின்றார்கள். அப்படி நின்றவர்களைச் சிறைப் பிடிப்பது பாண் டிய வீரர்களுக்கு மிகவும் எளிதாய்ப் போய் விட்டது. இதையெல்லாம் அறிந்த உத்தம சோழர் மனம் கலங் கினார். சுகுமாரனை அழைத்து வரச் செய்து அவனுடைய கோழைத்தனத் தைக் குறித்து நிந்தனை செய்தார். 'நீயே ஒரு பெண்ணுக்குப் பயந்து பின் னால் சென்று ஒளிந்து கொண்டால் மற்ற வீரர்கள் எப்படிப் போர் செய் வார்கள்?' என்று கேட்டார். 'இப்படி அவமானத்துடன் தோல்வியடைந்து சோழ குலத்துக்கு அழியாத அப கீர்த்தியை உண்டுபண்ணவா என்னைப் பாண்டியன் சிறையிலிருந்து விடுவித்துக் கொண்டு வந்தாய்? அதைக் காட்டி லும் நான் சிறைக்கூடத்திலேயே சாகும் படியாக விட்டிருக்கலாமே?' என்றார். அப்போது சுகுமாரன் தான் போர்க் களத்தின் முன்னணிக்குப் போய்த் தீர வேண்டிய அவசியத்தை உணர்ந்தான். சோர்ந்து போயிருந்த சோழவீரர் களைத் திரட்டி உற்சாகப்படுத்தினான். தான் முன்னால் போர்க்களத்துக்குப் போவதாகவும் தன்னைப் பின் தொடர்ந்து மற்றவர்கள் வரும்படியும் சொன்னான். இளவரசனிடம் அளவில் லாத விசுவாசம் கொண்டிருந்த சோழ நாட்டு வீரர்கள் இனி ஊக்கத்துடன் யுத்தம் செய்வதாக அவனுக்கு வாக் களித்தார்கள். போர்முனையின் முன் னணிக்குப் போய் அவன் அநாவசியமான அபாயத்துக்கு உள்ளாகக் கூடாது என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள்.

அன்றைக்கே சோழர்களின் பக்கம் அதிர்ஷ்டம் திரும்பிவிட்டதாகத் தோன் றியது. சோழ வீரர்கள் உற்சாகத் துடன் பாண்டியர் படையைத் தாக்கு வதற்குப் போன சமயத்தில் பாண்டிய வீரர்கள் சோர்வுற்றிருந்தார்கள். பாண்டிய குமாரி போர்க்களத்தி லிருந்து திடீரென்று மறைந்துவிட்ட தாகவும் தெரிய வந்தது.

எனவே, சோழர் படையின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் பாண்டிய வீரர்கள் பின்வாங்கி ஓடத் தொடங்கினார்கள். அவ்விதம் ஓடியவர் களைத் துரத்தியடிப்பது சோழ வீரர் களுக்கு மிகவும் சுலபமாய்ப் போய் விட்டது. இதன் பேரில் உத்தமசோழ ரும் மற்றவர்களும் சுகுமாரனைக் கொண் டாடினார்கள். ஆனால் அவனுடைய மனத்தில் நிம்மதி ஏற்படவில்லை. பாண்டிய குமாரியின் கதி என்ன ஆயிற்றோ என்று எண்ணி அவன் மனம் கலங்கினான்......'' (தொடரும்)

பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் பிளாஸ்டர் கையோடுள்ள இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர் சந்தேசாயோடு கை குலுக்குகிறார்! இவரது அன் றைய துரதிர்ஷ்டத்தையும் இன்றைய சாதனையையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

61ம் பக்கத்தைப் புரட்டுங்கள்!



பொன்னியின் செல்வன்

பதினைரும் அத்தியாயம்
பூங்குழலி பாய்ந்தாள்!

அமரர் கல்கி

சோழ நாட்டில் பிரயாணம் செய்துள்ளவர்கள் அந்நாட்டின் இயற்கை அமைப்பில் ஒரு விசித்திரத்தைக் கவனித்திருப்பார்கள். சோழ நாட்டைச் சோறுடைய வளநாடாகச் செய்யும் நதிகளில் வெள்ளம் வரும்போது, வெள்ளத்தின் மேல் மட்டம் நதிக்கு இருபுறங்களிலுள்ள பூமி மட்டத்துக்கு மிக்க உயரமாயிருக்கும். இவ்விதம் இருப்பதினுலேதான் நதிகளில் வரும் வெள்ளம் வாய்க்கால்களின் வழியாக வயல்களுக்குப் பாய்வது சாத்தியமாகின்றது.

இந்த நிலையில் வெள்ளத்தை நதிப் படுகையோடு போகச் செய்வதென்பது மிகவும் சிரமமான காரியம் அல்லவா? நதிகளுக்கு இரு பக்கங்களிலும் உயரமான கரைகள் உறுதியாக அமைந்திருக்க வேண்டும். இல்லாவிடில், வெள்ளம் நதியோடு போவதற்குப் பதிலாக, மழை நீர் நாலாபுறமும் பாய்ந்து ஓடுவதுபோல் ஓடிச் சோழ நாட்டைத் தண்ணீர் தேங்கிய சதுப்பு நிலமாக்கி ஒன்றுக்கும் பயனற்றதாகச் செய்து விடும்.

இதை முன்னிட்டு ஆதி காலத்திலிருந்து சோழ மன்னர்கள் காவேரிக்கும் காவேரியின் கிளை நதிகளுக்கும் கரைகள் அமைப்பதில் மிக்க கவனம் செலுத்தினார்கள். கரிகால் வளவன் ஈழ நாட்டிலிருந்து யுத்தத்தில் தோற்றவர்களைச் சிறைப்படுத்தி வந்து காவேரிக்குக் கரையெடுக்கும் வேலையில் அவர்களை ஈடுபடுத்தினன் என்னும் வரலாற்றை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

காவேரியின் கிளை நதிகளில் தண்ணீர் நல்ல மேல்மட்டத்தில் வருவதற்கு உதவியாகவே ஸ்ரீரங்கத்துக்கு ஒரு காத தூரம் கிழக்கே சோழ மன்னர்கள் கல்லணை கட்டினர்கள். அந்த அணையின் மூலம் தண்ணீர் மட்டம் மேலும் உயர்ந்து கிளை நதிகளில் நிறையத் தண்ணீர் பாய்வது சாத்தியமாயிற்று.

இவ்விதம் இயற்கை அமைப்போடு இடைவிடாத செயற்கை முயற்சிகளும் சேர்ந்தே சோழ நாட்டைப் பண்டை நாளிலேயே நீர்வளத்தில் இணையில்லாத நாடாகச் செய்திருந்தன.

சோழ வள நாட்டுக்கு இவ்விதம் இயற்கை விசேஷ உதவிகள் செய்தது போலவே சில சமயம் விபரீதமான அபாயங்களையும் உண்டாக்கி வந்தது.

சோழ மண்டலத்துக் கடற்கரைக்குக் கிழக்கே கடலில் அடிக்கடி சுழிக் காற்றுகளும் புயற் காற்றுகளும் தோன்றுவதுண்டு. இக் காற்றுகள் சில சமயம் கடற்கரையோரமாக வடக்கு நோக்கிச் சென்று கிருஷ்ணை - கோதாவரி முகத்துவாரங்களிலோ அல்லது கலிங்கநாட்டிலோ உள்ளே பிரவேசித்துப் பெருமழை கொட்டச் செய்து கடுமையான சேதங்களை விளைவிக்கும். வேறு சில சமயங்களில் சோழ நாட்டுக்குள்ளேயே நேரடியாகப் பிரவேசித்து மேற்கு நோக்கி விரைந்து செல்லும். கோடிக்கரைக்கும் கொள்ளிடக் கரையின் முகத்துவாரத்துக்கும் மத்தியில் இவ்விதம் சுழிக்காற்று உள் நாட்டில் பிரவேசிப்பது சரித்திரத்தில் பல முறை நடந்திருக்கும் சம்பவம். சில சமயம் அச்சுழிக் காற்றுகள் கோர பயங்கர ரூபங் கொண்டு கடலையே பொங்கி எழச் செய்து கடற்கரையோரமுள்ள ஊர்களையே அழித்துவிடும்!

பூம்புகார் என்று வழங்கிய காவேரிப் பட்டினத்தைக் கடல் கொண்டது வெறுங் கதையன்று; சரித்திர ஆதாரங்களினல் நிரூபிக்கக் கூடிய உண்மை நிகழ்ச்சியேயாகும்.

நதிகளில் வெள்ளம் அதிகமாக வரும் போது சில சமயம் கரைகள் உடைந்து விடுவதும் உண்டு. நதிகளின் நீர்மட்டத்தைக் காட்டிலும் பூமி மட்டம் தாழ்வாயிருக்கும் காரணத்தினுல் உடைப்பு எடுத்ததும் சுற்றுப்புறமெல்லாம் ஒரே தண்ணீர் மயமாகி விடும். நதிகளுக்கு அருகிலுள்ள ஊர்கள் முழுகிப் போய் விடும். அப்போதெல்லாம் ஜனங்கள் உயிர் தப்புவதற்கு அக்கம் பக்கத்திலுள்ள கோயில்கள் உதவியாயிருக்கும்.

விஜயாலய சோழனின் மகன் ஆதித்த சோழன் காவேரி உற்பத்தியாகும்

ஸஹஸ்ய மலையிலிருந்து அந்த மாநதி கடலில் சங்கமமாகும் இடம் வரையில் நூற்றெட்டு ஆலயங்களை எடுப்பித்தான் என்று சரித்திரம் கூறுகிறது. சாதாரண காலங்களில் கோயில்கள் கடவுளை ஆராதிப்பதற்குப் பயன்படுவது போலவே, பெருவெள்ளம் வந்து உடைப்பெடுக்கும் காலத்தில் மக்கள் கோயில் மண்டபங்களின் மீது ஏறி உயிர் தப்புவதற்கும் உபயோகமாயிருக்கட்டும் என்பது ஆதித்த சோழனின் நோக்கமாக இருக்கலாம் அல்லவா?

நதிக் கரைகளில் உடைப்பு உண்டாவதன் காரணமாகச் சில சமயம் நதிகளின் போக்கே மாறிவிடுவதும் உண்டு. அரிசிலாறு, குடமுருட்டி முதலிய நதிகள் இப்படிப் பல முறை இடம் மாறி, திசை மாறியிருக்கின்றன என்பதைப் பழைய வரலாறுகளிலிருந்து அறியலாம்.

* * *

இனி நம்முடைய வரலாறு நடந்த காலத்துக்கு வருவோம். இலங்கைத் தீவிலிருந்து சோழ நாட்டுக்குப் பார்த்திபேந்திரனுடைய கப்பல் வந்து கொண்டிருந்த போது உண்டான சுழிக் காற்று, வந்தியத்தேவனை முன்னிட்டு, இளவரசர் அருள்மொழிவர்மரைக் கடலில் குதிக்கச் செய்த பிறகு, கடலோரமாகவே சென்று கலிங்க நாடு அடைந்து மறைந்தது.

ஆனால் அருள்மொழிவர்மர் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் தங்கியிருந்த போது உண்டான சுழிக் காற்று சோழ நாட்டுக்குள்ளே புகுந்து பற்பல அட்டகாசங்களைச் செய்து கொண்டு மேற்கு நோக்கிச் சென்றது. ஒரே இரவில் அது காவேரியின் இருபுறங்களிலும் தன் லீலைகளை நடத்திக் கொண்டு போய் மறு நாள் கொங்கு நாட்டை அடைந்து தேய்ந்து மறைந்தது. அது பிரயாணம் செய்த இடங்களிலெல்லாம் பற்பல சேதங்களை விளைவித்தது மட்டுமன்று; அதைத் தொடர்ந்து பெருமழை கொட்டும்படியாகவும் செய்துகொண்டு போயிற்று. மேற்கே போகப் போக மழை அதிகமாகப் பெய்தது. ஆகவே, காவேரியிலும் கொள்ளிடத்திலும் அவற்றிலிருந்து பிரிந்த கிளை நதிகளிலும் மறு நாள் முதல் வெள்ளம் அபரிமிதமாக வந்தது. பல நதிகள் கரைகளை உடைத்துக் கொண்டன. மழையினாலும் நதிகளின் உடைப்பினாலும் சோழ நாடெங்கும் வெள்ளக்காடாகி விட்டது.

ஆனால் இவ்வளவு இயற்கை விபரீதங்களும் சோழ நாட்டு மக்களைப் பீதி கொண்டு செயலிழந்துவிடும்படி செய்து விடவில்லை. இவை அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகளாதலால், அம்மாதிரி நிலைமைகளில் என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் அறிந்திருந்தார்கள். அப்போதைக்குக் கோயில் மண்டபங்களிலோ வேறு உயரமான இடங்களிலோ ஏறிக் கொண்டு உயிர் தப்புவார்கள். வெள்ளம் எவ்வளவு அவசரமாக வந்ததோ, அவ்வளவு துரிதமாக வடிந்தும்



போய்விடும். பிறகு வழக்கம் போல் அவரவர்களின் வேலையில் ஈடுபடுவார்கள். விடுகளை இழந்தவர்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் உதவியைக் கொண்டு உடனே வீடு கட்டிக் கொள்வார்கள். "ஐயோ! போய் விட்டதே!" என்று தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட மாட்டார்கள்.

சோர்வு, சோம்பல் என்பதையே அறியாத தன்னம்பிக்கை கொண்ட மக்கள் அக் காலத்தில் சோழ நாட்டில் வாழ்ந்திருந்தார்கள். இல்லாவிடில் இன்றைக்கும் உலகம் கண்டு வியக்கும்படியான அற்புதங்களை அவர்களால் சாதித்திருக்க முடியாது அல்லவா?

* * *

வானதி கோயில் மண்டபத்தின் மீது ஏறாமல் தவறித் தண்ணீரில் விழுந்த



தும் முதலில் மண்டபத்தின் மேல் ஏறியிருந்தவர்கள் கவலை அடைந்தார்கள். ஆனால் உடனடியாக அக்கவலை மாறியது. வானதி ஜோதிடர் வீட்டுக் கூரை மீது தொத்திக் கொண்டதைப் பார்த்து அவர்களுக்குத் தைரியம் உண்டாயிற்று. இளையபிராட்டி ஓரளவு குதூகலமே அடைந்தாள். வானதியை அபாயகரமான நிலைமைகளில் சிக்க வைப்பதிலும் அவள் எப்படிச் சமாளிக்கிறாள் என்று பார்ப்பதிலும் குந்தவை தேவிக்கு எப்போதும் உற்சாகம் இருந்தது. வீராதி வீரனை தன் தம்பியை மணந்து கொள்ளப் போகிறவள் நெஞ்சுத் துணிவுள்ள தீர மங்கையாக வேண்டும் என்பதில் இளைய பிராட்டிக்குச் சிரத்தை இருந்தது. அத்தகைய தீரத்தை வானதியின் உள்ளத்தில் வளர்க்கும் பொருட்டுக் குந்தவை பல உபாயங்களையும் தந்திரங்களையும் கையாண்டு வந்தாள். அந்த உபாயங்கள் நல்ல பலன் அளித்திருக்கின்றன என்ற நம்பிக்கையும் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

சில காலமாக வானதி மூர்ச்சையடைந்து விழும் வழக்கத்தை விட்டு விட்டிருந்தாள் அல்லவா?

இப்போது குந்தவையின் தந்திரம் ஒன்றுமின்றித் தெய்வாதீனமாகவே வானதியின் தீரத்தைச் சோதிக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. சுற்றிலும் வெள்ளம் சூழ்ந்திருக்க, ஓர் ஓட்டுக் கூரையின் மேல் வானதி தொத்திக் கொண்டிருந்தாள். அவள் பயப்படாதிருப்பாளா? ஜோதிடரின் சீடன் படகு கொண்டு வந்து அவளைத் தப்புவிக்கும் வரையில் தைரியத்தைக் கைவிடாது இருப்பாளா? — ஆம்; இருப்பாள்! சந்தேகமில்லை! இத்தனை காலமும் அளித்து வந்த பயிற்சி இச்சமயம் பயன்படாமலா போய் விடும்?

இவ்விதம் குந்தவை எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது, ஆழ்வார்க்கடியான், "தாயே! இது என்ன? கூரை நகர்வதாகத்தோன்றுகிறதே?" என்றான்.

"உன் கண்ணிலே ஏதோ கோளாறு! வெள்ளம் நகர்ந்து செல்கிறது; கூரை நகர்வதாகத் தோன்றுகிறது!" என்றாள் குந்தவை. இப்படிச் சொல்லும்போதே அவளுடைய உள்ளத்திலும் சந்தேகம் உதித்துவிட்டது. அதன் அறிகுறி முகத்திலும் காணப்பட்டது.

"அம்மா! நன்றாய்ப் பாருங்கள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஐயோ! இது என்ன விபரீதம்?" என்றாள் இளையபிராட்டி.

"ஜோதிடரே! உம்முடைய சீடன் சீக்கிரம் படகுடன் வருவானா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"போதும்! போதும்! ஜோதிடரையும் அவருடைய சீடனையும் நம்பியது போதும்! திருமலை! உன்னால் வானதியைக் காப்பாற்ற முடியுமா என்று பார்! இல்லாவிட்டால், நானே வெள்ளத்தில் குதிக்க வேண்டியதுதான்! வானதிக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால், அப்புறம் நான் ஒருகணமும் உயிர் வைத்திருக்க மாட்டேன்!" என்றாள்.

"தாயே! அபாயம் நேரும் காலத்திலேதான் நிதானத்தை இழக்கக் கூடாது. இது தங்களுக்குத் தெரியாதது அல்ல. கொடும்பாளூர் இளவரசிக்கு உதவி செய்வதற்காக என் உயிரைக் கொடுக்கவும் சித்தமாயிருக்கிறேன். அதனால் பயன் ஏற்படவேண்டுமே? படகு இல்லாமல் நான் மட்டும் நீந்திச் சென்றால் அந்தக் கூரையில் போய் நானும் தொத்தி ஏறிக்கொள்ளலாம். கொடும்பாளூர் இளவரசியைத் தாங்கும் கூரை என்னையும் சேர்த்துக் கொள்ளுமா? அல்லது இரண்டு பேரையும் வெள்ளத்தில் அமுக்கிவிட்டுக் கூரையும் கீழே போய் விடுமா? இதைப் பற்றிச் சிறிது யோசிக்க வேண்டும்....."

பூங்குழலியின் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு அவளை இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

"இந்த வீர வைஷ்ணவர் யோசித்து முடிப்பதற்குள் கொடும்பாளூர் இளவரசி வாழ்க்கை முடிந்து விடும்!" என்றாள் பூங்குழலி.

"அப்படி நேர்ந்தால் இந்த ஓடக்காரப் பெண் சந்தோஷப்படுவாள்!" என்று ஆழ்வார்க்கடியான் கூறியதும், பூங்குழலியின் முகத்தில் ஆத்திரம் கொதித்தது.

திருமலை மேலும் தொடர்ந்து கூறினான்: "ஆனால், தேவி! அவ்விதம் ஒன்றும் நேரப் போவதில்லை! ஆலிலை மேல் பள்ளிகொண்டு அகிலமெல்லாம் காப்பாற்றும் திருமால் வானதியையும் காப்பாற்றுவார். மச்ச கூர்ம வராக அவதாரம் எடுத்து இந்தப் பூவுலகைக் காப்பாற்றிய ஸ்ரீமந் நாராயணன் கொடும்பாளூர் இளவரசியையும் காப்பாற்றுவார்!.... அதோ பாருங்கள்! ஜோதிடர் சீடன் படகுடன் வருகிறான்!"


ஆழ்வார்க்கடியான் சுட்டிக்காட்டிய திசையில் உண்மையாக ஒரு படகு வந்து கொண்டிருந்தது. அப்படகு வெள்ளத்தின் வேகத்தை எதிர்த்து அவர்கள் இருந்த கோயில் மண்டபத்தை நோக்கி மெதுவாக வந்து கொண்டிருந்தது.

வானதி ஏறியிருந்த கூரையோ வெள்ளத்தோடு போய்க் கொண்டிருந்தது.

பாலைவிடப் பாட்டில் புதிது!

பழைய பாட்டிலில் புது பால் நாம் அறிந்த ஒன்று. ஆனால் இப் படத்தில் பாலை அருந்திச் சுவைக்கும் பாலைவிட பாட்டில் புதியது! மேற்கு ஜெர்மனியில் ஒரு பிளாஸ்டிக் பாட்டில் கம்பெனி, புதுமையான இயந்திரம் ஒன்றைத் தயாரித்திருக்கிறது. பாலை அடைப்பதற்குச் சில விநாடிகளுக்கு முன்னதாகப் புது பிளாஸ்டிக் பாட்டிலை இயந்திரம் தயாரித்து, அதற்குள் பாலை ஊற்றி அடைக்கிறது.

(யூ. பி. எஸ்.)



படகு இங்கே வந்து இவர்களை ஏற்றிக்கொண்டு போவதற்கு வெகு நேரம் ஆகிவிடும். அதற்குள் வானதி அதிக தூரம் போய்விடுவாள். கண்ணுக்கு மறைந்தாலும் மறைந்து விடுவாள்.

இதை யெல்லாம் எண்ணி மண்டபத்தின் மேல் நின்றவர்கள் படகில் வந்த ஜோதிடர் சீடனைப் பார்த்து உரத்துக் கத்தினார்கள்; சமிக்ஞைகளும் செய்து பார்த்தார்கள். தன்னைச் சீக்கிரம் வரச் சொல்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு அவன் படகை விரைவாகச் செலுத்தி வர முயன்றான்.

பூங்குழலி அப்போது குந்தவையைப் பார்த்து, ''தேவி! எனக்கு அனுமதி கொடுங்கள்! நான் நீந்திப் போய்ப் படகை வழிமறித்து அழைத்துச் சென்று கொடும்பாளூர் இளவரசியை ஏற்றி வருகிறேன்!'' என்றாள்.

குந்தவை சிறிது தயங்கினாள். பூங்குழலி கையைக் கொடுக்கப் போய்த்தான் வானதி வெள்ளத்தில் விழுந்தாள் என்பது அவளுக்கு நினைவு இருந்தது.

''தேவி! என்னை நம்புங்கள். என்னுடைய அஜாக்கிரதையினால்தான் இளவரசி வெள்ளத்தில் விழ்ந்தாள். ஆகையால் அவரை மீட்பது என்னுடைய கடமை!'' என்று பூங்குழலி கூறினாள்.

''பெண்ணே! உன்னை நான் நம்புகிறேன். ஆனால் வானதியைத்தான் நம்பவில்லை!'' என்றாள் குந்தவை.

''ஆகா! நான் இருக்கும் படகில் ஒருவேளை ஏற மறுத்துவிடுவார் என்கிறீர்களா? அப்படியானால் அவரை ஏற்றிவிட்டு நான் இறங்கிக் கொள்வேன்!'' என்று சொல்லிக் கொண்டே பூங்குழலி வெள்ளத்தில் பாய்ந்தாள். படகை நோக்கி விரைந்து சென்றாள்.

குந்தவை ஜோதிடரைப் பார்த்து, ''ஐயா! ஜோதிடரே! உம்முடைய சாஸ்திரத்தில் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தேன். இன்றைக்கு அந்த நம்பிக்கையை இழந்துவிட்டேன்!'' என்றாள்.

''ஆனால் எனக்கு இன்றைக்குத்தான் பூரண நம்பிக்கை ஏற்பட்டது தேவி! கொடும்பாளூர் இளவரசியின் ஜாதகப் பிரகாரம் அவருக்கு இன்று பெரிய கண்டம் வரவேண்டும். பழுவேட்டரையர் மூலம் அது வருமோ என்று நினைத்தேன். அப்படி வராமற் போகவே ஆச்சரியமடைந்தேன். வேறு விதமாகக் கண்டம் வந்தது. இளவரசி இந்தக் கண்டத்துக்குத் தப்பிப் பிழைப்பார்! ஆகா! அவருடைய அபூர்வமான கைரேகைகள்! அவர் விஷயமாக நான் சொல்லியிருப்பதெல்லாம் நிறைவேறும்! அதைப் பற்றிச் சந்தேகமில்லை!'' என்றார்.

''அழகாய்த்தானிருக்கிறது. அது எப்படி நிறைவேறும்? வானதி இந்தக் கண்டத்துக்குத் தப்பிப் பிழைத்தாலும் உம் ஜோசியம் நிறைவேறப் போவதில்லை. சற்று முன் உம்முடைய வீட்டில் அந்தப் பெண் செய்த சபதத்தை நீர் கேட்கவில்லையா?'' என்றாள் குந்தவை.

''யார் என்ன சபதம் செய்தாலும், என் ஜோசியம் நிறைவேறியே தீரும். அப்படி நிறைவேறாவிட்டால் என்னிடமுள்ள ஜோதிட ஏடுகளை யெல்லாம் காவேரி நதியில் எறிந்து விடுகிறேன்! இது என் சபதம்!'' என்றார் ஜோதிடர்.

அப்போது ஆழ்வார்க்கடியான், ''ஜோதிடரே! உமது ஏடுகளை நீரே எறியும் வரையில் காவேரி மாதா காத்திருக்கவில்லை. அவளே கொண்டுபோய் விட்டாள்!'' என்றான்.

ஜோதிடர் அவன் கூறியதன் உண்மையை உணர்ந்து திகைத்து நின்றார். ''ஆயினும் என் ஜோதிடம் பலிக்காமற் போகாது!'' என்று தம் வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார்.

பதினேழாம் அத்தியாயம்

யானை எறிந்தது!

சென்ற அத்தியாயங்களில் கூறிய சம்பவங்கள் நடந்த அன்றைக்கு முதல் நாள் நாகைப்பட்டின நகர மாந்தரின் விருந்தினராக இளவரசர் அருள்மொழி வர்மரை நாம் விட்டு விட்டு வந்தோம். விருந்தெல்லாம் முடிந்த பிறகு அலங்கரித்த யானை மீது ஏறி இளவரசர் புறப்பட்டார். எண்ணற்ற மக்கள் அவரைத் தொடர்ந்து தஞ்சைக்கு வருவோம் என்று கிளம்பினார்கள். அன்றிரவு இளவரசரும் அவருடன் வந்த ஜனங்களும் திரு ஆரூர் வந்து சேர்ந்தார்கள்.

திரு ஆரூர் மக்கள் இளவரசர் வருகையை முன்னதாக அறிந்திருந்தபடியால், அவருக்கு இராஜரீக வரவேற்பு அளித்து இராஜோபசாரங்கள் செய்தார்கள். பழம் பெரும் பதியான திரு ஆரூரில் குணவாசலிலிருந்து குடவாசல் வரையில் மக்கள் திரண்டு நின்றார்கள். நாலு இராஜ வீதிகளிலும் எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி ஜனக் கூட்டம் நிறைந்திருந்தது. வீடுகளின் முகப்புக்கள் எல்லாம் தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. திரு ஆரூர்ச் சோழ மாளிகையையும் அதிகாரிகள் அலங்கரித்திருந்தார்கள். இளவரசருக்கு மட்டுமின்றி அவருடன் வரும் திரளான மக்களுக்கும் விருந்தளிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முதல் நாளிரவு திரு ஆரூர் வழியாகவும் கொடும் புயல் சென்றிருந்தது. ஆனால் இளவரசர் வருகையில் உண்டான குதூகல கோலாகலப் புயல் முதல் நாள் அடித்த புயலை அடியோடு மறக்கச் செய்து விட்டது. வீதிகளிலெல்லாம் வாத்திய முழக்கங்களும் ஆடல் பாடல்களும் குரவைக் கூத்துக்களும் பொம்மையாட்டங்களும் வீர முழக்கங்களுடன் கூடிய கத்தி விளையாட்டு — கழி விளையாட்டுக்களும் நடந்து கொண்டிருந்தன.

தஞ்சாவூர்ச் சோழ குலத்தினர் தில்லையம்பலத்தில் ஆடும் நடராஜப் பெருமானின் கோயிலுக்கு அடுத்தபடியாகத் திரு ஆரூரில் உள்ள தியாகராஜப் பெருமானின் ஆலயத்திடம் விசேஷ பக்தி கொண்டு, ஏராளமான மானியங்கள் அளித்திருந்தார்கள். ஆனால் இளவரசர் அருள்மொழி வர்மர் மட்டும் அதுவரையில் திரு ஆரூர் வந்ததில்லை. ஆகையால் கோயிலுக்கு இளவரசர் அவசியம் வர வேண்டுமென்று ஆலயத்தார் வற்புறுத்தினார்கள். இளவரசரும் கோயிலுக்குப் போனார். பல காரணங்களினால் அவருடைய உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தபடியால் இறைவனுடைய திருக்கோலங்களில் அவருடைய மனம் பூரணமாக ஈடுபட முடியவில்லை. அர்ச்சனை ஆராதனைகள் முடிந்து இறைவனுடைய பிரசாதங்களும் பெற்றுத் திரும்பும் சமயத்தில், ஆலயத்தார்களைப் பார்த்து இளவரசர், ''இந்தக் கோயிலின் இறைவருக்குத் தியாகராஜர் என்று ஏன் பெயர் வந்தது?'' என்று கேட்டார்.

தேவர்களுக்குள் மகா தேவரும் மூவர்களில் முதல்வருமான சிவபெருமான் மூன்று உலகங்களிலும் வாழும் உயிர்கள் உய்யும்பொருட்டுச் செய்த தியாகங்களை ஆலயத்தார் எடுத்துச் சொன்னார்கள். மூன்று உலகங்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல பெருமான் தம்முடைய பக்தர்களுக்கு அருள் புரியுமாறு மேற்கொண்ட கஷ்டங்களைப் பற்றிக் கூறினார்கள். உயிர்கள் உய்யும் பொருட்டுத் தவக்கோலம் பூண்டு மயானத்தில் தவம் புரிந்ததைப் பற்றிச் சொன்னார்கள். அந்தத் தவத்தையும் கைவிட்டுத் தேவர்களின் நன்மைக்காக உமையை மணந்தது பற்றிக் கூறினார்கள். எல்லா உலகங்களுக்கும் இறைவர் பிக்ஷாடன மூர்த்தியாகத் தோன்றிப் பிச்சை எடுத்த வரலாற்றைக் கூறினார்கள். தில்லை அம்பலத்தில் வந்து ஆடியது பற்றிச் சொன்னார்கள். பிட்டுக்கு மண் சுமந்து பாண்டிய மன்னனிடம் பிரம்பினால் அடிபட்டது பற்றியும் கூறினார்கள்.


அத்தகைய தியாகராஜப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திரு ஆரூரில் பழைய காலத்தில் அருள்மொழிவர்மரின் முன்னோர்கள் வசித்து வந்ததையும், மனுநீதிச் சோழன் பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தன் அருமை மகனையே தியாகம் செய்த அற்புதத்தையும் நினைவூட்டினார்கள்.

இவையெல்லாம் அருள்மொழி வர்மரின் உள்ளத்தில் நன்கு பதிந்தன. இதுகாறும் புத்த பகவானுடைய தியாகத்தை நினைந்து நினைந்து வியந்து கொண்டிருந்த இளவரசர், தேவ தேவரான சிவபெருமானைத் தியாக மூர்த்தியாகச் சித்திரிக்கும் வரலாறுகளைப்பற்றி எண்ணி எண்ணி வியக்கத் தொடங்கினார். மேலைத் தேசங்களிலே கடவுளின் திருப் புதல்வராகப் போற்றப்

படும் அவதார புருஷர் மக்களின் நலத்துக்காகச் சிலுவையில் அறையப்பட்டு மாண்டார் என்ற வரலாறும் அவர் காதுக்கு எட்டியிருந்தது. இவற்றையெல்லாம் பற்றிச் சிந்திக்க, சிந்திக்க, மனிதனுக்குத் தெய்வத் தன்மை அளிக்கக்கூடியது தியாகந்தான் என்னும் எண்ணம் அவர் மனத்தில் வேர் ஊன்றியது. ஆதலின் அவரைச் சூழ்ந்துள்ள மக்கள் அனைவரும் தம்மீதுள்ள அன்பின் மிகுதியினால் தம்மைத் தஞ்சை சிங்காதனத்தில் அமர்த்திப் பட்டம் சூட்ட விரும்புவது பற்றி அவர் மனம் அளவில்லாத வேதனை அடைந்தது. இவர்களுடைய அன்புச் சிறையிலிருந்து தப்புவது எப்படி என்றும் தீவிரமாக யோசிக்கலானார்.

ஆலய வழிபாட்டுக்குப் பிறகு திருவாரூர் மக்கள் இளவரசருக்குப் பெரு விருந்து அளித்தார்கள். அவரை உபசரிக்கும் பொருட்டுப் பற்பல கேளிக்கைகளை நடத்தினார்கள். அவற்றிலெல்லாம் இளவரசரின் உள்ளம் ஈடுபடாவிட்டாலும் வெளிப்படையாக உற்சாகம் காட்டி ஏற்றுக் கொண்டார்.

பின்னர், ஏறக்குறைய நடுநிசியில் இளவரசர் சோழ மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அங்கே சில விபரீதமான செய்திகள் காத்திருந்தன. தஞ்சைக்கு மேற்கே பலமான மழை பெய்தபடியால் காவேரியிலும் கொள்ளிடத்திலும் அவற்றின் கிளை நதிகளிலும் பெரு வெள்ளம் வந்து பல இடங்களில் கரை உடைத்துக் கொண்டதாகவும், ஒரே வெள்ளக்காடாக இருப்பதால் மேற்கொண்டு பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்துவது கஷ்டமாயிருக்கும் என்றும் சொன்னார்கள். இரண்டு நாட்கள் திரு ஆரூரில் தங்கி வெள்ளம் வடிந்த பிறகு புறப்படுவது உசிதம் என்றும் தெரிவித்தார்கள். இதற்கு இளவரசர் இஷ்டப்படவில்லை. தஞ்சையை உடனே அடைய வேண்டுமென்ற பரபரப்பு அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. நதி உடைப்புக்களும் வெள்ளமும் அவருடைய அந்த ஆர்வத்தைத் தடை செய்து விடக்கூடுமா, என்ன? ஆம்; இத்தனை ஜனங்களும் பரிவாரங்களும் புடைசூழப் போவதாயிருந்தால் பிரயாணம் தடைப்படத்தான் செய்யும். தாம் மட்டும் தனியே யானை மீது ஏறிச் சென்றால் பிரயாணம் தடைப்பட வேண்டிய அவசியமில்லை. யானைக்கு அண்டாத ஆழம் உடைய நதி எதுவும் தஞ்சைக்குப் போகும் வழியில் இல்லை. அப்படியிருந்தாலும் இளவரசருக்கு அதைப் பற்றிக் கவலை கிடையாது. தண்ணீரிடத்தில் அவருக்கு எப்போதும் அச்சம் ஏற்பட்டதில்லை. பொன்னி நதி அவருடைய அன்னைக்கு மேலான அன்புடையவள் ஆயிற்றே? சின்னஞ் சிறு குழந்தைப் பிராயத்தில் தான் முழுகிப் போகாமல் காப்பாற்றிய காவேரித் தாய் இப்போது தன்னைக் காப்பாற்ற மாட்டாளா?



பார்த்தாலே தெரிகிறது ரொம்பக் கவலையோடு இருக்கிறார் என்று. இத்தனை கவலையோடும் வருத்தத்தோடும் இருப்பவர் யார்?

அணுகுண்டைக் கண்டுபிடித்த விஞ்ஞானி ஓப்பன்ஹீமர்!

''லுக்'' — ''பாபு''

இந்தப் பெருந் திரளான மக்களிடமிருந்து எப்படித் தப்பித்துச் செல்வது என்பதுதான் கேள்வி. அயோத்தியின் மக்களிடமிருந்து ராமர் இரவுக்கிரவே தப்பிச் சென்றது பொன்னியின் செல்வருக்கு நினைவு வந்தது. அவ்விதமே அவரும் இரவில் ஜனங்கள் தூங்கும் சமயத்தில் போய் விட்டால் என்ன? எல்லாவற்றுக்கும் யானைப் பாகனிடம் எந்த நேரத்திலும் புறப்பட ஆயத்தமாயிருக்கும்படி சொல்லிவைப்பது நல்லது.

இந்த எண்ணம் தோன்றியதும் யானைப் பாகனை அழைத்து வரும்படி அரண்மனைச் சேவகனுக்கு இளவரசர் கட்டளையிட்டார். சேவகன் வீதிக்குச் சென்று பார்த்து விட்டு உடனே திரும்பி வந்தான். யானைமட்டும் வாசலில் கட்டியிருக்கிறதென்றும் யானைப் பாகனைக் காணும் என்றும் தெரிவித்தான்.

''ஒருவேளை வீதிகளில் நடைபெறும் ஆடல் பாடல் களியாட்டங்களைப் பார்க்கப் போயிருப்பான். அவன் திரும்பி வந்ததும் அழைத்து வா! அல்லது யாரையாவது சிலரை அனுப்பித் தேடிப் பார்க்கச் சொல்!'' என்று இளவரசர் கட்டளையிட்டார்.

''ஆகட்டும், அரசே! படகோட்டி முருகையன் என்பவன் ஒருவன் மாளி

கையின் வாசலில் வந்து காத்திருக்கிறான். தங்களை அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று அவன் பிடிவாதம் பிடிக்கிறான்!'' என்றான் சேவகன்.

படகோட்டி முருகையனை இத்தனை நேரம் மறந்திருந்தது பற்றி இளவரசர் பச்சாதாபம் கொண்டார். தாம் இரகசியமாகத் தப்பிச் செல்வதற்கு அவன் ஒருவேளை உதவியா யிருந்தாலும் இருப்பான். அவனை உடனே தம்மிடம் அனுப்பும்படி அரண்மனைச் சேவகனுக்குக் கட்டளையிட்டார்.

முருகையன் இளவரசரிடம் வந்ததும் அவருடைய காலில் விழுந்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். இந்த மூட பக்தனைச் சமாதானப்படுத்துவதும் அவனிடம் விஷயங்களைக் கிரகிப்பதும் சிரமமான காரியம்தான். ஆயினும் செய்ய வேண்டும்.

முருகய்யன் தனது துயரத்தின் காரணத்தைக்கூறினான். அதன் விவரமாவது:

முருகய்யன் நாகைப் பட்டினத்திலேயே தன் மனைவியிடமிருந்து பிரிந்து விட்டான். திரு ஆரூர் வந்து சேர்ந்த பிறகு அவளும் அங்கு வந்திருக்கிறாளா என்று பார்ப்பதற்காக ஜனக் கூட்டத்தினிடையே அலைந்து சுற்றினான். ஒரு ஜாம நேரம் தேடிய பிறகு ராஜ வீதியிலிருந்து பிரிந்து சென்ற ஒரு சந்தின் முனையில் அவன் மனைவியும் இளவரசர் ஏறி வந்த யானையைச் செலுத்திய யானைப் பாகனும் போவதைக் கண்டான். அவர்கள் சந்தில் புகுந்ததும் மிக வேகமாக நடந்து சென்றார்கள். முருகய்யனும் தொடர்ந்து போனான். கடைசியாக ஒரு வீட்டின் வாசலில் நின்றார்கள். அங்கே இன்னொரு மனிதன் அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்ததாகத் தோன்றியது. அவனும் இவர்களுடன் சேர்ந்து கொண்டான். பிறகு மூன்று பேரும் சேர்ந்து போனார்கள். முருகய்யனுக்கு ஏதேதோ சந்தேகங்கள் உதித்தன. தன் மனைவியின் ஒழுக்கத்தைப் பற்றியே ஐயம் கொண்டான். உண்மையைக் கண்டுபிடிக்க ஆத்திரம் அடைந்தான். ஆகையால் அவர்களைப் போய்ப் பிடித்து விடாமல் பின்னாலேயே போனான். அவர்கள் ஊரைத் தாண்டி வாய்க்கால்—வயல் வரப்புகள் வழியாகச் சென்று கடைசியாக ஒரு மயானத்தை அடைந்தார்கள். முருகய்யனுடைய உள்ளம் பயங்கரத்தை அடைந்தது. ஆயினும் அவன் விடாமல் சென்று மயானத்தில் இருந்த ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டான். ராக்கம்மாளுடனும் யானைப் பாகனுடனும் வழியில் சேர்ந்து கொண்ட மனிதன், மயானத்தில் சாம்பலைப் பூசிக் கொண்டு ஏதேதோ பயங்கரமான மந்திரங்களை உச்சரித்தான். பிறகு யானைப் பாகனைப் பார்த்து, ''நாளைக் காலையில் உன் உயிருக்கு ஆபத்து வரப் போகிறது! ஜாக்கிரதையா யிருந்து பிழை!'' என்றான். யானைப் பாகன் கதி கலக்கத்துடன் ''என்ன ஆபத்து? எவ்விதம் வரும்? தெரிந்தால் அல்லவோ பிழைக்கலாம்?'' என்றான். மந்திரவாதி, ''யானைக்குத் திடீர் என்று மதம் பிடிக்கும்! நீ அருகில் நெருங்கியதும் உன்னைக் கீழே தள்ளி விட்டு ஓடும். உன்னால்தான் யானைக்கு மதம் பிடித்தது என்று ஜனங்கள் எண்ணுவார்கள். உன் கையிலுள்ள அங்குசத்தைப் பிடுங்கி உன்னைக் கொன்று விடுவார்கள்'' என்றான் மந்திரவாதி. ''ஐயையோ! தப்புவதற்கு வழி என்ன?'' என்று யானைப் பாகன் கேட்டான். ''நாளைக் காலையில் யானையிடம் நெருங்காமலிருந்து விடு'' என்றான் மந்திரவாதி. ''அது எப்படி முடியும்? பின்னால் ராஜ தண்டனைக்கு உள்ளாக நேரிடுமே?'' என்று யானைப் பாகன் அலறினான். ''அப்படியானால் என் வீட்டுக்கு வா! மந்திரித்த கவசம் தருகிறேன். அதை அணிந்து கொண்டு போ! கையில் அங்குசத்தைக் கொண்டு போகாதே!'' என்றான் மந்திரவாதி. ''அப்படியே ஆகட்டும் ஐயா! இளவரசருக்கு ஏதேனும் ஆபத்து நேருமா?'' என்று யானைப் பாகன் கேட்டான். ''அது எப்படிச் சொல்ல முடியும்? இளவரசர் வந்து கேட்டால் அல்லவோ சொல்லலாம்?'' என்றான் மந்திரவாதி.

முருகய்யன் அதற்குமேல் அங்கே நிற்க மனமில்லாமல் ஓடி வந்துவிட்டான். நாளைக் காலையில் யானைக்கு மதம் பிடிக்கப் போகும் செய்தியை இளவரசரிடம் சொல்லி எச்சரிப்பதற்காகவே முக்கியமாக ஓடி வந்தான்...

இதையெல்லாம் கூறிவிட்டு முருகய்யன் மீண்டும் மீண்டும் தேம்பித் தேம்பி அழுதான்.

''அப்பனே! ஏன் அழுகிறாய்? நீதான் சமயத்தில் வந்து எச்சரிக்கை செய்து விட்டாயே? இனி நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

''ஐயா! இதிலெல்லாம் என் மனைவி சம்பந்தப்படுவது பற்றித்தான் வருந்துகிறேன். ராக்கம்மாளைப் பற்றி என்ன நினைப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. அவளைப் பற்றிய பழைய சந்தேகங்கள் திரும்பி வருகின்றன!'' என்றான் முருகய்யன்.

''அவனை நான் திருத்தி விடுகிறேன். நீ கவலைப்படாதே! உடனே, திரும்பிப் போய் யானைப்பாகனை எப்படியாவது தேடிப் பிடித்து அழைத்துக் கொண்டு வா!'' என்றார் இளவரசர்.

படகோட்டி முருகய்யன் போனபிறகு பொன்னியின் செல்வர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார். முருகய்யன் கண்டது கேட்டது இவற்றின் பொருள் என்னவாயிருக்கும் என்று ஊகத்தினால் அறிய முயன்றார். பழுவேட்டரையர்களின் உத்தேசம், பாண்டிய நாட்டுச் சதிகாரர்களின் முயற்சி — இவற்றைக் குறித்து இளைய பிராட்டி கூறியதை இளவரசர் நினைவுபடுத்திக் கொண்டார். அந்தச் சதிகாரர்களின் முயற்சியில் இதுவும் ஒன்றாயிருக்கலாம். அல்லது வெறும் அசட்டுத்தனமாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் காலையில் தாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி ஒரு முடிவுக்கு வந்தார். பிறகு, நிம்மதியாக நித்திரையில் ஆழ்ந்தார்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து பிரயாணத்துக்கு ஆயத்தமானார். மாளிகை வாசலுக்கு வந்தார். அங்கே கட்டியிருந்த யானை இளவரசரைப் பார்த்ததும் ஆதரவோடு துதிக்கையை நீட்டி அவரைத் தடவிக் கொடுத்துக் கொஞ்சியது. ''யானைக்கு மதம் பிடிக்கும்'' என்று மந்திரவாதி கூறியதாக முருகய்யன் சொன்னது இளவரசருக்கு நினைவு வந்தது. மதம் பிடிக்கும் என்பதற்கு அறிகுறி எதுவும் இல்லை.

''யானைப் பாகன் எங்கே?'' என்று இளவரசர் உரத்த குரலில் கேட்டார். உடனே பல குரல்கள் ''யானைப் பாகன் எங்கே?'' என்று எதிரொலி செய்தன.

இளவரசரைப் போலவே அதிகாலையில் பிரயாணத்துக்கு ஆயத்தமாக ஜனங்கள் திரண்டு வந்திருந்தார்கள். அவர்களிடையே அகப்பட்டுக் கொண்டு முன்னால் வர முடியாமல் திணறிக் கொண்டிருந்தமுருகய்யனைப்பார்த்தார். அவனை நோக்கிச் சமிக்ஞை செய்யவே ஜனங்கள் அவனுக்கு வழி விட்டனர். முருகய்யன் அருகில் வந்து இரவில் வெகு நேரம் தேடிய பிறகு தன் மனைவியை மாத்திரம் கண்டு பிடித்ததாகவும் அவள் தான் மயானத்துக்குப் போனதையெல்லாம் அடியோடு மறுத்து, முருகய்யனுக்குப் பித்துப் பிடித்து விட்டது என்று கூறியதாகவும் யானைப் பாகன் அகப்படவே இல்லை என்றும் சொன்னான்.

''அதைப் பற்றிக் கவலை இல்லை, முருகய்யா! யானையின் காலைக் கட்டியுள்ள சங்கிலியை அவிழ்த்து விடு!'' என்றார் இளவரசர்.



இது 1903 ஆண்டின் ஃபோர்ட் கார். அப்பொழுது அதன் விலை 830 டாலர். இப்பொழுது பன்னிரண்டாயிரம் டாலர்! ''லுக்'' — 'பாபு'

முருகய்யன் அவ்வாறு அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கும்போதே, ''இதோ யானைப் பாகன் வந்துவிட்டான்!'' என்று ஒரு குரல் கேட்டது. ''வந்து விட்டான்! வந்து விட்டான்!'' என்று பல குரல்கள் ஒலித்தன.

கையில் அங்குசத்துடன் யானைப் பாகன் ஓடி வந்து கொண்டிருந்தான். கூட்டத்திலிருந்தவர்கள் அவசர அவசரமாக விலகிக்கொண்டு அவனுக்கு வழி விட்டார்கள்.

பொன்னியின் செல்வரும் ''நல்ல வேளை!'' என்று பெருமூச்சு விட்டு, யானைப் பாகன் ஓடி வந்து கொண்டிருந்த திசையை நோக்கினார்.

பாவம்! ஒரு நாள் இரவு அநுபவத்தில் அவன் எவ்வளவு மாறிப்போயிருக்கிறான்? பயப் பிராந்தி கொண்டவனாக அல்லவா தோன்றுகிறான்?

ஒரு கையில் அங்குசம் வைத்துக் கொண்டிருந்த யானைப் பாகன் யானையின் அருகில் வந்து அதன் துதிக்கையை இன்னொரு கையினால் தொட்டான்.

யானை உடனே அவனைத் துதிக்கையால் சுழற்றிப் பிடித்தது. தலைக்கு மேலே தூக்கியது. கேட்டவர்கள் பீதி கொள்ளும்படியாகப் பிளிறிவிட்டு, யானைப் பாகனை வீசி எறிந்தது.

யானைப் பாகன் வெகு தூரத்தில் போய் விழுந்தான். அவன் கையில் வைத்திருந்த அங்குசம் இன்னும் அப்பாலே போய் விழுந்தது.

''யானைக்கு மதம் பிடித்து விட்டது!'' என்று பயங்கரம் நிறைந்த குரல் அந்த ஜனக் கூட்டத்திலே எழுந்தது.

ஜனங்கள் நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்கினார்கள். **(தொடரும்)**



உண்மையே வெல்லும்

இரா. கோபாலகிருஷ்ணன்

ஆராய்ச்சி மாணவர், அண்ணாமலை பல்கலைக் கழகம்,
(தத்துவத் துறை) அண்ணாமலை நகர்.

ரூபாய் நூறு பெறும் முதல் பரிசுக் கட்டுரை

"உண்மையே வெல்லும்" அல்லது 'சத்தியமே வெல்லும்' என்பது பழைய மறையின் திருவாக்கு. வடமொழியில் இதை 'சத்யமேவ ஜயதே' என்பார்கள். சத்யம் என்னும் வடசொல்லுக்கு உண்மை, வாய்மை, மெய்மை என மூன்று பொருள்கள் உண்டு. இறைவன் சத்தியமே வடிவாக உடையவன். அந்தச் சத்தியம் நம் உள்ளத்தில் விளங்கும்போது அதற்கு உண்மை என்று பெயர். அதே சத்தியம் நமது வாய்ச் சொல்லில் விளங்கும்போது அதற்கு வாய்மை என்று பெயர். (உள் மெய் உண்மை. உள்ளத்திலிருந்து வரும் மெய் என்று பொருள்). அதே சத்தியம் நமது மெய்யினால் (அதாவது உடலினால்) செய்யப்படும் காரியங்களில் விளங்கும்போது அதற்கு மெய்மை என்று பெயர். உண்மை, வாய்மை, மெய்மை இம்மூன்றும் ஒருங்கே காப்பாற்றப்படும்போதுதான் மனிதன் சத்தியத்தைக் கடைப்பிடிப்பவன் ஆகிறான். உண்மை, வாய்மை, மெய்மை இம்மூன்றும் ஒன்றுபடும் நிலைக்கு நேர்மை என்று பெயர். நேர்மையான எண்ணங்களை எண்ணும்போதுதான் நாம் உண்மையாளர்கள் ஆகிறோம். நேர்மையான பேச்சுக்களைப் பேசும்போதுதான் நாம் வாய்மையாளர்கள் ஆகிறோம். நேர்மையான செயல்களைச் செய்யும்போதுதான் நாம் மெய்மையாளர்கள் ஆகிறோம்.

எது பொய்?

உண்மை அல்லாதது, வாய்மை அல்லாதது மெய்மை அல்லாதது இம் மூன்றுக்கும் பொய்ம்மை என்று பெயர். 'எது பொய்?' என்னும் கேள்விக்கு ரஸ்கின் ஒரு முறை பதில் சொன்னார். அதாவது "பொய் என்பது, பேசும் சொற்களிலே இல்லை. அது மனத்திலே இருக்கிறது. மனத்துக்குச் செய்யப்படும் வஞ்சனையேபொய்" என்றார்.

காந்தியும் உண்மையும்

மணமக்களை வாழ்த்தும்போது காந்தியும் உண்மையும் போல ஒன்றுபட்டு வாழுங்கள் என்று வாழ்த்துவர். உண்மை என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர் காந்தியடிகள் தான். துள்ளித் திரிகின்ற பள்ளிப் பருவத்தில் அரிச்சந்திர நாடகம், சத்தியத்தின் வலிமையை அவரது மனத்தில் பசுமரத்தாணி போல் பதிய வைத்தது. 'உண்மை வெல்லும்' என்ற தத்துவத்தின் பெருமையை உலகுக்குக் காட்ட அது பெரிதும் உதவி புரிந்தது. கடவுள் மேல் உலகிலும் இல்லை, கீழ் உலகிலும் இல்லை. ஒவ்வொருவர் மனசிலும் உண்மையின் வடிவாயிருக்கிறார் என்று கண்டுபிடித்தார். ஆதலால் மனிதனுக்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவை எனக் கொண்டார்.

சத்தியமே கடவுள்

"சத்தியமே கடவுள்" என்ற கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார் காந்தியடிகள். ஆண்டவனைச் சச்சிதானந்தம் என்கிறோம். அதாவது சத் (சத்யம்), சித் (அறிவு), ஆனந்தம் (இன்பம்) ஆகிய மூன்றுமாக இருப்பவன் இறைவன். ஆனால் சத்தியம் எங்கே இருக்குமோ அங்கே சித்தும் ஆனந்தமும் இருக்கிறது. ஆகையால் "கடவுளே சத்தியம்" என்று எண்ணினார். ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து, அந்தக் கொள்கையை மாற்றிக் கொண்டு, 'சத்தியமே கடவுள்' என்றார். 'கடவுளே சத்தியம்' என்பதற்கும், 'சத்தியமே கடவுள்' என்பதற்கும் சிறிதளவு வித்தியாசம் உண்டு. கடவுள் இல்லை என்பவர்கூடச் சத்தியத்தின் அவசியத்தை மறுப்பதே இல்லை. ஆதலால் காந்தி மகான் சத்தியமே கடவுள் என்ற முடிவான கொள்கையை ஏற்றுக் கொண்டார். வடமொழியில் சத்தியம் என்பதற்குரிய சொல் 'ஸத்' என்பதே. நிலைத்திருப்பது என்பதுதான் அதன் பொருள். கடவுளும் அப்படித்தான். ஆதலால் 'சத்தியமே கடவுள்' என்றார். சத்தியமே கடவுளாக இருக்கும்போது அதற்கு அழிவு ஏது? தோல்விதான் ஏது?

உண்மையும் அகிம்சையும்

உண்மை எப்படியோ அப்படியே அகிம்சையும் காந்தியத்தின் உயிர்நாடியாகும். சத்தியத்தை நோக்கிப் போனபோது காந்திஜி அஹிம்ஸையைக் கண்டுபிடித்தார். இவ்விரு பழம் பெரும் நெறிகளை அரசியலுக்குப் பயன்படுத்தியது அவரது புது நெறியாகும். சத்தியத்தை சத்தியாக்கிரகமாக மாற்றினார். அசத்தியத்தையும், அநீதியையும், கொடுங்கோல் ஆட்சியையும் எதிர்க்கும் ஆயுதமாக அதைப் பயன்படுத்தினார். அந்த ஆயுதத்தின் முன் ஆங்கிலேயர் கதிகலங்கினர். சத்தியத்தின் முன் அவர்களுடைய பீரங்கியே வலுவற்றுப் போய்விட்டது. சத்தியத்தின் வலிமையைப் பார்த்தீரா? காந்திஜியின் கருத்துப்படி ஒருவர் சத்தியத்தைப் பின்பற்ற வேண்டுமானால் சத்தியத்துக்காகப் போராட வேண்டும். அசத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்குச் சத்தியத்தைத் தவிர வேறு ஆயுதம் இல்லை.

விளையாட்டுக்குக் கூடப் பொய் பேசக்கூடாது என்ற கொள்கை உடையவர் காந்திஜி. தம் வாழ்நாளையே சத்தியத்துக்காக, சத்திய சோதனைக்காகச் செலவிட்டார்.

உண்மை குருடா? மலடா?

உண்மையைக் குருடு என்றும், மலடு என்றும் வர்ணிப்பவர் உள்ளனர். உண்மை குருடாக இருந்திருக்குமானால் காந்திஜிக்கு அது எப்படி வழிகாட்டியாக இருந்திருக்க முடியும்? உண்மையின் சக்தியை அறியாதவர்கள்தான் அறிவுக் குருடர்கள். தந்தை சத்தியத்துக்கும், தாய் அஹிம்சைக்கும் பிறந்ததுதான் ''சர்வோதயம்''. இப்பொழுது சொல்லுங்கள், உண்மை மலடா?

மெய்யும் பொய்யும்

''பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தால் மெய்போல் ஆகிவிடும்'' என்பது ஹிட்லரின் வலது கரமாக விளங்கிய கோயபல்ஸ் என்பவனின் நீர்க்குமிழித் தத்துவமாகும். பொய் பேசி, பொய் பேசியே வளர்ந்தவன்தான் ஹிட்லர். மெய் பேசி மெய் பேசியே உயர்ந்தவர் காந்திஜி. முடிவில் இருவருமே மரணத்தைத் தழுவினர். ஆனால் சிறு வித்தியாசம். ஹிட்லரின் மரணத்தோடு ஹிட்லரிஸமும் அழிந்தது. ஆனால் காந்திஜியின் முடிவோடு காந்தீயம் முடிவு பெறவில்லை. காந்தியைக் கொன்றார்கள். ஆனால் அவர்களால் காந்தீயத்தைக் கொல்ல இயலவில்லை. காந்தியே சொன்னார்: ''பிறர் என்னைக் கொல்லலாம். ஆனால் காந்தீயத்தை அவர்களால் கொல்ல முடியாது. உண்மையைக் கொல்ல முடியுமானால் காந்தீயத்தைக் கொல்ல இயலும். அகிம்ஸையைக் கொல்ல இயலுமானால் காந்தீயத்தைக் கொல்ல முடியும். உண்மை, அஹிம்ஸை வாயிலாக உரிமை பெறுவதன்றோ காந்தீயம்!''

உண்மையைப் பொய்ம்மை வென்றுவிட்டது என்றால் ஆண்டவனைச் சைத்தான் வென்று விட்டான் என்று பொருள். உடலைத்தான் கொல்லலாம். உண்மையைக் கொல்லமுடியுமா? இதை உணர்த்தச் சிலுவையில் மாண்டவர் ஏசு பெருமான். உண்மைக்கு அழிவில்லை என்பதை உலகுக்கு உணர்த்த நஞ்சு உண்டார்



கிரேக்க ஞானி சாக்ரடீஸ். உண்மையைப் போதித்த நபிகள் நாயகத்தை ஊரைவிட்டே துரத்தினர். ஆனால் உண்மையைத் துரத்த இயலவில்லை. உலகிலேயே யாராலும் அழிக்க முடியாதது ஒன்று உண்டு என்றால் அது உண்மையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதை யாராலும் எக்காலத்திலும் அழிக்க முடியாது.

உண்மையின் பலம்

வல்லவனாக மட்டும் இருந்த அசோக சக்கரவர்த்தி, உண்மையின் வழி அஹிம்ஸையின் பலம் கொண்டு நல்லவனானபோது எவ்வளவு கோடானு கோடி மக்களுக்கு அவன் நன்மை புரிய முடிந்தது? சத்தியம் பெரிதா, போர் பெரிதா என்ற கேள்வியை எழுப்பி சத்தியத்தின்பால் வந்த அஹிம்ஸைதான் பெரிது என்று வாழ்ந்து காட்டினான்.

சத்தியம் பெரிதா? தேசம் பெரிதா?

கம்பராமாயணத்தில் ஊடுருவிக் கிடக்கும் தத்துவம், நீதியும் நெறியுமாகும். இராமாயணத்தில் வரும் விபீஷணன் தேசத் துரோகி அல்ல என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடியிருக்கிறார். சத்தியம் பெரிதா? தேசம் பெரிதா? என்று கேள்வி கேட்டு சத்தியம் தான் பெரிது என்று நிலைநாட்டியிருக்கிறார். அதே ராமாயணத்தில் சத்தியமே உருவாகத் திகழ்பவர் ராமபிரான். காந்திஜி உயிர் விடும் போது 'ஹரே ராம்' என்ற சத்திய வசனத்தை உச்சரித்து விட்டுத்தான் உயிர் விட்டார்.

உண்மை பேசுவது என்பது ஒரு தனிநபர் ஒழுக்கம் மட்டுமல்ல. அது ஒரு சமுதாய சர்வதேச ஒழுக்கம் என்பது மூதறிஞர் ராஜாஜியின் கருத்து. இந்த ஒழுக்கம் குன்றும்போதுதான் நாட்டில் பல அராஜகங்கள் நடக்கின்றன. பொய் பேசியே பழக்கப்பட்டவர்கள் மன நோயாளிகள் என்று குறிப்பிடுகிறார் பிரெஞ்சு டாக்டர் ஒருவர்.

ரிச்சர்ட் பீட்லி என்ற அறிஞர் குறிப்பிட்டார்: ''உண்மை நம் பக்கம் இருக்கவேண்டும் என்பது வேறு. நாம் உண்மையின் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று விரும்புவது வேறு.'' நாட்டில் பலர் விரும்புவது உண்மை நம் பக்கத்தில் இருக்க வேண்டும் என்பது. இதனால் தான் நாட்டில் பல குழப்பங்கள். ஒரு முறை டாக்டர் ஆல்பர்ட் ஸ்வைட்சர் கூறினார்: ''எந்த உண்மையையும் முதலில் விளக்கும் போது அது நகைப்புக்குப் பாத்திரமாய் விளங்குவது அதன் தலைவிதி போலும்.'' இந்த உண்மை கலிலியோ என்ற இத்தாலிய கணித மேதையின் விஷயத்தில் நடந்தது. கலிலியோ 'உலகம் சுற்றுகிறது' என்று கண்டுபிடித்தார். ஆனால் அவருக்குக் கிடைத்தவை சிறைவாசமும் மதத் துவேஷி என்ற பட்டமும்.

ஒரு நாட்டுக்கு உண்மையில் பெருமை கிடைக்க வேண்டுமானால் அந்நாடு ஆன்மீக பலம் பெற்றிருக்க வேண்டும். நம் நாட்டுக்குச் சர்வதேச அரங்கில் ஓரளவு மதிப்பு இருக்கிறதென்று சொன்னால் இந்த ஆன்மீக பலத்தினால்தான். இந்த வகையில் நாம் விவேகானந்தருக்கும் காந்திஜிக்கும் கடமைப்பட்டவராவோம். ''அறமே அனைத்துக்கும் அடிப்படை. சத்தியமே அறம் அனைத்துக்கும் உயிராயிருப்பது. ஆதலால் சத்தியமே கடவுள்'' என்று காந்திஜி சொன்னார். 'சத்தியமே வெல்லும்' இதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு நாடு சத்திய மார்க்கத்தில் செல்லும்போது இந்த வெற்றியை நாம் கண்கூடாகக் காணலாம்.

குமாரி மீனாக்ஷி சபாநாயகம்



சென்னை, லலிதா சுப்பிரமணியம் பரத நாட்டியப் பள்ளியின் மாணவி குமாரி மீனா சபாநாயகத்தின் நடன நிகழ்ச்சி அண்மையில் மியூஸியம் தியேட்டரில் சென்னை உயர்நீதி மன்றத்து முன்னாள் பிரதம நீதிபதி ஸ்ரீ மா. அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வழக்கமான அலாரிப்பு, ஜதிஸ்வரம் ஆகியவற்றில் பந்தணைநல்லூர்ப் பாணியைச் சிறப்பாகக் காண முடிந்தது. சுருதி, லய சுத்தமான நட்டுவாங்கம் நிகழ்ச்சியின் தொடக்கத்திலேயே களை கட்டி விட்டது. ''தத்தை மொழியாள்'' என்ற கல்யாணி ராகப் பதமும், ''நேற்றந்தி நேரத்திலே'' என்ற உசேனி ராகப் பதமும் நல்வடிவம் பெற்றுச் செவிக்கினிய அமுதாகப் பிரவாகமெடுத்தன. பதம் பாடியவரின் சாரீர இனிமையின் நயம் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்தது. குமாரி மீனா சபாநாயகத்தின் அபிநயங்கள் பாவபூர்வமாக அமைந்து பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தின., பாவங்களைத் தத்ரூபமாக வெளிப்படுத்த அவர் கையாண்ட லாகவங்கள் சபையோரின் பாராட்டைப் பெற்றன.

ராமாயணம்

ராஜாஜி



ராவணன் அவமானப்படுத்தியதைப் பொறுக்க முடியாமல் விபீஷணன் எழுந்து பேசினான்: ''அண்ணா! நீர் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். தருமத்தினின்று தவறிய நீர் எனக்கு அண்ணன் ஆவீர். சபையில் எனக்கு நீர் செய்த அவமானத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. காலபாசத்தால் தூண்டப்பட்டு விநாசம் தரும் வழியில் போகிறீர். நான் சொன்ன ஹிதம் உமக்குப் பிடிக்கவில்லை. காதுக்கு இனிமையாகப் பேசுவது சுலபம். உம்முடைய மந்திரிகள் அதைச் செய்து வருகிறார்கள். உம்முடைய க்ஷேமத்தைக் கோரியே நான் சொன்னேன். அது உமக்குப் பிடிக்கவில்லை. உமக்குக் கோபத்தை உண்டாக்கிற்று. ராமனுடைய பாணங்கள் உம்மை எரிப்பதை நான் விரும்பவில்லை. அதனால் அல்லவோ நான் சொன்னது.

''என்னை நீர் பகைவன் என்கிறீர். நீர் க்ஷேமமாக இருப்பீராக! நகரத்தையும் உம் உயிரையும் காப்பாற்றிக் கொள்வீராக. மங்களம்! நான் போகிறேன். சுகமாக இருப்பீராக! ஆபத்துக்கு உதவலாம் என்று பார்த்தேன். முடியவில்லை. உம்முடைய பெருமையைக் கண்டு பொறாமைப்படுகிறேன் என்று எண்ணுகிறீர். அழிந்து போக வேண்டிய காலத்தில் நல்ல யோசனை விஷமாகத் தோன்றும்.''

இவ்வாறு சொல்லிவிட்டு ராவணனுடைய தம்பி விபீஷணன் இனி லங்கையில் தனக்கு இடமில்லை என்று தீர்மானித்து எல்லாவற்றையும் துறந்து அங்கிருந்தே அப்போதே ஆகாயத்தில் கிளம்பி ராம லக்ஷ்மணர்கள் இருந்த இடம் நோக்கிச் சென்றான். ''இராவணனோடு பொருந்தாமை பிறந்த பின்பு, நெருப்புப் பட்ட தரையில் கால் பாவாதாப்போல் அவ்விடம் அடி கொதித்துப் போந்தானாயிற்று'' என்றார் வடக்கு வீதியார் தம் ஈடு வியாக்கியானத்தில். விபீஷணனுடன் நான்கு ராக்ஷச நண்பர்களும் கூடச் சென்றார்கள்.

81. வானரர்களின் சந்தேகம்

பாபம் செய்துவிட்டு அதன் பயனாக வந்த அபாயத்தினின்று எப்படித் தப்புவது என்று ராவணன் கஷ்டப்பட்டான். அரசர்களின் வழக்கம்போல் மந்திராலோசனை சபை கூட்டினான். சபையில் சர்க்கரைப் பேச்சுப் பேசுபவர்கள் பலர் பேசினார்கள். ஆனால் இருவர் ராவணனுக்குக் கோபம் வரும்படி கடினமாகப் பேசினார்கள்.

''தவறு செய்தாய். ஆயினும் நான் உனக்காக உயிரைக் கொடுப்பேன்!'' என்றான் ஒருவன்.

'பாபத்தைச் செய்தாய். ஆயினும் இப்போதும் தப்புவதற்கு வழியுண்டு. அந்த வழியைப் பிடித்துச் செல்வாயானால் நாம் எல்லோரும் அழியாமல் சுகமாக இருக்கலாம். சீதையைத் திருப்பித் தந்துவிட்டு ராமனிடம் சரணடைவாய்' என்றான் விபீஷணன்.

'மாட்டேன்' என்றான் ராவணன்.

'அப்படியானால் உன்னை விட்டேன்' என்றான் விபீஷணன்.

தரும சங்கடம் ஒன்று வந்து எதிரில் நிற்கும் போது தம் தம் சுபாவத்தை அனுசரித்து அவரவர்கள் நடந்து கொள்வார்கள். எல்லோரும் ஒன்று போல் நடந்துகொள்ள மாட்டார்கள்.

கர்வபங்கத்துக்கு ராவணன் மனம் ஒப்பவில்லை. பாப காரியம் செய்வது கஷ்டமானால், பிழையை ஒப்புக் கொண்டு 'நான் தோற்றேன்' என்று ஒப்புக் கொள்வது அதைவிடக் கஷ்டமான காரியம். பாபம் செய்வதற்குத் தைரியம் வேண்டும். பாபம் செய்தேன் என்று ஒப்புக் கொள்வதற்கு இருமடங்கு தைரியம் வேண்டும். அந்தத் தைரியம் ராவணனுக்கு இருக்கவில்லை. அவனுடைய சுபாவத்தில் அதற்கு இடமே இல்லை.

அதருமம் ஒன்று நடக்கும்போது பாபம் செய்தவனைச் சேர்ந்து நிற்பவர்களுக்கு ஒரு பெரிய பிரச்னை ஏற்படுகிறது. 'இந்த வீட்டில் நான் சோறு உண்டவன். இவனை நான் எப்படி



கைவிடலாம்?' 'கூடப் பிறந்தவன் அறியாமையால் பிழை செய்தான். அவனை நான் விட்டு விடுவது பயங்காளித்தனமாகும்.' இவ்வாறான சிக்கல்கள் கிளம்பும். செய்யப்பட்ட அதருமத்தில் தாமும் பங்கு எடுத்துக் கொண்டு விடுவதே வீரர்களுடைய கடமை என்று முடிப்பார்கள் சிலர். ஆனால் வேறுவிதமாக நினைப்பவர்களும் உண்டு. பிழை செய்தவர்களைத் திருத்துவதற்கு வேண்டியதெல்லாம் செய்து பார்ப்பார்கள். அதனால் உண்டாகும் கோபம், வெறுப்பு, நஷ்டம் இவற்றைப் பொருட்படுத்தாமல் செய்யக்கூடிய அந்த முயற்சியெல்லாம் வீணானபின், பாபம் செய்தவனைத் துறப்பார்கள். தருமத்தைத் துறக்க மாட்டார்கள். அதருமத்தில் சேருவது ஒருநாளும் கடமையாகாது என்பது அவர்களுடைய கருத்து. செய்ய வேண்டிய முயற்சியைச் செய்யாமல் இருப்பது அதருமமாகும். அதையெல்லாம் செய்துவிட்டபின், தம் கடமை முன்போலவே நிற்கும். தருமத்தைப் புறக்கணித்துவிட்டு அண்ணனுக்காகத் தம்பியோ தம்பிக்காக அண்ணனோ அதருமத்தில் பங்கு எடுப்பது சரியாகாது என்பது அவர்களுடைய முடிவாகும்.

ராமாயணத்தில் கும்பகர்ணனும் விபீஷணனும் இந்த இரண்டு பட்சத்திற்கும் சிறந்த விளக்கங்களாக அமைந்து நிற்கிறார்கள்.

"சீதையை அபகரிக்கலாம், வா, தண்டகாரண்யம் போவோம்" என்று ராவணன் எவ்வளவு வேண்டிக்கொண்டிருந்தாலும் விபீஷணன் போயிருப்பானா? போயிருக்க முடியுமா? போயிருந்தால் யாராவது விபீஷணனைப் புகழ்ந்திருப்பார்களா ?

"இப்போதாவது சீதையைத் திருப்பிக் கொடு. க்ஷேமமாக இருப்பாய். ராமன் மன்னிப்பான். அதுவே தருமம்" என்று சொல்லிப் பார்த்தான். கேட்கவில்லை. உண்மையில் பாபத்தை வெறுக்கும் ஓர் ஆத்மாவுக்கு, பிடிவாத மூர்க்கத்தில் நின்ற ராவணனை விட்டு விலகுவதைவிட வேறு வழியிருக்கவில்லை.

'ஆகையால் விபீஷணனைக் குற்றம் சொல்லுவது தவறு. நமக்குள் தரும உணர்ச்சி ஓரளவு குறைவாக இருப்பதாலேதான் குற்றம் சொல்லுவோம்.

ஆயினும் கும்பகர்ணனைக் குற்றம் சொல்லலாமா ? அதுவும் முடியாது. ரத்த பாசத்தால் இழுக்கப்பட்டுத் தன் உயிரைத் தியாகம் செய்தான். அவ்வாறே மாரீசனும் செய்தான். கும்பகர்ணனைப் பழிக்க முடியாது என்பதால் விபீஷணன் செய்தது குற்றமாகாது. தருமத்துக்கு விரோதமாகவே பேசுவதில் சிலருக்கு இந்தக் காலத்தில் அதிக ருசியானபடியால் இந்த விஷயத்தை இங்கே இவ்வளவு நீட்டி எழுத வேண்டியதாயிற்று.

பாபம் செய்தால் நண்பர்களுடைய நட்பையும் சுற்றத்தாருடைய துணையையும் கட்டாயமாக இழப்போம் என்கிற பயம் மக்களுக்கு இருக்க வேண்டும். எப்படியாயினும் இவர்கள் நமக்குத் துணையாகவே இருப்பார்கள், கைவிட மாட்டார்கள் என்கிற தைரியத்தைக் கொடுத்துவிட்டோமானால் உலகத்தில் பாபத்தைத் தடுப்பது மிகக் கஷ்டமாகும். சாதாரணமாகவே மக்களைப் பாபத்தில் இழுக்கும் வேகங்களுக்குப் பலம் அதிகம். அதற்கு இந்தத் துணையும் சேர்ந்து விட்டால் வெகு மோசமாகும். இதை நினைவில் வைத்துக் கொள்ளாமல் சிலர் வாதாடுகிறார்கள். "குலத் துரோகி" என்று ராவணன் மட்டும் சொல்லவில்லை. ராவணனுக்குப் பின் நம்மில் பலரும் விபீஷணனைக் குறித்து அவ்வாறே குறை சொல்லுகிறோம். முக்கியமாகத் தங்களுடைய தவறான முயற்சிகளுக்கு, தங்களுக்குச் சம்பந்தப்பட்டவர்களுடைய துணையை எப்படியாவது அடைய வேண்டும்; அதற்கு இடைஞ்சல் ஏற்படக் கூடாது என்று விரும்புகிறவர்கள் எல்லாம் விபீஷணனைப் பாவி என்றும் துரோகி என்றும் சொல்லுவது வழக்கம். 'குலத் துரோகி' என்கிற பழிச் சொல்லுக்குப் பயப்படாமல் விபீஷணன் அதருமத்தினின்று விலகினான். விலகிய பிறகும் விபீஷணன் பாடு கஷ்டமாகத்தான் இருந்தது. நடந்ததைக் கேளுங்கள்.


* * *

கடலின் வடக்குக் கரையில் நின்ற வானரத் தலைவர்கள் திடீர் என்று ஆகாயத்தில் ஒரு பிரகாசத்தைக் கண்டார்கள். பொன்முடி கொண்ட மேருமலை போல் மேலே ஆகாயவீதியில் ஒரு ஜோதி ஜொலிப்பதைக் கண்டார்கள். மேகங்களிடையே மின்னும் மின்னல், மின்னின பிறகு மறைந்து போகாமல் அப்படியே ஆகாயத்தில் நின்ற மாதிரி ஜொலித்தது. பார்த்ததில் பெரு வடிவங்கள் கொண்ட ஐந்து ராக்ஷசர்கள் நிற்பதைக் கண்டார்கள். வானரப் படைத் தலைவனும் அரசனுமான சுக்ரீவன் இதைப் பார்த்துவிட்டு, "சந்தேகமேயில்லை. இந்த ராக்ஷசர்கள் எங்களைக் கொல்ல லங்கையிலிருந்து வந்திருக்கிறார்கள்" என்றான்.

அரசன் இவ்வாறு சொன்னதுமே வானர வீரர்கள் மரங்களும் பாறைகளும் எடுத்துக் கொண்டு யுத்தத்துக்கு ஆயத்தமாகி, "உத்தரவு கொடுங்கள். இவர்களை இப்போதே மடக்கி வதம் செய்து பூமியில் தள்ளுவோம்" என்று கர்ஜித்தார்கள்.


இப்படி வானரர்கள் தங்களுக்குள் பேசியும் கர்ஜித்துக் கொண்டும் வந்ததைக் கேட்ட விபீஷணன், பயக்குறி ஒன்றும் காட்டாமல் வஞ்சனையற்ற உள்ளத்தோடு மேலே அனைவருக்கும் தெரியும்படியாக நிலைகுலையாமல் நின்று கம்பீரக் குரலில் பேசலானான். (தொடரும்)

மாதங்களில்... ...பழமொழிகள்



சித்திரை என்று சிறுக்கிறதும் இல்லை.
பங்குனி என்று பெருக்கிறதும் இல்லை.
ஆடி மாதம் அவரை போட்டால்
கார்த்திகை மாதம் கறி.
ஐப்பசி மாதத்து எருமைக்கிடாவும்
மார்கழி மாதத்து நம்பியானும் சரி.
ஆனி கூனி குடிபோகாதே.
வைகாசி மாதத்தில் முகூர்த்தப் பஞ்சமா?
தை பிறந்தால் வழி பிறக்கும்.
மாசி மாதத்தில் மரமும் குளிரும். -- கருடன்

(ஆவணி, புரட்டாசி இரு மாதங்கள் பற்றிய பழமொழிகள் தெரிந்தால் எழுதி அனுப்புங்களேன். பிரசுரமானால் பரிசு உண்டு.)





அதே குரல்!

அதே காம்பீர்யம்! கனம்; அழுத்தம்!

சம்ஸ்கிருத சுலோகம் காற்றிலே மிதந்து வந்து மெய்சிலிர்க்கச் செய்கிறது.

பிரும்மஸ்ரீ செங்காலிபுரம் அனந்தராம தீட்சிதரின் குரல்!

ஆனால் உபன்யாசம் நடத்துபவர் ஸ்ரீ ராமமூர்த்தி தீட்சிதர்.

அவர் பிரம்ம ஸ்ரீ செங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் அவர்களின் சகோதரி குமாரர்.

குலவழிக் குரல்

சுலோகத்தைச் சொல்லி முடித்து அதற்கான விளக்கம் வரும்போதுதான் ஸ்ரீ ராமமூர்த்தி தீட்சிதரைத் தனித்துப் பார்க்க முடிகிறது.

* * *

ஆறு வயதுச் சிறுவனாகத் திருக்கழுக்குன்றம் வேத பாடசாலையில் சேர்ந்த ராமமூர்த்தி வேத சாஸ்திர நடைமுறைகளில் நன்கு பயிற்சி பெற்று இளைஞன் ராமமூர்த்தியாகப் பதினெட்டு வயதில் வெளியே வந்தார். திருமணமுமாகி விட்டது. பிழைப்புக்கு ஏதாவது வழி பார்க்க வேண்டுமே? சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் புரோகிதராகப் பணி செய்யலாம் என்று கிளம்பினார். மேட்டூருக்குப் போகும் வழியில் சேலத்திலுள்ள தம் மாமா அனந்தராம தீட்சிதர் அவர்களையும் பார்த்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுப் போக விரும்பினார். அவருடைய வாழ்க்கைக்கான திருப்பம் அங்கேதான் காத்திருந்தது.

"இன்று முதல் ராமாயண உபந்யாசம் செய். தலைமை ஆசிரியர் லட்சுமி நாராயணய்யர் வீட்டில் ஏற்பாடு செய்யச் சொல்கிறேன்" என்றார் மாமா.

ராமமூர்த்தி திடுக்கிட்டார். அவருக்கு உபந்யாச மேடை ஏறி அதுவரை பழக்கமில்லை. அவ்வப்போது வேத பாடசாலை ஓய்வு நாட்களில் சேலத்துக்கு வந்து போகும்போது மாமா உபந்யாசம் செய்வதைக் கவனித்திருக்கிறார். அநுபவம் அந்த அளவுதான்.

மருமான் ராமமூர்த்திக்குத் தைரியமூட்ட மாமா தம் சொந்த அநுபவத்தையே உதாரணமாகச் சொன்னார்.

அனந்தராம தீட்சிதர் அவர்களின் தகப்பனார் விஷ்ணுபுரத்தில் உபந்யாசம் நிகழ்த்திக் கொண்டிருந்தார். ஒரு நாள் தவிர்க்க முடியாத சில காரணங்களால் உபன்யாசம் செய்யப் போக முடியவில்லை. தம் குமாரனைப் பார்த்து அன்று மாத்திரம் விடுபட்டுப் போகாமல் உபந்யாச நிகழ்ச்சியை நடத்தச் சொன்னார். அனந்தராமருக்கு அதற்கு முன் எந்தவித அநுபவமுமில்லை. தந்தை வாக்கைத் தட்ட முடியாமல் அன்று முதல் தடவையாக மேடையில் அமர்ந்தார். பள்ளி உபாத்தியாயர் குறிப்புக்களை வைத்துக் கொண்டு பதத்துக்குப் பதம் பொருள் சொல்வது போல் நிகழ்த்தி விட்டார். மறு நாட் காலையில் அந்த ஊர் ஜனங்களெல்லாம் அவரைப் பார்த்துச் சிரிப்பது போல அவருக்கு ஒரு பிரமை. அத்தகைய முதல் அநுபவத்தைப் பெற்றுப் பிற்காலத்தில் உபந்நியாசச் சக்கரவர்த்தியாக விளங்கிய மாமாவின் வார்த்தைகளை ராமமூர்த்தி தட்டவில்லை. அன்றே ராமாயண உபந்நியாசத்தைத் தொடங்கினார். பத்து நாட்கள் தொடர்ந்து சொன்னார். கேட்டவர்கள் அபிமானத்துக்குப் பாத்திரமானார். மேட்டூர் போகும் திட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாகப் பாரதத்தின் பல பகுதிகளிலும் அவருடைய உபந்நியாசக் குரல் எதிரொலித்தது; ஸ்ரீராம கதா பூஷணம் பி. என். ராமமூர்த்தி தீட்சிதர் ஆனார். ஏறத்தாழ முப்பது வருட அநுபவமும் இந்தத் துறையில் சேர்ந்து விட்டது. ராமாயணத்துடன் மற்ற இதிகாச புராணங்கள் பற்றியும் உபந்யாசம் செய்கிறார்.


* * *

ஹனுமான் மரத்தின் மேலிருந்து அசோக வனத்தில் இருக்கும் சீதாபிராட்டியைக் கவனிக்கிறான். சீதாபிராட்டியைச் சுற்றி சர்வாபரண பூஷிதைகளான ராட்சத ஸ்திரீகள் உட்கார்ந்திருக்கிறார்கள். 'சீதை குனிந்த தலையோடு தரையைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்னேன்! நம்ப ஸ்திரீகளாக இருந்தால், அக்கம் பக்கத்தவர் என்ன புது நகை போட்டுண்டு இருக்கான்னு பார்க்க மாட்டார்களோ?' என்று உபந்யாசகர் சொல்லும்போது ஸ்திரீகள் பகுதியிலிருந்து ஒரு கலகலப்பு!

இது மாதிரி சிரிக்க வைக்கும் எத்தனையோ ரசமான கட்டங்கள் அவர் சொல்லும்போது. அது மட்டுமா? ராமமூர்த்தி தீட்சிதரின் உபந்யாசத்தில் கம்பன் பாடல்கள், குறள் அடிகள், ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் குட்டிக் கதைகள் எல்லாமே ஆங்காங்கு தகுந்த நேரத்தில் தலை நீட்டிப் பரிமளிக்கின்றன.

சமீபத்தில் புரசைவாக்கம் பகுதியில் உருவாகிய புரசை தெய்விக சங்கம் கங்காதரேசுவரர் கோயிலில் ராமமூர்த்தி தீட்சிதரின் பன்னிரண்டு நாள் உபந்யாசத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. திருமுருக வாரியார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இது சங்கத்தின் முதல் முயற்சி. துடிப்பான சிலர் இதன் நிர்வாகத்தில் பங்கேற்றிருப்பதால் அவர்கள் தொடர்ந்து இம்மாதிரி பணி செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். — **கோமதி ஸ்வாமிநாதன்**


சிங்கக் கழுகு
பீட்டர் ஓடான்னல்
8
நுனியில் ஜகடையுடன் கூடிய கனமான கயிற்றை மாடஸ்டி வீசுகிறாள். கயிற்றைத் தன் கரத்தில் வழுக்கிச் செல்ல அனுமதிக்கிறாள். அகன்ற வளைவுப் பாதையில் விரையும் ஜகடைக் கயிறு....
...ஒரு பாம்பு போல அவனைச் சுற்றி வளைத்துக் கொள்ள மாடஸ்டி விருட்டெனக் கயிற்றைப் பின்னுக்கு இழுக்கிறாள், பலமாக.
செத்தேன்!
1730
அரை மயக்க நிலையை அடைந்தவன், தப்ப கற்றிச் சாயுமுன் கத்தி ஏந்திய அவன் கரத்தில் விழும் ஓர் உதை அதனைச் செயலற்றுப் போகச் செய்கிறது.
அவன் கையிலிருந்த இரும்பு உருளை அவன் தலையைத் தாக்க...
சபாஷ் அக்கா! பலே பேஷ்!
ஜமாய்த்துவிட்டாய் அக்கா! ஒரு பெண் இத்தனை சாமர்த்தியமாகப் போராடி நான் பார்த்ததே இல்லை!
பாராட்டுவேண்டாம்; என் கேள்விகளுக்குப் பதில் சொல்லு, சீக்கிரம்!
1731



என் நண்பன் மாக் விடமிருந்து நீ திருடிய தோல் பையில் ஒரு பழைய கடிதம் இருக்கக் கண்டாய். அதை ஏன் அல்போரினி பிரபு விடம் எடுத்துச் சென்றாய்?
அல்போரினி என்ற பெயர் கடிதத்தில் காணப்பட்டது. அவன் அக்கடிதத்துக்கு ஏதாவது பணம் தருவான் என்று எதிர் பார்த்தோம்.
அவன் கொடுக்கவும் செய்தான். இதோ பார்! ஆயிரம் லீர் நோட்டு!
கடிதத்தில் என்ன எழுதியிருந்தது?
வெகுகாலத்துக்கு முன் நகைகளும் தங்கமும் ஒரு சிலைக்கடியில் பதுக்கி வைக்கப்பட்டது பற்றி எழுதியிருந்தது... இந்தா உன் ஆடை...
சிங்கக் கழுகு! அதனடியில் உள்ள புதையலைக் காட்டித்தான் மாக்ஸ் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்த நினைத்தான் போலும்!
1732
நாங்கள் தோல் பையைத் திருடினோம் என்பதால் உன் நண்பன் கோபமாய் இருக்கிறானா?
என் நண்பன் இறந்துவிட்டான். ஆன்ஜெலோ! நீங்கள் வாய் திறவாமலிருக்க ஏற்பாடுசெய்யுமாறு இந்தக் கயவர்களை அனுப்பிவைத்தவன் தான் மாக்ஸையும் கொன்றவன்.
நாங்கள் கடிதத்தைத் திருடியதாலா அவன் கொல்லப்பட்டான்?
ஆமாம். இவர்கள் திருடியதாலும் திருடியதை அல்போரினிக்குச் சொற்பக் காசுக்கு விற்றதாலும்தான்...
ஆனால், பாவம்! இவர்கள் மீது பழிசுமத்திப் பயன் என்ன?
இல்லை ஃப்ரான் ஸெஸ்கா! எப்படியிருந்தாலும் மாக்ஸின் மரணம் நேர்ந்திருக்கும்தான்
1733


இவர்கள் இறந்து விட்டார்களா அக்கா?
இல்லை மயக்கம்தான்
இப்போ போலீஸிடம் சொல்வாயா?
மாட்டேன். இவர்கள் தங்களை அனுப்பியவனிடமே திரும்பிப் போகட்டும். இங்கு நடந்ததையெல்லாம் அவனுக்குச் சொல்லட்டும்.
அப்படி நடந்தால் உன் நண்பனைக் கொன்றது போல் உன்னையும் கொல்ல முயல்வானே அக்கா!
தெரியும்; ஆனால் ஒரு வித்தியாசம். மாக்ஸ் போலன்றி நான் என்னைக் கொல்ல வருகிறவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன் அல்லவா?
1734
கன்னிமாடத்தில்...
நான் இவர்களுக்கு உறுதிமொழி அளித்திருக்கிறேன், இருவரையும் தனித் தனி அனாதை இல்லங்களுக்கு ஒரு வாரத்துக்கேனும் நீங்கள் அனுப்ப மாட்டீர்கள் என்று.
அது நல்ல யோசனை. அந்த ஒரு வாரத்துக்குள் தனித் தனியே வாழவேண்டிய நிலைக்கு இவர்கள் தங்கள் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளலாம்.
நான் ஒரு வாரத்துக்குள் திரும்பி வருகிறேன். ஓடிப் போய் விடாதீர்கள். இந்த இடத்தை விட்டு வெளியே போகாதீர்கள். உங்களைக் கொல்ல ஆட்கள் காத்திருக்கிறார்கள்.
உன்னால் அவர்களுடன் தனித்துப் போராட முடியாதே, அக்கா!
நான் அப்படி நினைக்கவில்லை; அக்கா ரொம்ப சாமர்த்தியசாலி!
நன்றி ஆன்ஜெலோ! ஆனால் நான் தனியாக இருக்க மாட்டேன். எனக்கு உதவக் கெட்டிக்கார நண்பன் ஒருவன் வருகிறான்.
(தொடரும்)

ஆறு கைகள் இருந்தாலும் போறது போலிருக்கே!



ஒரு Prestige பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் வாங்கிவிடுங்கள்!



பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் உங்கள் பொன்னான சமையல் நேரத்தில் ஒருமணி மிச்சமாக்குகிறது

சமையல் பிரச்சனையை எளிதாக்கவே தயாராகிறது பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர். பிரஸ்டிஜ் சமையல் வழக்கமான சமையலுக்காகும் நேரத்தில் கால்பங்கு நேரத்திலே தயார். அது எளிதானது. அத்துடன் பத்திரமானதும்கூட. 12 வயது சிறுமி கூட கையாளலாம். எரிபொருள் செலவில் எத்தனையோ மிச்சம். பிரஸ்டிஜ் இருந்துவிட்டால சமைக்கும்போது குழப்பமோ, தடுமாற்றமோ இருக்காது. ஏனெனில அதில் ஒரே சமயத்தில மூன்றுவகை சமைக்கலாம். பிரஸ்டிஜில் தயாரான உணவில் சத்து, ருசி, மணம் முதலியவை குறைவதில்லை. பிரஸ்டிஜ் ஆயுட்கால உத்தரவாதம்கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்பும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர்குக்கர் பிரஸ்டிஜ் ஒன்றே.

பிரஸ்டிஜ் ஐந்து அளவுகளில் உள்ளன. உங்கள் குடும்பத்திற்கு தேவையான அளவை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.



இந்தியாவில் பிரஸ்டிஜ்

ஏற்றுமதிக்கு ப்ரீத்

(டிடி.(பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்-16.

TTP-5799

யாமினி கடிதம் போட்டிருந்ததுடன் இல்லாமல் பட்டாபியும் தந்தி அடித்திருந்தார். அதனால் பாஸ்கரன் அவளை அழைத்துப் போக ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். வானத்து நிலவு போல் அந்தப் பிளாட்பாரத்திலேயே அவள் தனித்து விளங்கியதைக் கண்டு பாஸ்கரனுக்குப் பெருமையோடு ஆனந்தமாகவும் இருந்தது. யாமினியோடு இன்னொரு பெண் இருப்பதைப் பார்த்து அவன் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''நீ தனியா வரேன்னு எழுதியிருந்ததைப் பார்த்ததும் எனக்குக் கவலையாப் போச்சு. பிரயாணம் சௌகரியமாய் இருந்ததா ?''

''ஏதோ இவள் தயவிலே சௌகரியமாகவே இருந்தது. நானும் பயந்திண்டுதான் இருந்தேன். ஆண்டவனைப் பார்த்து என்னைத் தனியா விடாமல், இவளைத் துணையா அனுப்பியிருக்கான். நான்கூட இவளைக் கவனிக்கல்லே.... இவளா என்னைப் பார்த்துட்டு என்னைக் கூப்பிட்டாள். உங்களுக்குத் தெரியாதே இவளை?''

''ஊஹும்; தெரியாது.''

''என்னோட கல்லூரியிலே படிச்சவள். காமுன்னு பேரு. இங்கேதான் திருவல்லிக்கேணியிலே இருக்காளாம் இப்ப. இவளை நாமே கொண்டு விட்டுட்டுப் போகலாமா ?''

''சந்தேகம் இல்லாமல்! கூட யாராவது இருந்தாலும் வரட்டும்; கொண்டு விட்டுட்டே போவோம்.''

காமுவோடு ஒரு பாட்டி வந்திருந்தாள். இருவரையும் ஏற்றிக் கொண்டு

சம்பங்கி வாசனையை இழுத்து எத்தனை நாளாச்சு ?'' என்று மூச்சை இழுத்து விட்டான் பாஸ்கரன், போகிற வழியில்.

''ஆமாம், இதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே. எல்லாருக்கும் பெருமையா என்னை வந்து அழைச்சிண்டு வர முடியல்லியாம் — பேச்சு என்ன வேண்டியிருக்கு!'' என்று சிணுங்கினாள் யாமினி.

''நான்தான் எழுதியிருந்தேனே—அப்புறமும் சொல்றியே!''

''ஆமாம் எழுதியிருந்தேள், உடம்புதான் முக்கியம்னு. அந்த உடம்பைக் கொண்டு வந்து சேர்த்துட்டேன். திருப்திதானே இப்ப?''

''அதைவிட அந்த வைபவத்துக்கு முன்னாலேயே நீ வந்து சேர்ந்தியே, எனக்கு அதிலேதான் ரொம்பத் திருப்தி!''

''எல்லாம் சரி, ஏன் உங்க உடம்பு இப்படி இளைச்சு, கறுத்தாப்பலே இருக்கு — சரியாய்ச் சாப்பிடல்லியா, தூங்கலியா?''

''அப்படி ஒண்ணும் இருக்காதே!''

''என்ன இருக்காது? இது ஏதோ லேடீஸ் பை மாதிரி இருக்கே — யார் வச்சிருக்கா?'' என்று எதிரே யிருந்த அறையைப் பார்த்து விட்டுக் கேட்டாள் யாமினி.

''லேடீஸ் பையா? எனக்குத் தெரியாதே... ஓ! ஒருவேளை அஜிதாவுடையதா யிருக்கும். வண்டி கொஞ்சம் வேணும்னு அவள்தான் நேத்திக்கு எடுத்திண்டு போயிருந்தாள். மறந்து வச்சுட்டாள் போலிருக்கு!''

''ஆனால் நீங்க எதையும் மறந்து போய்விடல்லியே!''

காணிக்கை

போய், திருவல்லிக்கேணியில் விட்டு விட்டு, அவர்கள் தங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

''உனக்குத் தலைச்சன் குழந்தை பிள்ளைக் குழந்தையாய்ப் பிறக்கட்டும்டி அம்மா. என் வாக்குப் பலிக்கும்னு எல்லாருமே சொல்வா. நான் சொல்றேன். மகராசியாய் இரு !'' என்று வாழ்த்தியனுப்பினாள் காமுவின் பாட்டி.

''ஞாபகம் வச்சுக்கோ. பாட்டி சொன்னதை மறந்துட்டு, காலை வாரி விட்டுடாதே ! அப்பா ! இந்தச்

பாஸ்கரன் திரும்பிப் பார்த்தானே தவிர, இதற்குப் பதில் சொல்லவில்லை.

அது என்னவோ முதற் கோணல் முற்றிலும் கோணல் என்கிற கதையாகப் போய்விட்டது அந்த விவகாரம். சுருதி லயத்தோடு இருந்த சேர்க்கையில் எங்கு பிசகு நேர்ந்ததோ தெரியவில்லை.

யாமினி நியாயமாகத்தான் கேட்டாள். பாதி வேடிக்கையாகவும் பாதி வினையாகவும் இருந்தது அந்தக் கேள்வி. வண்டியை அஜிதா இரவலாக வாங்கிக் கொண்டு போனாளாம். எப்போது எதற்

காக வாங்கிக் கொண்டு போனாளோ? அதில் லேடீஸ் பையை வைத்துவிட்டு மறந்து போய் விட்டாளாம். இத்தனை நாழி வரையில் அதைத் தேடிப் பார்க்காமல் என்ன செய்தாளோ? இன்னொருவன் வண்டியில் ஒருத்தி தன் கைப்பையை வைத்துவிட்டு மறந்து போவதாவது? அதுக்குள்ளே என்னவெல்லாம் இருக்குமோ? காது கொடுத்துக் கேட்கவே முதலில் நன்றாக இல்லையே. அவள் கேட்டதில் மட்டும் என்ன தப்பு?

பாஸ்கரன் பதில் சொல்ல முடியாமல் அவளைத் திரும்பிப் பார்த்ததிலும் தப்பு தொடுத்தவள் எல்லாவற்றையும் சொன்னால் என்னவெல்லாம் கேட்பாளோ? நினைப்பாளோ? அது கடைசியில் எங்கே போய் முடியுமோ? என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டுதான் அவன் வாயையே திறக்காமல் அடக்கிக் கொண்டு விட்டான். இல்லா விட்டால் எல்லாம் சகஜமாக, ஒளிவு மறைவு இன்றி வெளிப்பட்டிருக்கும். இப்போது ஒன்றை மழுப்பி



ஆர்வி

இல்லை. ஆனால் யாமினியைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாமல் போனதுதான் தப்பு.

உயிருக்கு உயிரான யாமினியிடம் எதையும் மறைக்க வேண்டும் என்று அவன் நினைக்கவில்லை. ஆரம்பம் சரியாக இருந்தால் அவள் போனது முதல் நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் தன்னால் சொல்லியிருப்பான். ஆனால் வண்டியில் இந்தக் கைப்பை இருந்ததற்கே ஒரு கேள்வியைச் சுடுசரமாகத் மறைக்கப் போய் எல்லாவற்றையுமே அடியோடு மறைக்க வேண்டிய நிலைக்கு வந்து விட்டது.

''நான் போனப்புறம் அஜிதா உங்களைப் பார்க்க வந்தாளா?''

''ம்...வந்தாள்.''

''வண்டியை எடுத்துண்டு போன போதா? அதுக்கு முந்தியா?''

''அதுக்கு முந்தி.''

''எங்கே? நம்ம வீட்டுக்கே வந்திருந்தாளா?''

''ஊஹூம்... தொழிற்சாலைக்கு!''

''ஹ்ஹ்ஹூம்... அங்கே எதுக்கு வந்தாள்?''

''சும்மாத்தான். இயந்திரங்களையெல்லாம் பார்க்கலாம்னு...''

''நானே வந்ததில்லையே!''

''என்னமோ அவள் வந்தாள். என்ன செய்யறது?''

''ஒண்ணும் செய்ய முடியாதுதான். வண்டியை எடுத்துண்டு போறதுக்கும் அங்கேதான் வந்தாளா?''

''ஆமாம்.''

''அவள் வண்டி எங்கேயாம்?''

''நான் கேட்கல்லே. எங்கேயாவது ஒர்க் ஷாப்புக்குப் போயிருக்கும்!''

''தொழிற்சாலைக்குப் பக்கத்திலே தான் உங்க ஒர்க்-ஷாப் இருக்கே. அங்கே விடப்படாதா? இரவல் வண்டிக்கு மட்டும் இங்கே, ரிப்பேருக்கு இன்னொரு இடமோ?''

''எனக்குத்தான் தெரியாது என் கிறேனே. மேலே மேலே கேட்கறியே!''

''நான் எத்தனை ஆசையாய் வந்தேன் தெரியுமா?''

'' இப்ப என்ன அது கெட்டுப் போச்சு?''

''இப்படி எரிஞ்சு விழறதுதான்!''

''ஒரே கேள்வி மயமாக் கேட்டுண்டே போனால்...?''

''ஏன், கேட்கப்படாதா? நான் இல்லாதப்போ அவள் உங்களை எதுக்காகத் தேடிண்டு வரணும்? நீங்க எதுக்காக அழைச்சுண்டு போகணும்? வண்டியைக் கொடுத்து அனுப்பணும்? இதைத் தெரிஞ்சிக்கறது ஒரு தப்பா? இதுக்கு எரிஞ்சு விழணுமா?''

பாஸ்கரன் அசந்து போய், பதில் சொல்லாமல் வந்தான். அவனை அயர்த்திய விஷயம், அவள் நடந்ததையெல்லாம் நேரில் பார்த்தது போல் சொல்கிறாளே என்பதுதான். அதையும் தவிர அவனுடைய குற்றமுள்ள நெஞ்சு வேறு குறுகுறுத்தது. அவனுடைய மௌனம் அவள் சொன்ன குற்றச்சாட்டுக்களையெல்லாம் ஒப்புக் கொள்வது போலிருந்தது. இது அவளுடைய வேதனையை இன்னும் அதிகமாக்கியது.

'நீ சொல்வதெல்லாம் கற்பனை. அப்படி எதுவும் நடக்கவேயில்லை' என்று அவன் சொல்ல மாட்டானா என்று ஆவலோடு அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் ஒன்றும் மறுத்துச் சொல்லாததிலிருந்து அத்தனையும் நடந்திருக்கிறது போலிருக்கிறதே என்று கலக்கம் அடைந்தாள். துக்கம் வெடித்துக் கொண்டு வந்தது. அவன் ஊருக்கு வந்து தன்னை அழைத்து வராததற்குக் கூட இது தான் காரணமாக இருந்திருக்குமோ? அதனால் அவசரப்பட்டுக் கொண்டு வர வேண்டாம் என்று தனக்கு எழுதியிருந்தானோ? இல்லையானால் இந்த இரண்டு வாரங்களுக்குள் உடம்பு இப்படி இளைத்து, கறுத்தழிந்து போயிருப்பானேன்? அவளுக்குக் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

வீட்டுக்குப் போய்ச் சேரும் வரையில் ஏன் சேர்ந்த பிறகுகூட அவள் அவனை முகம் கொடுத்துப் பார்க்கவில்லை. அவர்களுக்குள் நிகழ்ந்த கன்னிச் சண்டை இது. அதனால் பார்வதியம்மாளுக்கு முன்னால் தங்கள் மனஸ்தாபத்தைக் காட்டிக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் தலைக்காக ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு அவள் மாடிக்குப் போய்விட்டாள். பாஸ்கரன் பாடு தவிப்பாக இருந்தது. அவளைச் சமாதானப் படுத்தாமல் வீட்டை விட்டு வெளியில் போக அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. தன்னை இப்படி ஓர் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கிவிட்ட அஜிதாவின் மீது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

''ஏண்டாப்பா, அவள்தான் வந்ததும் வராததுமாய்த் தலையைச் சுத்தறதுன்னு ஒண்ணுமே சாப்பிடாமல் மாடிக்குப் போயிட்டாள். நீ என்ன செய்யப் போறே? காப்பியாவது வேண்டுமா, வேண்டாமா?'' என்று கேட்டாள் பார்வதியம்மாள்.

''கொடு கொடு — நான் காலையிலேருந்து ஒண்ணுமே சாப்பிடலை. அப்படியே அவளுக்கும் சேர்த்துக் கொடு. நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன். பசி மயக்கம்தான் அவளுக்குத் தலையைச் சுத்தறது. காப்பி சாப்பிட்டால் எல்லாம் தன்னாலே சரியாய்ப் போயிடும்'' என்றான் பாஸ்கரன்.

அம்மா கொடுத்த காப்பியை எடுத்துக்கொண்டு வந்து கெஞ்சாத தோஷமாய் அவன் நிற்பதைக் கண்டு யாமினியின் நெஞ்சம் இளகிவிட்டது. தன்னைச் சமாதானப் படுத்துவதற்காகவே அவன் இன்னும் தொழிற்சாலைக்குப் போகாமல் இருக்கிறான் என்பதை உணர்ந்து அவளுக்குப் பெருமையாக இருந்தது. அவனிடமிருந்து ஒரு சின்னச் சமிக்ஞை கிடைத்தால் கூடப் போதும்; அவனோடு சமரசமாகப் போக அவள் துடித்துக் கொண்டிருந்தாள். கடைசியில் அப்படித்தான் நடந்தது.

கண்ணை வெறுமே மூடிக்கொண்டு படுத்திருந்த யாமினியின் நெற்றியை அவன் மெல்லத் தொட்டுப் பார்த்தான்.

என்ன என்று கேட்பது போல் அவள் கண்ணைத் திறந்து பார்த்தாள்.

''இப்ப எப்படி இருக்கு?''

யாமினி கண்கள் சோர, பெருமூச்சு விட்டாள்.

''காப்பி ஆறிப் போயிடும்!''

அவனுடைய பரிவைக் கண்டு அவள் நெஞ்சம் தழுதழுத்தது. குரலில் அத்தனை தாபம். அவன் என்ன தவறு செய்திருந்தாலும் கவலையில்லை. அவனை அந்தக் கணமே ஏற்றுக் கொள்ள அவள் கைகள் இரண்டும் துடித்தன. ஆனால் பெண்கள் சுபாவம் எங்கே போகும்?

''எனக்குக் காப்பி வேண்டாம்.''

''வேறே ஏதாவது வாங்கிண்டு வரட்டுமா?''

''நானே போய்ச் சாப்பிட்டுக்கிறேன்!''

''நான் கொடுக்கப்படாதா?''

''எனக்காக ஒண்ணும் நீங்க போக வேண்டாம்.''

''இதோ பார், இப்படி என்னைப் பாரேன்!''

''என்ன?''

''உன்னைத் தவிர நான் யாருக்காகவும் போக வேண்டிய அவசியமில்லை. போகவும் மாட்டேன்.''

இந்த வார்த்தைகளுக்காகவே காத்திருந்தவள் போல அவள் சரேலென அவன் கைகளைப் பற்றித் தன் இரு கன்னங்களிலும் பதித்துக் கொண்டாள்.

''என்கிட்டே உனக்கு அந்த நம்பிக்கை இருக்கோ இல்லையோ?''

யாமினி அவன் கைகளை இன்னும் இறுகப் பற்றிக் கொண்டாள். உணர்ச்சி மிகுதியால் அவளால் பேச முடியவில்லை. இன்னும் அவன் இதே பாணியில் பேசிக் கொண்டு போனால் அவளால் தாங்க முடியாது போலிருந்தது.

''எங்கிட்டே மட்டும் சொல்லல்லே. நான் செய்யற காரியத்திலேயும் உனக்கு நம்பிக்கை இருக்கோ இல்லையோ?''

''வேண்டாமே, நீங்க ஒண்ணுமே கேட்க வேண்டாமே!''

அவனுடைய தவிப்பைப் புரிந்து கொண்டு அவன் ஆறுதலுக்காக அவள் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டான். தலையை மெல்லக் கோதி விட்டான். கண் இமைகளையும், காது மடல்களையும் மெல்ல வருடினான். அந்த ஸ்பரிச உணர்வில் யாமினி மெய்ம் மறந்து போய், கண்களை மூடிக்கொண்டாள். உதடுகள் இலேசாகத் துடித்தன.

''இந்தா, இதை முதலில் சாப்பிடு.''

''உங்களுக்குத் தொழிற்சாலைக்குப் போக நேரமாகல்லியா?''

''ஆனால் ஆகட்டும்.''

The following particulars regarding the ownership of the 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication* : Madras
2. *Periodicity of its Publication* : Weekly
3. *Name of Printer and Publisher* :
   R. Ananthanarayanan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
4. *Name of Editor* : T. Sadasivam
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.*

Sri T. Sadasivam, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Srimathi M. S. Subbulakshmi, 20, Dr. Guruswami Mudaliar Road Chetput, Madras-31. Sri R. Ananthanarayanan, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Sri K. Rajendran, 1, Purushothama Mudaliar Road, Lake Area, Madras-34. Sri V. Vaidyanathan, 1-A/2, Tank Road, Nungambakkam Madras-34. Sri K. R. Ashmanathan, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Sri V. Murali, 34/7, Gajapathy Naidu Street, Lakshmipuram, Shenoynagar, Madras-30. Sri R. Kannan, 26/208, Sion-Matunga Road, Bombay-22

1-3-71 R. Ananthanarayanan, *Publisher*

''வேண்டாம்; போயிட்டுச் சீக்கிரமா வந்துடுங்கோ.''

''போனால் வர முடியாது. அதுவும் இன்னிக்கு.''

''என்ன இன்னிக்கு?''

''காமேசுவரன் வருவான். வரச் சொல்லியிருக்கேன். அவன் கணக்கை இன்னிக்கு முடித்துவிடலாம்னு இருக்கேன், ஒருவிதமாய்!''

'' அதாவது எப்படி முடிக்கிறது? அவர்கிட்டே வாங்கியிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துடறாப்பலேயா? இல்லே, பார்ட்னராகச் சேர்த்துக்கறாப்பலேயா?''

''பார்ட்னராச் சேர்த்துக்கறதாவது! சின்னதா இருந்தாலும் சொந்தமா இருக்கணும். இன்னொருத்தனைச் சேர்த்துக்கறது. அவனுக்குப் பதில் சொல்

விண்டிருக்கிறது, அவன் என் மேலே குதிரை ஏறப் பார்க்கிறது. முடியாட்டால் எனக்குக் குழி பறிக்கச் சமயம் பார்த்திண்டிருக்கிறது — எதுக்கு இந்தத் தலை வேதனையெல்லாம்? லாபமோ, நஷ்டமோ, கஷ்டமோ — சுகமோ என்னோடே போகட்டும். அதுக்குத்தான் வரச் சொன்னேன். அப்புறம்னு பல சங்கடங்கள் வரலாம். இப்ப அந்த வம்பு இல்லே, பார்!''

''அப்ப அதுக்குப் பணம் வேணுமே — பெரிய தொகையா!''

''வேணும்; அதுக்கு ஏற்பாடு பண்ணாமல் இருப்பேனா?''

'' எப்படி? அவ்வளவு பெரிய தொகைக்கு — இஷ்டர்னு!''

''இஷ்டர்னுதான். நான் நினைக்கவே இல்லே. அத்தனை பணத்தையும் அஜிதாவே கொடுக்கிறதா வந்திருக்காள். அதாவது வட்டியில்லாமே — வெறுமே மெதுவாத் திருப்பித் தராப்பலே!'' என்றான் பாஸ்கரன்.

மறுபடியும் அவள் பெயரைக் கேட்டதும் யாமினியின் பசிய முகத்திலே சூடான ரத்தம் பாய்ந்து பரவியது. உள் மனத்தினுள்ளே, 'இவள் என்னவோ நல்லதுக்கே இங்கே வரல்லே' என்று ஒரு குரல் பெரிதாக எழுந்தது.

'' என்ன பேச்சைக் காணோம்? அது உனக்குப் பிடிக்கல்லே, இல்லே?''

''அது என்னமோ எனக்குத் தெரியாது.....''

''இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? எங்கிட்டே உனக்கு நம்பிக்கை இருக்கோ, இல்லையோ?''

யாமினி ஆறிப் போன காப்பியை எடுத்து மடக்கு மடக்கு என்று குடித்து விட்டு, ''இருக்கு.... இருக்கு......'' என்று கசந்து விழுங்கினாள்.

''அப்படியானால் சும்மா இரு. எல்லாம் எனக்குத் தெரியும். அநாவசியமாப் போட்டு அலட்டிக்காதே!'' என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கிச் சென்றான் அவன்.

அத்தியாயம் 44

அன்றைக்குப் பாஸ்கரன் சொன்னது போல, யாமினி எதற்கும் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல்தான் இருந்தாள். அப்படியும் ஒரோரு சமயங்களில் எத்தனை ஆசையோடு அவசரமாக வீரசோழபுரத்திலிருந்து அவனைப் பார்க்க விரைந்து வந்தாளோ, அத்தனை வேகமாக நிராசையோடு இப்போது ஊருக்கே திரும்பிப் போய் விட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. காரணம் பாஸ்கரன் என்னதான் அவளிடம் அந்தரங்கமான பிரியத்துடன் நடந்து கொண்டாலும் அவன் முன்போல் இல்லை என்று அவள் மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது. அவள் வரையில் அவன் முற்றிலும் மாறித்தான் போயிருந்தான்; அதில் சந்தேகமில்லை.

அவளுக்கு மாதம் ஆக ஆக, அவனுடைய போக்கில் மாறுதல் இருந்ததை அவள் தெளிவாகக் கண்டாள். அவன் இரட்டை வேஷம் போட்டு வருவதாக அவளுக்குப்பட்டது. அவன் இயல்பாக இல்லாமல் தன்னிடம் எதையோ மறைப்பது போல அவளுக்குத் தோன்றிற்று. தொழிற்சாலை இரண்டு மாதங்களுக்குள்ளாக எதிர் பார்த்ததைவிட வேகமாக வளர்ச்சி யடைந்திருக்கலாம். ஆனால் அவனுடைய நேரத்தையெல்லாம் இவ்வளவு தூரம் அதுவே எடுத்துக் கொண்டிருந்தது என்பதை அவளால் நம்ப முடியவில்லை. அவனும் அஜிதாவும் இப்பொழுதெல்லாம் அடிக்கடி சந்தித்து வருகிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும். இருந்தாலும் இரண்டு மூன்று முறை அவள் தொழிற்சாலைக்கு 'போன்' செய்தபோதெல்லாம் பாஸ்கரன் ஏதோ ஒரு பிரிவில் வேலை செய்து கொண்டுதான் இருந்தான். எப்பொழுதுதான் அவர்கள் சந்திக்கிறார்களோ, தெரியவில்லை. காரணமில்லாமல் அடிக்கடி போன் செய்து கொண்டிருக்கவும் வழியில்லை. அந்த அளவுக்குப் பாஸ்கரனை வேவு பார்க்கத் துணிவதை அவளே முதலில் வெறுத்தாள். உண்மை தெரிந்தால் பாஸ்கரனும் அதைத் தப்பாக எடுத்துக் கொள்வான். ஆனாலும் அவனும் அஜிதாவும் சந்தித்துக் கொண்டுதான் இருந்தார்கள். அது அவளுக்குத் தெரியும். கேட்டால் பாஸ்கரன் மறைப்பான்.

''இன்னிக்கு அஜிதா தொழிற்சாலை பக்கமே வரல்லே போலிருக்கே!''

''இல்லையே; வந்திருந்தாளே!''

''ஏதாவது விசேஷம் உண்டா?''

''ஊகும். சும்மாத்தான் வந்தாள். உட்கார்ந்திருந்தாள். எனக்கு ஏது பேச நேரம்? எழுந்திருந்து போயிட்டாள்.''

''இதுக்காகவா ஒருத்தி வருவாள், வேலை மெனக்கெட்டு!''

''வீட்டிலே என்ன வேலை? 'போர்' அடிச்சால் இப்படி எங்கேயாவது வர வேண்டியதுதானே?''



பத்மபூஷண்
ஸ்ரீமதி கங்குபாய் ஹனகல்
பாடகி (மைசூர்)



பத்மபூஷண்
அமீர்கான், பாடகர்
(மகாராஷ்டிரம்)



பத்மபூஷண்
நிஸார் ஹுசைன் கான்
பாடகர் (உத்தரப்பிரதேசம்)

இப்பொழுதெல்லாம் அவள் கணவன் வீட்டுக்கு ஏன் போகவில்லை என்கிற பேச்சே யாரும் பேசுவதில்லை. அவள் இனிப் போக மாட்டாள் என்பது முடிவாகிவிட்ட விஷயம் போல் தோன்றியது. பணம் சம்பந்தப்பட்ட விவகாரம் என்றும் நடத்தை சம்பந்தப்பட்ட தகராறு என்றும் ஏதோ அரசப்புரசலாக ஒரு பேச்சு அடிபட்டு, அதுவும் கிட்டத்தட்ட ஓய்ந்துகூடப் போய்விட்டது. எப்படியோ அவள் கையில் சில லட்சங்கள் சிக்கிக் கொண்டு விட்டன என்ற பேச்சு மட்டும் உண்மையாகவே இருக்கும் போலிருந்தது. அதைப் பாஸ்கரனிடம் அஜிதாவே சொல்லியும் இருந்தாள். எப்படி, ஏது என்று அதைப் போய்க் கேட்க முடியுமா? கேட்டால்தான் அவள் சொல்லி விடுவாளா? எதை நினைத்துக் கொண்டு காமேசுவரனுக்குச் சேர வேண்டிய பணத்தை அவள் பாஸ்கரனுக்குக் கடனாக உதவினாளோ, என்னவோ! யார் கண்டது? பாஸ்கரனுக்கே அவள் உதவ முன்வந்தது ஆச்சரியமாகத்தான் இருந்தது. அப்போது அவள் நாகலக்ஷ்மி மாமியின் பெண்ணாகத் தோன்றவில்லை; நாகநாத மாமாவின் பெண்ணாக விளங்கினாள். அபிமானத்துக்காகக் கொடுத்து உதவுகிற குணம் அந்த மாமாவுக்குத்தான் உண்டு. அஜிதாவுக்கு அந்த அபிமானம் எல்லாம் தெரியாவிட்டாலும் அவசியத்தை முன்னிட்டாவது அவனுக்குக் கொடுத்து உதவலாம் என்று தோன்றிற்றே, அதுவே பெரிய குணம் இல்லையா?

ஆனால் யாமினிக்கு இது முதலை வாயிலிருந்து தப்பி, கரடியின் பிடியில் அகப்பட்டுக் கொண்டு விட்டது போல இருக்குமோ என்ற பயம் உள்ளூற உண்டு. இல்லாவிட்டால் வேறு ஏதாவது உள் நோக்கம் வைத்துக் கொண்டு உதவி செய்ய வந்திருப்பாளோ என்ற சந்தேகமும் இருந்தது. எப்படியிருந்தாலும் இவள் நல்லதுக்கு வரவில்லை என்பது வரையில் யாமினிக்கு நிச்சயம் தான். ஒன்றரை லட்சம் ரூபாய் என்பது என்ன சின்னத் தொகையா? அஜிதாவும்தான் என்ன, அந்தப் பணத்தின் உண்மையான மதிப்புத் தெரியாதவளா? இரண்டும் இல்லை என்பதுதான் யாமினியின் பயமெல்லாம். அவள் எதன் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறாளோ, யாருக்குத் தெரியும்? அதை எப்படிச் சாதித்துக் கொள்வாளோ, யார் கண்டார்கள்?

புதிய தொழிற்சாலை திறப்பு விழா நடந்தபோது யாமினி இவ்வளவு தூரம் நினைக்கவும் இல்லை; நிலைமை அவ்வளவு மோசமாகவும் இல்லை. இருந்தாலும் அப்போதே சில சில்லறை நிகழ்ச்சிகள் அவள் மனத்துக்குப் பிடிக்கவில்லை. அந்நிய நாடுகளுக்கெல்லாம் போய்ப் படித்துவிட்டு வந்த கணவன்; அவன் எண்ணத்திலும் பழக்கத்திலும் சில குற்றம் குறைகள் ஏதாவது தென்பட்டிருக்குமானால் அதைப் பெரிதுபடுத்திக் கொண்டு வேதனைப்படுவதில் அர்த்தமில்லை என்பதை அவள் உணர்ந்தேயிருந்தாள். அப்படிப்பட்ட கணவனிடம் எந்த எந்த அம்சங்களில் எத்தனை தூரம் விட்டுப் பிடித்துப் பார்க்க வேண்டும் என்பது அவளுக்கு ஓரளவு தெரிந்துதான்

இருந்தது. அடபடியும் ஒரு நிதானம் பிடிபடாமல், அவனோடு ஈடு கொடுத்துப் போகவும் முடியாமல் பல சந்தர்ப்பங்களில் அவள் பின்தங்கியும் விலகியும் இருக்க வேண்டித்தான் இருந்தது. அந்த அளவுக்கு அவள் இன்னும் முற்போக்குப் பெறவில்லை. அப்படி முன்னேறவும் அவள் விரும்பவில்லை.

* * *

அந்தத் திறப்பு விழாவின் போது யாமினி வண்ணக் கொடியைப் போலத்தான் வந்திருந்தாள். அவள் வந்து விழாவில் அழகாக நடந்து கொண்டதில் பாஸ்கரனுக்குப் பெருமை என்றும் தெரிந்தது. ஆனால் யாமினிக்குத்தான் கொஞ்சம் சங்கடமாகப் போய்விட்டது. மந்திரிகளையும் மற்றப் பிரமுகர்களையும் வரவேற்று உபசரிக்க வேண்டிய இடங்களில் அஜிதாவுக்குத்தான் யாமினியை விட அதிகமான பங்கு இருந்தது. யாமினி கொஞ்சம் பின்னணியில்தான் இருக்க வேண்டி வந்தது. அஜிதா மட்டும் இல்லாமல் போயிருந்தால், யாமினியின் பாடு திண்டாட்டமாகத்தான் போய் இருக்கும். பம்பாய் டாஜ் ஹோட்டலிலும் தில்லி அசோகா ஹோட்டலிலும் விருந்தினர்களை வரவேற்று உபசரித்துப் பழகியவள் அஜிதா. மிகவும் முக்கியமான விருந்தினர்களிடையே பட்டாம் பூச்சிபோல் கவர்ச்சியாகக் கலந்து பழகுவதிலும் மிகத் திறமையாக அவர்களை நிர்வகிப்பதிலும் அவளுக்கு இருந்த தனித் தேர்ச்சியைக் கண்ட யாமினி பின்னணியில் இருப்பதையே விரும்பினாள். பாஸ்கரன் எதற்கெடுத்தாலும் அஜிதாவின் உதவியை எதிர்பார்த்தது அவளை உறுத்திக் கொண்டேயிருந்தது.

''இன்னிக்கு வந்திருந்த மந்திரி இந்த ஏ. ஐ. ஸி.யை மறந்தாலும் உங்க அஜிதாவை என்னிக்கும் மறக்கவே மாட்டார். அப்படின்னு அவள் உபசரிணியாக இருந்து பிரமாதப்படுத்தி விட்டாள். அவளை யாருன்னு சொல்லி அறிமுகப்படுத்தினீர்கள்?'' என்று அன்று இரவு கேட்டாள் யாமினி.

''அவள் எனக்குக் 'கஸின்' ஆச்சே! அப்படித்தான் சொன்னேன்!''

''கஸின்னு சொன்னா எப்படி வேணும்னாலும் வச்சுக்கலாம். நம்ம நாட்டிலே அது ஒரு விவஸ்தை கெட்ட வார்த்தையாப் போச்சே!''

''இருக்கலாம். ஆனால் மந்திரிக்கு இங்கிலீஷ் என்ன, விவஸ்தையைப் பற்றியும் அவ்வளவாத் தெரிஞ்சிருக்காது!'' என்றான் பாஸ்கரன்.

''அஜிதாவுக்கு மட்டும் தெரியுமோ?'' என்று வாய்க்குள் கேட்டுக் கொண்டாள் யாமினி. அவன் காதுபடக் கேட்க வில்லை. அப்படிக் கேட்டால் பெரிய வம்பாகப் போய்விடும் என்று அவளுக்குத் தெரியும்.

அதுமுதல் பாஸ்கரன் அஜிதாவின் வீட்டுக்குப் போவதும் அவள் தொழிற்சாலைக்குப் போவதும் சர்வ சாதாரணமாகிவிட்டன.

''அவள் எதுக்கு நினைச்சபோதெல்லாம் தொழிற்சாலைக்கு வரணும்? அடிக்கடி வந்தால் உங்க உதவியாளர்கள் எல்லாரும் என்ன நினைப்பார்கள்? அப்படி உங்களைப் பார்க்கணுமானால் இங்கே வீட்டுக்கு வரதுக்கு என்ன?'' என்றாள் யாமினி.

'' அது அவளைத்தான் கேட்கணும். அவள் அங்கே வரதுனாலே லாபம் எனக்குத்தான். இன்னும் ஒரு லட்சம் வேணும்னாலும் உடனே கிடைக்கும். இங்கே வரதுனாலே யாருக்கு என்ன லாபம்?''

'' ஓ! அது அப்படியா? எதுவாய் இருந்தாலும் எனக்கு இதனாலே நஷ்டம் வராமல் இருந்தால் சரி. நான் வேண்டிக்கிறதெல்லாம் அவ்வளவுதான்!''

''வேண்டிக்கோ! ஏதாவது காணிக்கை வேணும்னாலும் செலுத்து! நான் வேண்டாங்கலே!'' என்றான் பாஸ்கரன்.

''கட்டாயம். எனக்காக இல்லாவிட்டாலும் வயத்திலே இருக்கிறதுக்காகவாவது வேண்டிக்கிறேன்!'' என்றாள் யாமினியும்.

இதற்குள் டெலிபோன் மணி அலறியது.

''நாகநாதன் கம்பெனி ராமாநுஜம் பேசறேன். சார் இருக்காரா?''

'' இருக்காரே, என்ன விஷயம்?''

'' ரொம்ப முக்கியமான விஷயம். நாகநாதன் சார் காலமாயிட்டார்!''

''அடடே, எப்ப?''

''இப்பத்தான் கொஞ்ச நேரம் முந்தி. முதல்லே உங்களுக்குத்தான், அதாவது பாஸ்கரன் சாருக்குத்தான் அஜிதா அம்மா போன் பண்ணச் சொன்னாங்க!''

'' இருங்கோ, இதோ அவரே வர்றார். நீங்களே முதல்லே சொல்லிடுங்கோ!'' என்று பாஸ்கரனிடம் ரிஸீவரைக் கொடுத்தாள் யாமினி.

அதே சமயம் அஜிதாவிடமே ரிஸீவரைக் கொடுத்தான் ராமாநுஜம்.

(தொடரும்)

மோகனப் புன்னகை
கோலினஸ் புன்னகை



மூச்சினில் மிளிரும தூய்மை
மலரும் நாணிடும் அருமை!

K-23

தூய இன் மூச்சு! பளிச்சிடும் பற்கள்!
மோகனப் புன்னகை!
கோலினஸ்—வாழ்வுக்கு இனிமை
கூட்டி வாழ்விக்கும் பெயர்!

**காலையிலும் இரவிலும் கோலினஸ் சூபர் ஒயிட்
பற்பசையால் பல் துலக்குங்கள்.**

ஆஹா...கோலினஸ் சூபர் ஒயிட் டூத்பேஸ்ட்

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.



32. இதயத் தவிப்பு

புது டில்லியில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் ஒரு தனி அறையில் காந்தாமணிக்காகக் காத்திருந்தான், தண்டாயுதபாணி. காந்தாமணியைக் கண்டதும் சிறி எழுந்தான்.

"உனக்குக் கொடுத்த பத்து நாட்கள் தவணையும் முடிந்து ஒரு வாரம் ஆகப் போகிறது. இன்னும் நீ கட்சியின் கட்டளையை நிறைவேற்றவில்லை" என்றான் கோபத்துடன்.

"சந்தர்ப்பமே சரியாக வாய்க்கவில்லையே!" என்றாள் காந்தாமணி.

"பொய்.... நான்கு முறை சந்தர்ப்பம் கிடைத்தது. வேண்டுமென்றே விட்டு விட்டாய்! பார்லிமெண்டுக் கான்டீனில் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கூட நீயாக வீணாக்கி விட்டாயே. தேநீரில் விஷம் கலந்த பிறகு அதை முரளியிடம் கொடுக்காமல், கைதவறிக் கொட்டியது போல் மேஜையின் மீது கோப்பையைக் கவிழ்த்தாயே....!"

இதைக் கேட்டதும் காந்தாமணியின் முகம் கறுத்தது. கண்களில் பயத்தின் சாயல் படர்ந்தது. "இது உங்களுக்கு....?" என்று சற்று நடுக்கத்துடன் கேட்டாள்.

"உன்னைத் தொடர்ந்தேதான் வந்து கொண்டிருக்கிறேன்...... கிராண்ட் ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய் விருந்து வைத்தாயே! அந்தச் சந்தர்ப்பத்தைக் கூடவா நழுவ விட வேண்டும்? சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று பொய் வேறு சொல்கிறாய்!" என்று கோபத்தில் கூச்சலிட்டான் தண்டாயுதபாணி.

"இந்தப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். என்னை விட்டு விடுங்கள்" என்றாள் காந்தாமணி, பதற்றத்துடன்.

"இது தலைவரின் கட்டளை. என்ன காரணத்துக்காகவோ கட்சி, இந்த விஷயத்துக்கு உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. உன்னுடைய கடமையை நீயேதான் நிறைவேற்றித் தீரவேண்டும்" என்றான் தண்டாயுதபாணி, கடுமையாக.

காந்தாமணியின் கண்கள் கலங்கின.

"என்னால் முடியாது.... இந்த ஒரு விஷயத்தில் என்னைக் கட்டாயப் படுத்த வேண்டாம்" என்றாள்.

"ஏன் முடியாது?" என்று இரைந்து கூச்சலிட்டான் தண்டாயுதபாணி.

"மூன்று முறை முயன்றும் என்னால் முடியவில்லை.... எனக்குத் தைரியம் வரவில்லையே!" என்று கூறிவிட்டு அழுதாள் காந்தாமணி.

"போலீஸ் படையை எதிர்த்து நின்று போரிட்டவளுக்கா இது முடியவில்லை? நீ பாசாங்கு செய்கிறாய்!" என்றான் தண்டாயுதபாணி. காந்தாமணி அழுது கொண்டிருந்தாள்.

"நல்லதம்பி சொன்னது சரிதான். உனக்கு முரளி மீது ஒரு கண். அவனோடு ஓடிவிடத் திட்டம் போட்டிருக்கிறாய்" என்று குற்றம் சாட்டினான் தண்டாயுதபாணி

"அப்படி நான் ஓடவும் முடியாது. முரளிக்குத் திருமணம் ஆகிவிட்டது" என்றாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"என்ன உளறுகிறாய்?"

"ஹோட்டலில் அவருடன் தங்கியிருக்கும் நபர், அவருடைய மனைவி சாரதா."

"ஆ....! சாரதாவா....? நம்முடைய சாரதாவா...." — வியப்புடனும், பரபரப்புடனும் கேட்டான்.

"எந்தச் சாரதாவோ? அங்குள்ள வேலையாள் 'சாரதா' என்றான். அவருடைய மனைவியாம்."

தண்டாயுதபாணி எதையோ சிந்தித்தவண்ணம் மௌனமாயிருந்தான். பிறகு காந்தாமணியிடம் சொன்னான்:



''கட்சியின் கட்டளையை அலட்சியப்படுத்துகிறாய்.''

'' இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என்னை விட்டு விடுங்கள். இந்தப் பொறுப்பை வேறு யாரிடமாவது ஒப்படையுங்கள்.''

''இதை முதலிலேயே தலைவரிடம் நீ கூறுவதுதானே? இத்தனை நாட்களைக் கடத்தி விட்டு இப்போது சொன்னால்? தலைவரிடம் இதுபற்றிக் கூறித் தகவல் பெறுவதற்குள் முரளி ஊருக்குத் திரும்பி விடுவான். இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதை இழக்க முடியாது.''

''இன்னும் உனக்கு மூன்று நாட்கள்தான் தவணை. அதற்குள் நீ கடமையை நிறைவேற்றித் தீர வேண்டும்.''

''முடியாது!'' — காந்தாமணி தலையை நிமிர்த்திப் பிடிவாதத்துடன் சொன்னாள்.

''முடியாதா ?'' — தண்டாயுதபாணி கர்ஜித்தான்.

''முடியவே முடியாது'' என்றாள் காந்தாமணி அழுத்தமாக.

தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள்
குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர்.
குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள்
ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்.



காத்துக் கொள்வீர்
கண்டிப்புடனே.
எப்போதும் ஒரு புட்டி
உங்கள் கைவசமிருக்கட்டும்

உட்வர்ஸ் கிரைப் வாட்டர்
நூறு ஆண்டுகளுக்கு மேலாக
புத்திசாலித் தாய்மார்களால்
உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM

'' அதற்கு நான் என்ன செய்யட்டும்?'' என்றாள் காந்தாமணி மிகுந்த எரிச்சலுடன்.

''கட்டளையை நிறைவேற்றுவது உன் பொறுப்பு.''

''என்னால் முடியாது.''

''முடியுமோ, முடியாதோ! மூன்று நாட்கள் தவணை தருகிறேன். நிறைவேற்றவில்லை என்றால் இதோ பார்'' என்று கூறிக் கொண்டே தண்டாயுதபாணி, மடியில் ஒளித்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக் காட்டிவிட்டு, ''தில்லியை விட்டு நீ உயிருடன் திரும்ப முடியாது !'' என்று கடுமையாகச் சொல்லிவிட்டு, துப்பாக்கியை மடியில் மறைத்தவாறு வெளியேறினான்.

காந்தாமணி பிரமை பிடித்தவளைப் போல் பதுமையாக அமர்ந்திருந்தாள். அவளுடைய மனத் திரையில் முரளியின் முகம் தோன்றிச் சிரித்தது.

• • •

மறுநாள் காலையில், நாடாளுமன்ற வாசலிலேயே முரளியைச் சந்தித்தாள், காந்தாமணி. சீனர்களின் தாக்குதல் இந்திய எல்லையில் கடுமையாகி விடவே, எல்லாருடைய முகத்திலும் கவலை தோய்ந்திருந்தது. வடகிழக்கு எல்லைப் பகுதியிலும், லடாக் பகுதியிலும் சீனர்கள் புகுந்து கொண்டு முன்னேறுகிறார்கள் என்ற செய்தியால் தலைநகர் பரபரப்படைந்திருந்தது.

நாடாளுமன்ற அங்கத்தினர்கள் இது பற்றியே வராந்தாவில் பேசிச் சச்சரவிட்டுக் கொண்டிருந்தார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் ஆளுங் கட்சியையும், பிரதமரையும் தாக்கிப் பேசினார். முரளி குறுக்கிட்டுச் சொன்னான்: ''யார் மீதும் குறை கூறிப் பயனில்லை. சீனாவை நேரு மிகவும் நம்பி விட்டார். செஞ்சீனாவுக்கு இந்தியா மீது என்றுமே நல்லெண்ணம் இல்லை. நேருவை முதலாளித்துவ வர்க்கத்தின் கைக்கூலி என்றது. நேரு, தம்மை ஆசியாவின் தலைவராக எண்ணிக் கொண்டிருக்கிறார் என்று குற்றம் சாட்டியது. அப்படியிருந்தும் ஒருமுறை லண்டன் ரேடியோவில் நேரு பேசும்போது, 'இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் நட்பு உண்டு, எங்களுக்குள் அபிப்பிராயபேதங்கள் உண்டு. சில்லறைச் சச்சரவுகளும் உண்டு; ஆனால் கடந்த காலத் தொடர்பை எண்ணிப் பார்த்தால், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள உதவும்' என்றார். இவருடைய அன்பையும், நட்பையும் அப்போதே சீனா உதறியது.

தேர்தலின்போது ஒரு வாக்காளருக்கு ஒரு வேட்பாளர் நூறு ரூபாய் கொடுத்தார். இன்னொருவர் இருநூறு ரூபாய் கொடுத்தார். வாக்காளர் நூறு ரூபாய் கொடுத்தவருக்கு வோட்டுப் போட்டார். அவர் சொன்ன காரணம் - ''அவர்தான் குறைவாக லஞ்சக் குற்றம் செய்தார்.''



இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி-பாபு

அப்போதே நிலைமையை நாம் உணரத் தவறி விட்டோம். நேருவே இதை ஒப்புக் கொண்டு விட்டாரே. 'நம்மைப் பற்றிய கற்பனை உலகிலேயே வாழ்ந்து கொண்டிருந்து விட்டோம். இன்றைய உலகப் போக்கின் உண்மை நிலையை அறியாமலிருந்து விட்டோம்' என்று நேற்றுக் கூறினாரே. நம்முடைய நல்ல மனத்தைப் புரிந்து கொள்ளும் பெருந்தன்மை, அண்டை நாட்டுக்கு இல்லாமல் போய்விட்டது; துரதிர்ஷ்டம்தான்.''

'' நம்முடைய நடுநிலைமைக் கொள்கைதான் நம்முடைய துன்பத்துக்குக் காரணம்'' என்றார் ஓர் அங்கத்தினர்.

இந்தச் சமயத்தில் மன்றம் கூட ஆரம்பிக்கவே எல்லாரும் கூட்டத்துக்குள் விரைந்தனர்.


நாடாளுமன்றக் கூட்டம் முடிந்ததும் எல்லாரும் கலைந்து வெளியேறினார்கள். முரளியின் மனம் மிகுந்த வேதனைக்குள்ளாகி யிருந்தது. நேருவின் கவலை தோய்ந்த முகம் அவனுடைய மனக் கண்ணில் தோன்றி வேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

'' என்ன காரணமாயிருந்தாலும், இந்த நாட்டுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் துன்பம் நியாயமற்றது '' என்று முனகியபடியே நடந்தான் முரளி.

'' இன்று என்னுடன் சாப்பிட வாருங்கள் '' என்று அழைத்தாள் காந்தாமணி. மன வேதனைப்பட்டுக் கொண்டிருந்த முரளிக்கு அவளுடைய அழைப்பு சற்று ஆறுதலாயிருந்தது. அவளைத் தொடர்ந்து சென்றான்.

இருவரும் கிராண்ட் ஹோட்டலுக்குச் சென்றார்கள். காந்தாமணியின் அறையிலேயே வேலையாள் சாப்பாட்டைக் கொண்டு வந்து பரிமாறினான்.

அன்று காந்தாமணி அமைதியற்றிருந்தாள். அடிக்கடி அவள் கண்கள் முரளியைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இரண்டு மூன்று முரளிக்குப் பரிமாற அவள் யத்தனித்த போது, பாத்திரம் கைதவறி



புதுப் படம் திரையிடும்பொழுது பத்திரிகையாளர்களையும் பிரமுகர்களையும் அழைத்து முன்னோடிக் காட்சி காட்டுவது திரையுலகச் சம்பிரதாயம். ஆனால் 1954ம் ஆண்டு சென்னைத் தியேட்டர் ஒன்று புதுமைப் புரட்சி செய்தது. சென்னையில் உள்ள டாக்ஸி டிரைவர்களையெல்லாம் அழைத்து முன்னோடிக் காட்சிக்கு ஏற்பாடு செய்தது. திரையிடப்பட்ட படம் 'டாக்ஸி டிரைவர்'. திரையிட்ட தியேட்டர் திருவல்லிக்கேணிப் பகுதியில் உள்ள ஸ்டார் டாக்கீஸ். ரா. வி.

விழுந்தது. வழக்கமாகக் காணப்படும் மலர்ச்சி, அவள் முகத்தில் இல்லை.

''உங்களுக்கு உடல் சரியில்லையா?'' என்று முரளி கேட்டான்.

''இல்லையே!'' என்றாள் காந்தாமணி. பேசும் போது குரல்கூடச் சற்று நடுங்கியது.

''என்னைச் சாப்பிடச் சொல்லிவிட்டு நீங்கள் சரியாகவே சாப்பிடவில்லையே? முகமும் வாடிப் போயிருக்கிறது'' என்றான்.

''எனக்கு ஏனோ இன்று பசியில்லை'' என்றாள் காந்தாமணி. சிரிக்க முயன்றாள். சிரிப்பில் உயிர் இல்லை. அவனையும் அறியாமல் அவள் உடல் சிறிது நடுங்கியது.

''எனக்கும் பசி இல்லைதான். சீனாக்காரன் எல்லையைவிட்டு என்று போகிறானோ அன்றுதான் பசிக்கும்'' என்று கூறிவிட்டுச் சோகமாகச் சிரித்தான் முரளி.

மத்தியானம் மூன்று மணிக்குக் காந்தாமணியிடம் விடைபெற்றுக் கிளம்பும் போது அவனிடம் ஒரு கடிதத்தை உறையிலிட்டுக் கொடுத்தாள்.

''இதை இப்போது படிக்காதீர்கள். உங்கள் அறைக்குப் போன பிறகுதான் படிக்க வேண்டும்'' என்றாள்.

முரளி திகைப்புடன் அவளை வெறிக்கப் பார்த்தான்.

''என்ன இது?'' — குழப்பத்துடன் கேட்டான். காந்தாமணியின் உதடுகளில் சோகப் புன்னகை தோன்றியது.

''உங்கள் மனம் இன்று சரியில்லை. என்னால் உங்களுக்கு ஏதாவது உதவி தேவையிருந்தால்....'' என்று தயங்கியபடியே கூறினான் முரளி.

காந்தாமணி கலங்கிய கண்களுடன் அவனைப் பார்த்தாள்.

''மிஸ்டர் முரளி! எனக்கு ஒரு உதவியும் தேவையில்லை. இன்று என் மனம் ஒரு நிலையில் இல்லை. தயவுசெய்து இப்போது காரணம் கேட்காதீர்கள். இதை உங்கள் அறைக்குப் போன பிறகுதான் பிரித்துப் பார்க்க வேண்டும். அதற்கிடையில் பிரிக்கவே கூடாது'' என்றாள். இதைச் சொல்லும் போது காந்தாமணியின் கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் வடிந்தது. முரளி திடுக்கிட்டான். செய்வதறியாது திகைத்துப் போய் அவளையே பரிதாபமாகப் பார்த்தவாறு நின்றான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள். என்னையும் மீறிக் கண்ணீர் வந்து விட்டது. இது என்னுடைய சொந்த விஷயம். தயவுசெய்துஇப்போது எதைப்பற்றியும் கேட்காதீர்கள்'' என்றாள் காந்தாமணி.

முரளி கடிதத்தைப் பைக்குள் வைத்துக் கொண்டு குழம்பிய மனத்துடன் அறை வாசலை நோக்கி நடந்தான்.

''மிஸ்டர் முரளி....''—காந்தாமணி கூப்பிட்டாள்.

முரளி திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். ''எனக்கொன்று தருவீர்களா?'' என்று கெஞ்சுவது போல் கேட்டாள்.

''எதை வேண்டுமானாலும் கேளுங்கள்'' என்று கனிவோடு கூறிக் கொண்டே அவளை நெருங்கி வந்தான் முரளி.

''உங்கள் மோதிரத்தைத் தர முடியுமா?'' என்று கேட்டாள் காந்தாமணி.

முரளி சட்டென்று மோதிரத்தைக் கழற்றி அவளிடம் நீட்டினான். அதை வாங்கி மிகுந்த ஆவலுடன் தன்னுடைய விரலில் அணிந்து கொண்டாள். முரளி துணுக்குற்றான். இருந்தாலும், அவளுடைய செய்கையைத் தடுக்கவில்லை.

''இதை நானே வைத்துக் கொள்ளட்டுமா?'' என்று கேட்டாள் காந்தாமணி. முரளி தலையை அசைத்தான்.

முரளிக்கு அவளுடைய போக்குப் புரியவில்லை. தன்னுடைய அறையை நோக்கிப் போகும் போது, அவளுடைய செய்கையின் அர்த்தம் புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தான். தன்னை அவள் காதலிக்கிறாளோ என்றுகூட ஐயம் கொண்டான். சட்டைப் பையிலிருந்த அவளுடைய கடிதத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அவளுடைய காதல் கடிதத்தை எடுத்துச் செல்வதாக எண்ணிக் கொண்டு தனக்குள்ளேயே சிரித்தான்.

தான் தங்கியிருந்த ஹோட்டலை அடைந்த முரளி, தன்னுடைய


உங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்
பாலிலே உள்ளவை 9
காம்ப்ளான் 23சத்துக்களும் கொண்டது
Complan
கிளாக்ஸோ
ஆராய்ச்சியின்
உலகறிந்த தயாரிப்பு
Complan
காம்ப்ளான் — முழுமையான உணவு
சத்துப் பற்றுக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.

அறையை நோக்கி விரைந்தான். அறை வாசலை அடைந்ததும் திகைத்துப் போய் நின்றான். கதவைத் தொட்டதும், திறந்து கொண்டது. வழக்கமாக அறைக் கதவைச் சாரதா எப்போதும் உட்பக்கம் தாள் போட்டிருப்பாள். இப்போது, அறைக் கதவு தாளிடப் படாமல் சாத்தப்பட்டிருப்பதைக் கண்டு பதற்றமடைந்தான்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றதும் இன்னும் வியப்பில் ஆழ்ந்தான் முரளி. அறையினுள் சாரதாவைக் காணவில்லை. பதறிப் போய்ச் சுற்றுமுற்றும் பார்த்தான். வயிற்றில் ஏதோ புகுந்து புரள்வது போன்ற உணர்வு தோன்றியது. குபீரென்று உடல் வியர்த்துக் கொட்டியது. அறையோடு ஒட்டியிருந்த குளியலறையிலிருந்து ஏதோ ஒருவித ஒலி கேட்டது. பரபரப்படைந்த முரளி, விரைந்து சென்று குளியலறைக் கதவைத் திறந்தான். அங்கு கண்ட காட்சி, அவனை ஒரு கணம் பீதியுற வைத்தது.

சாரதாவை ஹோட்டல் வேலையாள் ஒருவன், கீழே தள்ளி அவள் மீது அமர்ந்து கொண்டு அவள் கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முதுகுப்புறம் மட்டுமே தெரிந்ததால் முகத்தைப் பார்க்க முடியவில்லை. முரளியின் திகைப்பு ஒரு கணந்தான் நீடித்தது. மறு கணம் குளியலறைக் கதவு பக்கத்திலிருந்த ஒரு சிறு ஸ்டூலை எடுத்துச் சாரதாவின்மீது அமர்ந்து கொண்டிருந்தவனின் தலையில் ஓங்கி அடித்தான்.

அடிபட்டவன் மயங்கிக் கீழே சாய்ந்து விடவே சாரதா திமிறிக் கொண்டு தள்ளாடியபடியே எழுந்து நின்றாள். அவள் உடல் வெடவெட வென்று நடுங்கிக் கொண்டிருந்தது. முரளியைக் கண்டதும் பாய்ந்து ஓடி வந்து அவனை இறுகக் கட்டிக் கொண்டாள். மறுகணம் மயங்கி அவன் மீது சரிந்து விழுந்தாள். (தொடரும்)

சாதனைகள் தொடரட்டும்!

சாதனை புரிந்த சர்தேசாய், 1962ல் மேற்கிந்தியத் தீவுக்குச் சென்ற கிரிக்கெட் கோஷ்டியில் இடம் பெற்றவர். கோவாவில் பிறந்த இவருக்கு மணமாகிக் குழந்தைச் செல்வம் உண்டு. பார்படாஸில் நடைபெற்ற கிரிக்கெட் மாட்சில் காப்டன் கண்டிராக்டர் பயங்கரப் பந்து வீச்சில் மண்டையில் அடிபட்டு மைதானத்தை விட்டு விலகினார். மஞ்சரேகருக்கும் தலையிலே அடி விழுந்து ரிட்டயரானார். உம்ரிகர் இந்தப் பந்தயத்தில் அடிபட்டு விலகினார். இந்திய பாட்ஸ்மன்களெல்லாம் மேற்கிந்தியத்தீவு கோஷ்டியின் பயங்கரப் பந்து வீச்சிலே தொல்லைகளுக்கு உள்ளானார்கள். அடுத்த டெஸ்ட் மாட்ச் இந்திய ஆட்டக்காரர்கள் ஆடுவார்களோ மாட்டார்களோ என்ற கவலை இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஏற்பட்டது. மூன்றாவது டெஸ்டில் இரண்டாம் இன்னிங்ஸில் ஜெய்சிம்மா பூஜ்யத்தில் மைதானத்தைவிட்டு விலகினார். ஆனால் சர்தேசாய் அச்சமயத்தில் விடாப்பிடியாக நின்று ஆடியது அனைவரையும் வியப்பிலாழ்த்தியது. அவர் இடது கை ஆட்டக்காரர் கார்டியோடு நின்று ஆடி, மஞ்சரேகரோடு நான்காவது நாள்வரை தாக்குப் பிடித்து, ரன்களை இரண்டு விக்கெட் நஷ்டத்துக்கு 104 எனக் கொணர்ந்தார். மேற்கிந்தியத் தீவு கோஷ்டியினர் எப்படியெப்படியெல்லாமோ சர்தேசாயை 'அவுட்'டாக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். சர்தேசாய் அபாரமாக ஆடி 60 ரன்களையும் எட்டிப் பிடித்தார். அன்று மூன்றாவது டெஸ்டில் தைரியமாக நின்று ஆடிய சர்தேசாய் இன்று கிங்ஸ்டனில் முதல் டெஸ்டில் பிரஸன்னாவோடு 212 ரன்கள் அடித்து ஜமாய்த்திருக்கிறார். 75 ரன்களில் ஐந்து விக்கெட்டை இழந்த இந்திய கோஷ்டிக்கு அவரது சாதனையினால் 387 வர முடிந்தது. அது மட்டுமல்ல; இந்த முதல் டெஸ்டில் சர்தேசாய் பல 'முதல்தர' சாதனைகளைக் கண்டிருக்கிறார். முதல் தடவையாக 'பிரஸ் பாக்ஸை' உடைத்ததுடன் வேறு பல ரிகார்டுகளையும் உடைத்தெறிந்திருக்கிறார். 'பிரஸ் பாக்ஸை'த் தாக்கிக் கண்ணாடியைப் பெயர்த்து. 'ஸிக்ஸரை'த் தாண்டிய போதிலும் அதற்கு மதிப்பு 'பவுண்டரி'தான். சபீனா பார்க் விதிப்படி பவுண்டரி எல்லை தாண்டித் தரையைத் தொடாத ஸிக்ஸருக்கு மதிப்பு குறைவுதானாம்! ஆனால் சர்தேசாயின் மதிப்பு இன்று கிரிக்கெட் உலகில் பன்மடங்கு உயர்ந்து விட்டது!

பம்பாய் ஆட்டக்காரரான திலீப் சர்தேசாய் வாட்டசாட்டமானவர்; வால்ஸ் மாவு மில்லில் அதிகாரி. பங்களூரில் 1960 - 61 ஆண்டில் பாகிஸ்தானுக்கெதிராக சர்வகலாசாலைக் கோஷ்டியில் ஆடி இவர் எடுத்த 106 'நாட் அவுட்' இவரது டெஸ்ட் பிரவேசத்துக்கு அஸ்திவாரம். பீல்டிங்கிலும் புலி.

இங்கிலாந்துக்குச் சென்ற இந்திய கிரிக்கெட் கோஷ்டியிலும் சர்தேசாய் இடம் பெற்றிருந்தார். அப்போது டி. என். சர்தேசாயைக் காப்டன் பட்டாடி ராணி எலிஸபெத்துக்கு அறிமுகப்படுத்தும் காட்சியைத்தான் 23ம் பக்கத்தில் பார்த்தீர்கள். லார்ட்ஸ் மாடியிலிருந்து உருண்டு சர்தேசாய் இங்கிலாந்தில் முதல் டெஸ்டில் ஆட முடியாமல் பிளாஸ்டர் போடப்பட்டது. இரண்டாம் டெஸ்டில் நன்றாக ஆடி 28 ரன்களை எடுத்தார். ஆனால் துரதிர்ஷ்டம்! மறுபடியும் ஸ்னோ வீசிய பந்தில் அடிபட்டு வெளியேறினார்; இந்தியாவுக்கே அவர் திரும்பும்படியாயிற்று. இந்தக் கை முறிவுக்குப் பிறகும் சர்தேசாய் தேறிப் பல டெஸ்ட் மாட்சுகளில் போடு போடென்று சரமாரியாக அடித்து ரன்களைக் குவித்து வருகிறார்.



இந்தியக் கோஷ்டியினர் மேற்கிந்தியத் தீவு கோஷ்டியை 217 ரன்களுக்குள் 'அவுட்'டாக்கி, மறுபடியும் தொடர்ந்து ஆடவைத்த பெருமையினை மெச்சாமல் இருக்க முடியுமா? பேடி, பிரசன்னா, வேங்கடராகவன் பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவு கோஷ்டி விக்கெட்கள் சடசடவென்று சரிந்ததைப் பாராட்டாமல்தான் இருக்க முடியுமா? முதல் டெஸ்ட் 'டிரா'வானாலும் கிங்ஸ்டன் டெஸ்டில் பல அரிய சாதனைகள் நிகழ்ந்துள்ளன. 158 ரன்கள் 'அவுட்'டாகாமல் ஆடிய கன்ஹாய்க்கும் 212 ரன்கள் எடுத்த சர்தேசாய்க்கும் பாக்கெட் பரிசுகள் ரூ. 2230 கிடைத்துள்ளன. அவர்கள் சாதனைகள் தொடரட்டும்!

— குண்டுமணி

வலையில் விழுந்த மான்*

ஸோமாஸ்

அந்த அறையின் மூலையில் சிலந்தி ஒன்று மிகவும் சுறுசுறுப்பாக வலை பின்னிக் கொண் டிருந்தது. விறுவிறு என்று நூலேணி வழி யாகக் கீழே இறங்கியும், மளமளவென்று மேலே ஏறியும், குறுக்கும் நெடுக்குமாக ஓடி யும் அது வலை பின்னும் நேர்த்தி பார்க்கப் பரவசம் ஊட்டுவதாக இருந்தது.

நாராயணன் ஈஸிச் சேரில் சாய்ந்த வண்ணம் அந்தச் சிலந்தி வலை உருவாவதையே உன்னிப் பாகக் கவனித் துக் கொண் டிருந்தான். இரண்டு மூன்று வருஷங்களா கவே நாரா யணனுடைய வேலை,பொழுது போக்கு எல் லாமே அந்த ஈஸிச்சேரில் சாய்ந்தபடி தன் சுற்றுப்புற நிகழ்ச்சிகளைக் கவனிப்பதாகத் தான் ஆகிவிட்டது. ஸ்கூட்டர் விபத்தில் அவன் கால்களுக்கு ஊனம் ஏற்பட்டு விடவே அவனால் வேலைக்குப் போக முடியவில்லை. வீட்டுக்குள்ளேயே கைத் தடியுடன் நிதானமாக நடமாடுவான். தன் காரியங்களை மெதுவாகக் கவனித் துக் கொள்வான். அவனுக்கு வயது முப்பத்திரண்டுதான். ஆனால் அதற்குள் ளாகவே உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறும்படியாகி விட்டது. பன்னிரண்டு வருஷ சர்வீசுக்கான சேமிப்பு நிதித் தொகை, கிராச்சுடி, உதவியாகக் கொடுத்த நிதி எல்லாம் படுவேகமாகக் கரைந்து கொண்டிருந்தன.

நாராயணன் தான் படித்த படிப்பை வீணாக்காமல் டியூஷன் வைத்துக்கொள்ள லாம் என நினைத்துத் தெரிந்தவர்களிடமெல் லாம் சொன்னான். அவன் ஒரு பி.ஏ.,வாத லால், எஸ். எஸ். எல். சி. வரையில் தைரிய மாக ஆங்கிலம், கணக்கு, தமிழ் முதலிய சப்ஜெக்டுகளைச் சொல்லித் தர முடியும் என்ற தைரியத்தில்தான் இந்த ஏற்பாட்டில் முனைந் தான். ஆனால் அவன் நினைத்ததுபோல் அது அவ்வளவு சுலபமாக இல்லை. பள்ளிக்கூட உபாத்தியாயர்களிடம் 'ட்யூஷன்' வைத்துக் கொண்டால்தான் பள்ளி மாணவர்களுக்குப் பரீட்சையில் தேறும் வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால் யாரும் நாராயணனிடம் ட்யூஷன் வைத்துக் கொள்ள வரவில்லை. மேலும் நாராயணன் வீட்டை விட்டு வெளி யில் போய் ட்யூஷன் சொல்லித் தர முடியா தாகையினால், ட்யூஷன் கிடைக்காததற்கு இதுவும் ஒரு காரணமாகி விட்டது. ஆகவே 'நாராயணா' என்று வீட்டிலேயே உட்கார்ந் திருப்பதைத் தவிர நாராயணனால் வேறொன் றும் செய்ய முடியவில்லை.

நல்ல வேளையாக நாராயணனுக்குக் குடும் பம் பெருகவில்லை. அவனும் அவன் மனைவி பத்மாவும்தான். இருந்தாலும் இவர்கள் இரு வரும் சாப்பிட்டாக வேண்டுமே. கொஞ்ச நாட்கள் வரையில் பத்மாவின் நகை நட்டுகள் வட்டிக் கடையில் அடைக்கலம் புகுந்தன. பாத்திரங்கள் ஒவ்வொன்றாய் மறைந்து கொண்டிருந்தன. அவன் மாமனார் வாங்கிக் கொடுத்த கட்டில், மேஜை, நாற்காலி, கோத் ரெஜ் பீரோ முதலிய சாமான்களெல்லாம் மறைந்து விட்டன.

இந்த நிலையில்தான் அவன் மனைவி பத்மா ஒரு யோசனை சொன்னாள். அவளுக்கு நல்ல முகவெட்டு இருந்தது. மூக்கும் விழியுமாகப் பார்க்க நன்றாக இருப்பாள். பள் ளிக்கூட நாடகங்க ளில் நடித்து நிறை யப் பரிசுகள்வாங்கி யிருக்கிறாள். போதாக் குறைக்கு நடனப் பயிற்சியும் உண்டு. ஏன் அவள் சினிமாவில் சேரக் கூடாது என்று பத்மா ஒரு நாள் கேட்டாள். அப்பொழுது நாராயணனுக்கு ஆயிரம் தேள்கள் கொட்டிவிட்டது போல் இருந்தது. துடித்துப் போய்விட்டான்.

''உங்களுக்கு இஷ்டம் இல்லாவிட்டால் வேண்டாம். நம்ம குடும்பம் படுகிற சிரமத்தை நினைத்துத்தான் இந்த யோசனையைச் சொன் னேன். இனி இந்த வீட்டில் விற்பதற்கோ, அடமானம் வைப்பதற்கோ ஒரு பொருளும் இல்லை. இன்னும் கடன் வேறு வைத்துக் கொண்டிருக்கிறோம். நாளைக் காலைக் காப் பிக்குச் சர்க்கரை இல்லை. காப்பிப் பொடியும் இல்லை. கரண்டியை எடுத்துக் கொண்டு எந்த வீட்டுக்கும் கடனுக்குப் போக முடியாது. எல்லா வீட்டுக்காரர்களுக்கும் நாம்தான்





தர வேண்டும். இந்த நிலையில்...''

''போதும், போதும் பத்மா! என் வேதனையைக் கிளறாதே...!'' என்று கூறி விட்டு நாராயணன் ஏணிச் சேரில் சாய்ந்து விட்டான்.

பத்மாவுக்குச் சினிமாவில் சேருவதற்கு ஆசை ஏற்பட்டதற்குக் குடும்பச் சூழ்நிலை மட்டும் காரணம் இல்லை. அவளோடு படித்த தனலட்சுமி இப்பொழுது சினிமாவில் சேர்ந்து சிறு சிறு பாகங்களில் நடித்துக் கொஞ்சம் பசையோடு இருக்கிறாள். அந்தத் தெருவில்தான் இருந்தாள். அவள் பெயர் இப்பொழுது தனலட்சுமி இல்லை. பூர்ணிமாதேவி! சினிமா வானில் ஜொலிக்க ஆரம்பித்த பிறகு அந்தப் பழைய பெயரைக் கட்டிக் கொண்டு அழ முடியுமா? தினந்தோறும் அவள் வீட்டுக்கு ஸ்டுடியோவிலிருந்து 'வான்' வரும். அதில் இன்னும் சில 'எக்ஸ்ட்ரா' நடிகைகள் இருப்பார்கள். கலகலவென்று சிரித்து, வளவளவென்று பேசி, அந்தத் தெருவையே கூடும்படி செய்து விடுவார்கள்.

பூர்ணிமாதேவி அப்படியொரு பெரிய நடிகை இல்லைதான். முதலில் கதாநாயகிக்குப் பணிப் பெண்ணாக வந்தாள். சில சரித்திர, புராணப் படங்களில் ராணிகளுக்கும், அந்தப்புரத் தேவிமார்களுக்கும் வெண்சாமரம், மயில் விசிறி ஆகியவைகளைக் கொண்டு விசிறினாள். பிறகு வயல்களிலும், வரப்புகளிலும், மலைப் பிரதேசங்களிலும் கதாநாயகியோடு குழு நடனங்களில் தோன்றிக் குதித்தாள். அப்புறம் தனியாகவே சில நிமிஷங்கள் கதாநாயகியோடு குதித்தாள். பிறகு ஒரு சமூகப் படத்தில் பணக்கார வீட்டு வேலைக்காரியாகத் தோன்றி அவ்வீட்டு வேலைக்காரனோடு ஜோடியாக நடித்தாள். அப்பொழுது அவளுடைய குறைந்த உடை, நிறைந்த சிரிப்பு, வெட்கமற்ற ஒட்டி உரசிய நடிப்பு ஆகியவை அவளுக்கு அடுத்த படத்திலேயே ஒரு குட்டி நட்சத்திர ஸ்தானத்தை அளித்துவிட்டன. போதாக் குறைக்கு இரண்டொரு விநாடிகள் வெள்ளித் திரையில் அவள் முகம் 'க்ளோஸப்' காட்சிகளில் கூடத் தெரிந்து விட்டதே! மேலும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில் ''சினிமாப் புகழ் பூர்ணிமாதேவி பரிசு வழங்குவார்'' என்று ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் போட்டு விட்டார்கள். அதன் பிறகு பூர்ணிமாதேவிக்கு ஒரு தனி 'ஸ்டார் வால்யூ' ஏற்பட்டு விட்டது.

இதையெல்லாம் பார்த்த பத்மாவுக்குக் கொஞ்சம் மனத்தில் சலனம் ஏற்பட்டது.

அந்தச் சமயம் பார்த்து, பூர்ணிமாதேவியின் வீட்டுக்கு 'வா'னுக்குப் பதிலாக ஸ்டுடியோவிலிருந்து கார் வர ஆரம்பித்தது.

பத்மாவின் மனம் மேலும் ஆட்டம் கண்டது. மெதுவாக ஒரு நாள் பூர்ணிமாதேவியின் வீட்டுக்குப் போனாள். அன்று நல்ல வேளையாக அவளுக்குப் படப் பிடிப்பு இல்லை. வீட்டில்தான் இருந்தாள். பத்மாவைக் கண்டதும் அன்போடு வரவேற்று சோபாவில் உட்கார வைத்து டிபன், காப்பி எல்லாம் கொடுத்தாள். அவள் வசதியாக வாழ்வதை அவ்வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருளும் தெளி



''இந்தாப்பா டிரைவர்! பிரேக் சரியாக இருக்கா? ஹெட் லைட், ரெட் லைட்டுகள் எரியுதா? டயர் வெடிக்காமல் இருக்குமா? ஹாரன் சரியாக இருக்கிறதா, பார்! நான் சென்ட்ரலிலிருந்து மவுண்ட்ரோடுக்கு உன் பஸ்ஸிலே ஏறிப் போகணும்.''

வாக எடுத்துக் காட்டியது. பத்மா தன்னுடைய நிலையை நினைத்துக் கூசிக் குறுகிப் போனாள். பூர்ணிமாதேவியின் நவநாகரிக உடை அலங்காரம் பிரமாதமாயிருந்தது. வயிறு தெரியப் படருக் கழுத்துடன் வெட்டப்பட்டிருந்த நைலான் 'ரவிக்' அவளைக் கவர்ச்சிப் பாவையாக எடுத்துக் காட்டியது.

''இப்பொழுது நான் முன்போல் இல்லே, பத்மா. இப்பொழுது ஒரு பிரபல நடிகருடன் இரண்டாவது கதாநாயகியாக நடித்துக் கொண்டிருக்கிறேன். ஆகையினால் என்னால் உனக்குச் சுலபமாகச் 'சான்ஸ்' வாங்கித் தர முடியும். நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டாள் பூர்ணிமாதேவி.

''எப்படியும் இன்று அவரிடம் சம்மதம் வாங்கி விடுகிறேன்...பிறகு அடுத்த வாரம் உன்னோடு வருகிறேன்...'' என்று பத்மா சொல்லிக் கொண்டிருக்கும்போதே பூர்ணிமா தேவி இடைமறித்தாள். ''இதோ பார். அவர் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பார். அவரால் உனக்கு ஒரு சுகமும் இல்லே. நீ சம்பாதிப்பதற்கும் குறுக்கே நிற்கிறார். நாளைக் காலை பத்து மணிக்கு ஒரு புதுப் படத்துக்குப் பூஜை போடுகிறார்கள். நீ என்னோடு வா. உனக்கு டைரக்டரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். புது முகங்களைத் திரையில் புகுத்துவதில் அவர் மிகவும் அக்கறை கொண்டவர். நீ தைரியமாக என் மேல் பழியைப் போட்டுவிட்டுப் புறப்பட்டுவிடு...''

மனத்தில் ஒரு திடமான உறுதியோடு பத்மா வீட்டுக்குப் போனாள்.

நாராயணன் ஈஸிச்சேரில் சாய்ந்து கொண்டிருந்தான். கவிரோர மூலையில் சிலந்தி வலை பின்னி முடித்துவிட்டது. இமைப்பொழுதில் என்று ஏதோ பறந்து பார்ப்பது போல் வலையில் இங்கும் அங்கும் ஓடிச் சர்க்கஸ் வேலை செய்தது சிலந்தி. மெல்லிய நூலில் பின்னப்பட்டிருந்த அந்த வலை வெகு நேர்த்தியாக அமைந்திருந்தது. மேலும் கீழுமாக நூலேணி வழியாக ஏறி இறங்கிக் கொண்டிருந்த சிலந்திக்குப் பசி வேளை போலும். வலையின் நடுவில் இருந்துகொண்டு நீரோடைக் கரையில், மீனுக்காகத் தவம் கிடக்கும் கொக்கைப் போல் தவம் இருந்தது.

நாராயணனுக்கு அப்படித்தான் தோன்றியது. சிலந்தியோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்த போது உள்ளமெல்லாம் கூசியது. 'இந்தச் சிலந்தி என்னைவிட எப்படியும் உயர்ந்ததுதான். ஒருவருடைய உதவியையும் நாடாமல் தன் வீட்டைத் தானே கட்டிக் கொண்டு விட்டது. தன் உணவையும் அது இதோ தானே தேடிக் கொள்ளப் போகிறது. என்னால் எனக்கே ஒரு பயனும் இல்லே. பிறருக்கோ துன்பம்தான்......'

சிலந்தியின் மெல்லிய வலையை நாடி ஓர் ஈ பறந்து வந்தது. ஈயைக் கண்ட சிலந்தி தன்னை உஷார்ப்படுத்திக் கொண்டது: பாய்வதற்குத் தயாராகக் கால்களை அகற்றி வைத்துக் கொண்டது. ஈ கொஞ்சம் நகர்ந்தது. சிலந்தியும் நகர்ந்தது.

நாராயணன் இந்த மௌன நாடகத்தை மிகவும் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

சினிமா நடிகை பூர்ணிமாதேவியைப் பார்க்கச்சென்ற பத்மா வெகு நேரமாகியும் வரக் காணோமே என்று நாராயணன் நினைத்தான். அவன் மனத்தில் ஒரு குமைச்சல் ஏற்பட்டு அடிவயிற்றுக்குள் என்னவோ செய்தது.

வெகு நேரமாக அசையாமல் இருந்த ஈ கொஞ்சம் நகர்ந்தது. சிலந்தியும் நகர்ந்தது.

நாராயணனின் கவனம் மீண்டும் அந்த அற்பப் பிராணிகளிடமே சென்றது.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தமும், அதைத் தொடர்ந்து காரின் கதவைத் திறக்கும் சத்தமும், பிறகு கலகல வென்ற கிண்கிணி நாதச் சிரிப்பும், அதையொட்டி 'டப் டப்' என்று காரின் கதவுகளைச் சாத்தும் சத்தமும் கேட்டன.

பத்மா உற்சாகம் பொங்கும் முகத்துடன் உள்ளே வந்தாள். நாராயணன் இந்த மாதிரி பொலிவான தன் மனைவியின் முகத்தைப் பார்த்து எவ்வளவு நாட்களாகி விட்டன! தாங்க முடியாத மன வேதனைக்கு இடையிலும் அவன் அந்த அழகுக் காட்சியைப் பார்த்து ரசிக்கத் தவறவில்லை. ஆனால் கூடவே ஒரு பெருமூச்சும் தொடர்ந்து வந்தது.

''என் தோழி பூர்ணிமா தேவியோடு இன்றைக்கு ஸ்டுடியோவுக்குப் போனேன்....''

''....போனாயா?'' கேள்வி ஈனசுரத்தில் வந்தது.

''.... வீட்டுக்கு வந்து உங்களிடம் சொல்லிக் கொள்ள 'டைம்' இல்லே....''

''அப்படியா....?''

'' உங்களுக்குக் கோபம் வரும் என்று எனக்குத் தெரியும்.....''

நாராயணன் பாயத் தயாராயிருக்கும் சிலந்தியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பத்மாவுக்குக் கோபம் வந்தது. ''சதா இப்படி மோட்டு வளையையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறதிலே பிரயோஜனம் எதுவும் இல்லே. குடும்பம் நடக்கிற வழியைப் பார்க்கணும். நான் உங்களைக் கேட்கா

மாதம் ஏழு.எட்டு.ஒன்பது நன்கு உட்காரும் குழந்தை என்பது



மூன்றாவது மாதத்திலிருந்து, உங்கள் குழந்தையின் போஷாக்குக்குப் பால் மட்டுமே போதாது. உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் தேவை—அதாவது, திட உணவு ஊட்ட முதற் படி. பாரெக்ஸிலுள்ள புரதச் சத்து உங்கள் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு மிகவும் உகந்தது.



பாரெக்ஸ் புத்தகத்தை இலவசமாகப் பெற,
25 பைசா தபால் தலையை இணைத்து,
டிபார்ட்மெண்ட் K-1, த.பெ. 16558,
பம்பாய் 18 டபிள்யூ.பி. என்னும் முகவரிக்கு
எழுதுக. (எந்த மொழியில் வேண்டுமென்று தெரிவிக்கவும்).

சீரான வளர்ச்சிக்குக் குழந்தையின் முதலாவது திட உணவு.

பாரெக்ஸ்®—க்ளாக்ஸோ தயாரிப்பு

மலே பூர்ணிமா தேவியிடம் சம்மதம் தெரிவிச்சுட்டேன். அவளோடு கூடப் போய் டைரக்டர் ஸாரையும் பார்த்தேன். என்னைப் பார்த்ததுமே அவர் ரொம்ப சந்தோஷப்பட்டார். 'சினிமாவுக்கு ஏற்ற நல்ல முகவெட்டு இருக்கிறது' என்ருர். 'பள்ளிக்கூட நாடகங்களிலே நிறைய நடிச்சிருக்கேன். டான்சும் தெரியும்' என்று சொன்னேன். 'இந்தப் படத்திலேயே உங்களுக்கு ஒரு சான்ஸ் தரேன், என்று உறுதியாகச் சொன்ஞர். படத்தின் பெயர் என்ன தெரியுமா ? மிகவும் புதுமையானது. 'வலையில் விழுந்த மான்' ! நன்ருயில்லே....... ?''

'''ரொம்ப நன்ருயிருக்கிறது. பொருத்தமாகவும் இருக்கிறது.....'' என்ருன் நாராயணன் மிகவும் தாழ்ந்த குரலில், தனக்குள் சொல்லிக் கொள்வது போல.

சுவர் மூலேயில் சிலந்தி இலேசாக ஆடிக்கொண்டிருந்தது.

''என்ன, சுரத்தில்லாமல் இருக்கிறீர்கள்? சினிமாவில் 'சான்ஸ்' தேடிக் கொண்டு எத்தனே அழகிகள் அலேகிருர்கள் தெரியுமா ? என்னேப் பார்த்த முதல் எடுப்பிலேயே டைரக்டர் எனக்குச் 'சான்ஸ்' தருவதற்குச் சம்மதித்ததைப் பார்த்து மற்ற நடிகைகளெல்லாரும் ஆச்சரியப்பட்டு என்னேச் சூழ்ந்து கொண்டு தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டனர். நீங்கள் என்னடாவென்ருல், எதையோ பறி கொடுத்தவர் மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு கொஞ்சம் கூட உற்சாகம் இல்லாமல் மோட்டு வளேயைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்... சரி, போகட்டும். நாளேக்குக் காலே பத்து மணிக்கு ஸ்டுடியோவுக்கு என்னே வரச் சொல்லி யிருக்கிருர்கள். ஒப்பந்தத்தில், கையெழுத்துப் போடத்தான். நம்ம வீட்டுக்குக் கார் வரும். உங்களுக்குச் சந்தோஷம் தானே !''

'' உம்.... !'' என்ருன் நாராயணன், சிலந்தி வலேயைப் பார்த்தவண்ணம்.

சிலந்தி ஈயின்மேல் பாயத் தயாராயிற்று.

''தீர்ந்து விட்டது....'' என்ருன் நாராயணன் தன்னே மறந்து பலமாக.

''என்ன சொல்கிறீர்கள்? நம் கஷ்டங்களேத்தானே சொல்கிறீர்கள், தீர்ந்துவிட்டதென்று ?''

''உம்.... எல்லாமே தீர்ந்து விட்டது !''

''அப்பப்பா ! இப்பத்தான் சந்தோஷமாயிருக்கிறது. நீங்கள் சொல்வது போல் இனிமேல் எல்லாம் தீர்ந்து விட்டது !'' என்ருள் பத்மா மகிழ்ச்சி பொங்க.

நாராயணன் மிகவும் தீனமான பார்வையொன்றை அவள் மீது செலுத்தினன்.

அடுத்த விநாடி அவன் கவனம் மீண்டும் சிலந்தியிடம் சென்றது. சிலந்தி ஈயைத் தன் கால்களுக்கிடையே சிறைப்படுத்தி அழிக்கத் தீர்மானித்து விட்டது அவனுக்குப் புரிந்தது. வெகு வேகமாக அது ஈயை நோக்கி நகர்ந்தது. ஆனல் அதற்கு முன்னல் தன் ஊனத்தையும் மறந்து சரேலென்று எழுந்து ஆவேசத்துடன் ஈஸிசேரில் சாய்த்து வைக்கப் பட்டிருந்த கைத்தடியை எடுத்துச் சிலந்திக் கூட்டை அழித்தான் நாராயணன். ஈ விடுதலே பெற்றுப் பறந்தது. சிலந்தி பதுங்கியது.

''என்ன இது? திடீரென்று உங்களுக்கு என்ன வந்து விட்டது?'' என்று பதறிப் போய்க் கேட்டாள் பத்மா.

'' உன்னே வைத்துக் காப்பாற்றத்தான் முடியவில்லே எனக்கு. ஒரு ஈயையாவது காப்பாற்ற முடிந்ததில் ஓர் அற்ப திருப்தி'' என்ருன் நாராயணன். வெடித்தெழுந்த வேதனேயை இனியும் ஒளிக்க அவனுல் முடியவில்லே.

சுவரொட்டியில் காணப்படும் அதிர்ச்சியடைந்த சினிமாக் கதாநாயகியின் 'க்ளோஸப்' தோற்றம் போல் பத்மா அதிர்ந்து போய் நின்ருள்.

லோகமான்ய திலகர் சென்னேக்கு வந்திருந்த நேரம், அரசியல்வாதிகள் பலர் அவரைக் காணச் சென்றனர். தொழிலாளர் தந்தை திரு. வி. க. அவர்களும் திலகரைக் காணச் சென்ருர்.

பலர் நாட்டின் அரசியலேப் பற்றி ஐயங்கள் பல எழுப்பி, சமாதானம் கேட்டுக் கொண்டிருந்தனர்.

தொழிலாளர் நலனுக்காக உழைத்து வந்த திரு வி. க. வோ சும்மா உட்கார்ந்திருந்தார்.

''உங்களுக்கு ஏதும் ஐயம் இல்லேயா?'' என்று திலகரே தொடங்கினர்.

''ஒரு விஷயம் கேட்கத்தான் வந்தேன். ஆனல் நாட்டின் நலனுக்கான அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் பொழுது தங்கள் நேரத்தை வீணுக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்!'' என்ருர் திரு. வி. க.

''உங்கள் கேள்வியும் நாட்டின் நலனுக்கானதாக இருக்கக் கூடாது என்று ஏன் எண்ணுகிறீர்கள்? கேளுங்கள்!'' என்று ஊக்கினர் திலகர்.

''கீதா ரகசியம் போன்ற நூல்களேப் படைத்த தங்களிடம் இறை உணர்வைப் பற்றிப் பேசலாம் என்று வந்தேன். ஆனல்...'' என்று இழுத்தார் திரு வி. க.

''நாட்டின் விடுதலேயைக் காட்டிலும் ஆன்ம விடுதலேயைப் பற்றிப் பேசவா சங்கோசப்படுகிறீர்கள்? நம் நாடே



இறை புணர்வால்தான் ஓங்கி நிற்கிறது! அந்த இறைப் பற்றுக்குள் அடக்கம்தான் நாட்டுப் பற்று! அதைப் பற்றிப் பேசினல் நாட்டு அரசியல் பற்றிய ஐயமும் இவர்களுக்குத் தீர்ந்துவிடும்!''


தீவிரவாதி திலகரின் பேச்சு திசை மாறியது என்ருலும் இறைப் பற்ருேடு நாட்டுப் பற்றுக்கும் விளக்கம் தருவதாக அமைந்தது.

- ரா. வி.

கல்கி காரியாலயத்தில் சுதந்திரக் கட்சி ஊழியர்களையும் பத்திரிகைப் பிரதிநிதிகளையும் முறையே பிப்ரவரி 21, 23ந் தேதிகளில் ராஜாஜி சந்தித்துப் பேசினார். அப்போது அவர் கூறிய பல கருத்துக்களுள் உவமை நயமும் நகைச்சுவையும் கூடிய சிலவற்றை இங்கு தருகிறோம்.







ராஜாஜி தீர்த்த ...வமைகள்

☐ ஆசைகளை யெல்லாம் விட்டொழித்துவிட வேண்டிய வயது எனக்கு. என்றாலும் இன்னும் ஓர் ஆசை விடவில்லை. நாட்டின் சுபிட்சத்துக்காக இந்திரா காந்தியைப் பதவியிலிருந்து இறக்கிவிட வேண்டும் என்ற ஆசை தான் அது!

☐ நம்முடைய முதல் காரியம் இந்திராவைப் பதவியிலிருந்து இறக்குவது. அவருக்கு உடந்தையாக இருப்பதால் தி. மு. க. வினருக்கும் தோல்வி தரவேண்டியது. ஆனால் முதல் காரியம் பின்னதைவிட ரொம்ப முக்கியம். சுண்டெலியும் பெருச்சாளியும் பார்க்க ஒரே மாதிரி இருந்தாலும் அளவில் ரொம்ப வித்தியாசம். பெருச்சாளியை ஒழிக்க வேண்டியதற்கே பிராதான்யம் தரவேண்டும்.

☐ தி. மு. க. வினர் தங்கள் ஜேபியில் கம்யூனிஸப் பாம்பை வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒருவன் ஜேபியில் பாம்பு இருக்கும்போது அவன் தோளில் கையைப் போட்டுக்கொண்டு போனால் பாம்பு அவனைக் கடிக்குமோ அல்லது நம்மைக் கடித்து விடுமோ சொல்ல முடியாது. தி. மு. க.வின் ஜேபியில் பாம்பு இருக்கும்வரை அவர்களை நெருங்கக் கூடாது!

○○○○○ தேர்தலையொட்டி: ○○○○○

☐ அன்று திரு ஈ. வெ. ரா. பிள்ளையார் உடைத்தபோது முதல் மந்திரியாக இருந்த நான் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லையே என்று கேட்கிறார்கள். ஒருவன் கன்னத்தில் தட்டுவதற்கும் கொலை செய்வதற்கும் உள்ள வித்தியாசம் அன்று நடந்ததற்கும் இன்று நடந்ததற்கும் இடையில் உள்ளது. அன்று நான் அரசாங்க ஃபைல்களில் எழுதியவற்றை இன்று எடுத்து விளம்பரமாகப் பிரசுரிக்கலாமா? அது சட்டபூர்வமாகத் தவறல்லவா என்று சிலர் கேட்கிறார்கள். பிரசுரித்து விட்டுப் போகட்டும். என் வாழ்க்கையில் ரகசியம் என்பது எதுவுமே இருந்ததில்லை. நான் ஃபைல்களில் எழுதியதை எடுத்துப் பிரசுரித்தால் நல்லதுதான். ஆனால் உண்மையான விஷயங்களைப் பிரசுரிக்க வேண்டும்!

இன்னொரு விஷயமும் கவனிக்க வேண்டும். அன்று ஈ. வெ. ரா. பெரியார் என் எதிரி. இப்போது ஆட்சியிலுள்ளோருக்கு அவர் தந்தை, குரு.

☐ திரு ஈ. வெ. ரா. தாம் விலை கொடுத்து வாங்கிய, தமக்குச் சொந்தமான ஒரு பிள்ளையார் விக்கிரகத்தை உடைத்தார். நம்மவர்கள் விநாயக சதுர்த்தியன்று பிள்ளையார் பூஜை முடிந்ததும் கிணற்றிலோ, சமுத்திரத்திலோ போட்டுச் சிலையைக் கரைத்து விடுவதில்லையா?

☐ நீங்களே தி. மு. க. பதவிக்கு வரப் பாடுபட்டீர்கள். நீங்களே இப்போது அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்கிறீர்களே என்றால் அதுதான் அரசியல்!

☐ அரசியல் சாஸனத்தில் சில ஜீவாதார உரிமைகள் மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளன. அவற்றை எந்த நாளும் மாற்றக் கூடாது.

சட்டைகளை மாற்றிக் கொள்ளலாம், முடியும்; ஆனால் உடலில் உள்ள தோலை மாற்ற முடியுமா? அதே போன்றவை இந்த ஜீவாதார உரிமைகள்.

☐ தேசியமயம் என்ற சொல் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. பாங்கு தேசியமயமாக்கப்பட்டது என்று கூறுவது சரியல்ல. சர்க்கார் உடைமையாக்கப் பட்டது என்பது பொருந்தும்.

சர்க்கார் மக்களின் செல்வத்தைத் தன் இஷ்டப்படி கையாள இது உதவுகிறதே ஒழிய நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ உண்மையில் பயன்படாது.

விரலுக்கு நகம் போன்றவை மக்களுக்கு பாங்குகள். பணம் போடுவோரின் நலனை அவை காக்க வேண்டும். பாங்கு சர்க்கார் உடைமையாக்கப்பட்டதால் இந்நிலை மாறிவிட்டது. நாட்டு மக்களின் நிதி வளம் எப்படி இருக்கிறது என்பதைச் சர்க்கார் அறிந்து கொள்ளலாமே ஒழிய அவர்களுக்குச் சொந்தமான பணத்தைச் சர்க்கார் கையாளக் கூடாது.

☐ வங்கத்தில் அமைதியை நிலைநாட்ட இயலாத இந்திரா சர்க்கார் பதவியில் இருக்க லாயக்கில்லை. அரசியல் சாஸனத்தைச் சிதைக்க உறுதி கொண்டிருக்கும் அவருக்குத் தோல்வி தரப் பாடுபட வேண்டும். இந்திரா காங்கிரஸுடனும் கம்யூனிஸ்டுகளுடனும் தொடர்பு கொண்டிருப்பதாலும் மக்களின் உணர்ச்சிகளை அலட்சியம் செய்து நடந்து கொள்வதாலும் தி. மு. க. வுக்கும் தோல்வி தர வேண்டியது.

நப்பசலையின் காதல்

கோ வி. மணிசேகரன்

பெருமிதமாய் நடை பழகுகிறாள் பெண்ணையாற்றுப் பேரழகி.

பல்லக்கை நிறுத்தச் செய்து இறங்கி நிற்கிறாள் நப்பசலை. பசலை என்ற பெயருக்கு ஏற்ப, அவளுடைய இளமையின் பொன்னிறத்தில் கதிரவனின் கரம் பட்டு ஒளி சிதறுகிறது. கறுத்துச் சுருண்ட குழல் காற்றில் அலைமோத, பொருள் புதைந்த புன் முறுவலை அதரங்களில் தேக்கிப் பெண்ணையாற்றை நோக்குகிறாள். ''திருக்கோவலூரர் பெருமைக்கு ஒரு பெண்ணையாறு; அருமைக்கு அரசன் மலையமான் திருமுடிக்காரி'' — முத்தனைய தமிழமார்த்தி மோகன வாய் முணு முணுக்கிறது. ஆழ்ந்த சிந்தனையுடன் தலை அசை போடுகிறது. பல்லக்கில் அமர்ந்து கொண்டாள் நப்பசலை.

மலைநாட்டின் தலைநகரான திருக்கோவலூர், மதுரையைப் போன்றோ, பூம்புகாரைப் போன்றோ, வஞ்சியைப் போன்றோ பிரதான வாயில்களுக்குள்ளே பிரமிக்கத் தக்க பேரழகைப் பெற்றிருக்கவில்லையானாலும், வீரத்தின் விளைநிலம் போன்றும், செல்வத்தின் செழிப்புப் பூமி போன்றும் அது காட்சி தரத்தான் செய்தது. மற்றப்படி எழுநிலை மாடங்களும் எழிலார்ந்த வீதிகளும், பொலிவு நிறைந்த பொழில்களும் பூரிப்பான மக்களும் நிறைந்து காணப்பெற்ற காட்சி, நப்பசலைக்கு நாத்தினவை உண்டு பண்ணியது. சங்க கால இறுதி நாளில் வாழ்ந்த ஒப்புயர்வற்ற ஓரே புகழ் மிக்க புலமைச் செல்வியாயிற்றே அவள்! புலமைக்கு அழகு பகை யென்பார்கள்; இங்கே அழகுக்குப் புலமை அந்தாதி பாடிக் கொண்டிருந்தது.

எது பாடி என்ன? என்ன பாடி எது?

அரசன் மலையமான் திருமுடிக்காரியைப் புலமைதான் மயக்குமோ? அழகுதான் மடியில் வீழ்த்துமோ?

தமிழ் பாடிப் பரிசில் பெறும் இந்த நப்பசலைக்கு ஏனித்த நப்பாசை? திருக்கோவலூர் கோமான் ஓர் ஏகபத்தினி விரதன் என்று கேள்விப்பட்டும் இப்படி முயலச் செல்வது முயற் கொம்பைத் தேடிச் செல்லும் கதைக்கு ஒப்பானது என்று தெரிந்தும் ஏன் புறப்பட்டு வர, வேண்டும்?

பேராண்மை மிக்க பெருந்தகையாளன்— வள்ளல் பெருமான் — வீரமாப் புருஷன் திருமுடிக்காரி; அவனைக் காதலிக்க வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சில் முகிழ்த்ததே தவறு என்பது போல நப்பசலையின் பொன்மேனியில் பசலையே கண்டு விட்டது. அந்தத் தேமலைப் பார்க்குந்தோறும் அவளுக்கே ஒருவித வியப்பு! எண்ணம் எத்துணைப் பொல்லாதது! 'நெஞ்சில் புகார்' என்று கூறிய இளங்கோவடிகளார் நெஞ்சுக்கு அமுது வார்க்க வேண்டும்! — நப்பசலையின் நினைவில் தெறித்த நயம்!

அரண்மனை அன்று பரபரப்புடனும் கலகலப்புடனும் விளங்கியது. அரசன் திருமுடிக்காரி முள்ளூர்க் கோட்டை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தான். உடன் அமைச்சரும், சேனதிபதிகளும் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். வடநாட்டிலிருந்து பகைவர்கள் படையெடுக்க முனைந்திருக்கிறார்கள் என்றும், புகழ்மிக்க முள்ளூர்க் கோட்டையை முற்றுகையிட இருக்கிறார்கள் என்றும் கிடைத்த செய்தியே இந்தப் பரபரப்புக்கான காரணம். முள்ளூர்க் கோட்டையைக் கைப்பற்றி, பெரு வீரனை மலையமான் திருமுடிக்காரியை



வீழ்த்தி விட்டால் பிறகு தமிழகத்தை எளிதில் கபளீகரம் செய்துவிடலாம் என்பது வடவர்களின் அன்றைய திட்டமாக இருந்தது.

அரசி மலையன் தேவி, தன்னுடைய இரு புதல்வர்களுடன் அங்கே வந்தாள். இருவருமே சின்னஞ் சிறுர்கள். தந்தையை வழி கூட்டி வைக்க வேண்டுமல்லவா?

அரசி மலையன் தேவியைப் பெரிதான அழகி என்று சொல்லிவிட முடியாது. ஆனால் மகத்தான குணவதி. கணவனுடைய எல்லாவித குணநலன்களிலும் இமயத்தை விட அதிகமான நம்பிக்கை உடையவள். இப்படி ஒரு பேராண்மை மிக்க கணவன் கிடைத்தது சென்ற ஆறு பிறவிகளில் யாத்த நோன்பின் பயன் என்று பலரிடையே நெஞ்சைத் திறந்து சொற்களைப் புனிதமாக ஓதி வெளிப்படுத்தியிருக்கிறாள். இதனால் ஏற்பட்ட வம்பு தானே நப்பசலையைப் பயணப்படுத்தி வைத்திருக்கிறது!

மலையன்காரி முள்ளூர்க் கோட்டைக்குப் பயணமாகும்போது—


''பெரும, நானும் உங்களுடன் வந்தால் என்ன? நீங்கள் திரும்ப இருக்கிற இந்த இரண்டு திங்கள் வரை நானும் குழந்தைகளும் தனித்து—''

மலையன் தேவி முடிக்கவில்லை. இடைமறித்துக் கலகலவென்று நகைப்பொலி எழுப்பினன் காரி. ''தேவி! நான் முள்ளூர்க் கோட்டைக்கு மலர் பறிக்கச் செல்லவில்லை. மூட்களை எண்ணித் திரும்பச் செல்கிறேன். நீ அமைதியாக அரண்மனையிலேயே இரு. பிரிவாற்றுமை எனக்கு மட்டும் இல்லையா? நாம் மணிமுடிக்குரியவர்கள். கட்டில் மட்டும் சுகம் தருவதல்ல; களமும் சுகம் தருவது தான். கவலைப்படாதே... விரைவில் திரும்ப முயல்வேன்!''

கொஞ்சமும் மனம் கோணமல் ஏற்றுக் குமிழ் சிரிப்பை உதிர்த்தாள் மலையன் தேவி. அப்போது—

புலமைச் செல்வி நப்பசலையார் அரண்மனைக்கு வருகை தந்திருக்கிறாள் என்ற செய்தியுடன் அங்கு வந்தார் அமைச்சர் நாயகம்.

இலக்கிய தேவதையான நப்பசலையாரே தன்னுடைய அரண்மனை நோக்கி வந்திருக்கும் இனிப்பான செய்தி, திருமுடிக்காரிக்குப் பெருத்த மகிழ்ச்சியைத் தந்தது. ஓடோடிச் சென்று வரவேற்க முனைந்தான். அதற்கு அவகாசமே கொடுக்காமல் நப்பசலையே அங்கு வருகை தந்து விட்டாள். ''வாழ்க அரசர் திருமுடிக்காரி! வளர்க அவர்தம் வள்ளன்மை!''



''வாருங்கள் பசலையாரே! திருக்கோவலூர் உங்கள் வருகையால் திருவையடைந்து விட்டது.''

''மகிழ்ச்சி அரசே! மகிழ்ச்சி!'' — நப்பசலை திருமுடிக்காரியைக் கூர்ந்து கவனித்தாள். ஆகா! என்ன ஆண்மை நிறைந்த பேரழகு! கண்கள் மலையன் தேவியை நோக்கின. தேவி கரம் கூப்பி வணங்கினுள்.

''தமிழ்ச் செல்வியே! இவள் என் பட்டத்தரசி!'' — திருமுடிக்காரி மனைவியை அறிமுகம் செய்து வைத்தான். அவளே நப்பசலை.

யாரை இப்பொழுதுதானே முதன் முறையாகப் பார்க்கிறான்!

மலையன்தேவிக்கு வாழ்த்துக் கூறிய நப்பசலை, ''அரசே! பட்டத்தரசி என்று அறிமுகம் செய்கிறீர்களே... பக்கத்தரசியும் ஒருத்தி இங்கே இருக்கிறாளா?'' என்று குறும்புடன் கேட்டார். இந்தக் கேள்வி அரசனை அதிரச் செய்தது. ஆனால் மலையன் தேவியே மறுமொழி கூறினாள்: ''இனிமேல் அப்படி ஏற்பட்டால் நான் குறுக்கே நிற்க மாட்டேன். ஏனென்றால், மணிமுடிக்குரியவர்களின் வாழ்க்கை கட்டிலுக்கு மட்டும் சொந்தமல்ல; களத்துக்கும் சொந்தமானது!''

எவ்வளவு சூசகமாய்ச் சுட்டிக் காட்டி விட்டாள்?

நப்பசலை கூறினாள்: ''அரசியார் மகா புத்திசாலி.''

இருமுடிக்காரிக்கு அறத் துன்பமாய்ப் போய் விட்டது. ''பசலையாரே! நான் முள்ளூர் நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். திரும்ப இரண்டு திங்களுக்கு மேல் ஆகும். எதிர்பாராது அரண்மனைக்கு வருகை தந்த

சாதாரண ஆண்டில் கல்கியில் இடம் பெறும் சிறப்புச் சிறுகதைகள் அனைத்திலும் சிறந்த சிறுகதையைத் தேர்ந்தெடுப்பதில் வாசகராகிய உங்கள் அபிப்பிராயமும் கோரப்படுகிறது. ஆகவே இந்த இதழையோ அல்லது இந்தக் கதை அச்சாகியுள்ள பக்கங்களையோ பத்திரமாக வைத்திருக்கவும்.



ஆசிரியர், கல்கி

உங்களைக் கண்டபோது பயணத்தைத் தள்ளி வைக்கலாம் என்று நினைக்கிறேன்!''

''இல்லை; நான் புறப்படுகிறேன். பிறிது ஒரு சமயம் வந்து பாடிப் பரிசில்களைப் பெறுவேன்!'' என்றாள் நப்பசலை. ஆனாலும் உள்ளுக்குள் இப்படிக் கூறிவிட்டோமே என்ற அலைமோதத்தான் செய்தது. இந்தச் சமயத்தில் அரசி மலையன்தேவி குறுக்கிட்டாள். ''பெரும, முள்ளூர்க் கோட்டைக்கு நான் வருவதால் வேண்டுமானால் அரசியல் காரியங்களுக்குத் தடையாக இருக்கலாம்; தமிழ்ச் செல்வியாகிய இவர் உங்களுடன் வருவதால் சரித்திரம் கிடைக்கும். அவர்களுக்கும் ஒரு நிறைவு ஏற்படும். இனியொரு முறை வருவார்கள் என்பது என்ன நிச்சயம்?''

''உண்மை தேவி, உண்மை. பசலையாரே, அருள்கூர்ந்து என்னுடன் வந்து தங்கியிருக்க வேண்டுகிறேன்!''

நப்பசலை மறுக்கவா போகிறாள்?

மலையமான் இருமுடிக்காரி, புலமையினள் நப்பசலையுடன் முள்ளூர்க் கோட்டை நோக்கிப் பயணமானான்.

சிங்கமானிக்குத் தென் திசையில்—பெண்ணையாற்றின் தென் மேற்கே பெருமிதத்தோடு நிமிர்ந்திருந்தது பெரியமுள்ளூர்.

மலையமான் இருமுடிக்காரியும், புலமைச் செல்வி நப்பசலையும், மற்றும் அரசப் பரிவாரங்களும் முள்ளூர்க் கோட்டையை அடையும் போது இரவு வந்து விட்டது. முன்கூட்டியே வருகையறிந்த பணியாளர்கள் உணவுக்கான ஏற்பாட்டினைக் கவனித்திருந்தனர். கோட்டையுள் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டிருந்த மாளிகையில் அரசரும், நப்பசலையும் தங்கினர். அடுத்திருந்த பழமையான மாளிகையில் அமைச்சரும் சேனாதிபதிகளும் தங்கினர். உணவு முடிந்ததும், அவரவர் ஓய்வு காணப் படுக்கைக்குச் சென்றனர். பயணக் களைப்பு அனைவருக்குமே மிகுதியாக இருந்தது.

அரசன் காரி, புலமையினள் நப்பசலையிடம் விடைபெற்றான்: ''பசலையாரே! உறங்கச் செல்ல விடைபெறலாமா?''

பசலை ஏன்தான் இப்படிப் பசலை பூத்த பார்வையுடன் நோக்க வேண்டும்? புன்னகையில்கூட ஏதோ விஷமம் தேங்கிக் கிடக்கிறதே!

பசலை மறுமொழி கூறினாள்:

''எனக்கு உறக்கம் வரவில்லை!''

''உறக்கம் வருகிறவரை நான் வேண்டுமானால் துணையாக இருக்கிறேன்!''

''நானும் அதைத்தான் விரும்புகிறேன்!''

நப்பசலையின் பார்வை இம்முறை அரசன் மலையமானை நெருப்பாகச் சுட்டது. ''புலவருடைய கண்களில் நிலவுதானே குடியிருக்கும்!''

இருமுடிக்காரியால் இவ்வாறு கேட்காமல் இருக்க முடியவில்லை. நப்பசலை சொன்னாள்:

''சிவபெருமான் கவிஞர்களுக்கெல்லாம் கவிஞர். அவர் ஒரு கண்ணில் நெருப்பையே வைத்துக் கொண்டார்!''

''அது காமனை எரிக்கத் தோன்றிய கண்!''

''அதே நெருப்பால் காமனை உயிர்ப்பிக்கவும் முடியுமல்லவா? முள்ளை முள்கொண்டே எடுப்பது போல, முள்ளூர்த் தலைவனே?''

''உங்கள் பேச்சின் சாரம் எனக்குப் புரியவில்லை!''

''மலையமானே! சுற்றி வளைப்பானேன்? நான் எதிர்பாராத திருப்பம், இந்த முள்ளூர் தனிப் பயணம். என்னை ஏன் உங்களுடன் அழைத்து வரவேண்டும்?''

''தமிழைப் பாட.''

''பயன்?''

''பயன் பெறாமல் எந்தப் புலவர்களையும் நான் அனுப்பியதில்லை.''

''கேட்கும் பரிசில்களைத் தருவீர்களா?''

''என்னைத் தவிர!''

''அது என்ன உங்களைத் தவிர?''

''அது ஏற்கனவே என் மனையாளுக்குக் கொடுத்துவிட்ட பரிசு.''

''திரும்பப் பெற்றுத் தருவது'''

''அப்படியென்றால் நீங்கள் என்னைத்தான் கேட்க வந்திருக்கிறீர்களா?''

''நீங்கள் கேட்பதைப் பார்த்தால் நான் பாடாமலேயே உங்களைக் கொடுக்க முயல்வீர்கள் போலத் தெரிகிறது!''


''பாடினாலும் அது கிடைக்காது!''

''அப்படியென்றால் நீங்கள் இதைத்தான் கொடுக்க முடியும் என்கிற வரியவர்!''

''என் நாட்டையே வேண்டுமானாலும் உங்கள் புலமைக்குச் சாசனமாக எழுதி வைத்து விடுகிறேன்!''

அல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும் ஏற்ற இலட்சிய டானிக்.



இளைஞர், முதியோர் யாவருக்கும், எல்லாக் காலத்திலும் ஏற்ற டானிக்காகிய அல்போஸாங்கை அருந்தி, உங்கள் உடல்நலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

ஜே.& ஜே.டிஷேன்

ஹைதராபாத், இந்தியா

கோபாலாசார்லுவின்

பால ப்ராஸ

குழந்தைகளுக்கு ருசியான டானிக்

[illegible] ஆண்டிலிருந்து பிரசித்தி பெற்றது...

ஆயுர்வேதாஸ்ரமம்

பிரைவேட் லிமிடெட்

மூல நோயை

முற்றவிடாமல் நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து நிவாரணம் அடையுங்கள்;

— ரண சிகிச்சையையும் தடுங்கள்

''அது என் இளமைக்கு ஆறுதல் சொல்லாது; யாருக்கும் கிடைக்காத புலமையுடன் கூடிய அழகுக்கு இணையாகாது!''

''நான்தான் வேண்டும் என்ற தீர்மானத்துடன் பாட வந்தீர்களா?''

''கோவற் கோமானே! உங்கள் வீரத்தைப் பற்றியும், அழகைப் பற்றியும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் மணப்ப தென்றால் உங்களையே மணப்பேன் என்று ஒருதலைக் காதல் கொண்டேன். அதற்காக இதுவரை யாரையும் பாடாமல் நாவைக் காத்து வந்தேன், என் இளமையைக் காத்தது போல! சொல்லுங்கள். நீங்கள் என்னை ஏற்ப தானால் ஒரு பெருங் காப்பியமே பாடிவிடுகிறேன். மலையமான் புகழ், சிலம்பின் மூலம் கண்ட செங்குட்டுவன் புகழையும் விஞ்சும்!''

''ஆனால் என் கற்பு அஞ்சிவிடும்?''

''ஒப்புக் கொள்ள முடியாத புதிய கற்பனை!''

''நீங்கள் என் காதலை யாசிப்பது கற்பனை அல்லவே?''

''நிச்சயம் கிடையாது!''

''இதுவும் அதுபோலத்தான்!''

''மலையமானே! நான் உங்கள் பட்டத்தரசியாக விரும்பவில்லை; பட்டத்தரசிக்குப் போட்டியாகவும் வரவில்லை. என் இலட்சியம் என் இதயத்தில் மலையமானை அமர்த்த வேண்டும் என்பதுதான்!''

''கணவனாகத்தான் அமர்த்த வேண்டும் என்பதில்லையே! ஒரு காவியத் தலைவனாகவும் அமர்த்தலாம் அல்லவா?''

''இதுபோலவே நீங்களும் என்னை ஒரு காவியத் தலைவியாகவே உங்கள் இதயத்தில் அமர்த்தலாம் அல்லவா?''

மருண்டு போனான் மலையமான் திருமுடிக்காரி. ''பசலையாரே! இந்த இதயத்தில் ஏற்கனவே மிலாடுடையாள் அமர்ந்துவிட்டாள்!''

''கற்பனைக்கு ஒப்பனை செய்யும் சொற்களை என்னிடமே வீசுகிறீர்களா? நான் எடுத்தெறியச் சொல்லவில்லையே! சற்றே ஒதுங்கச் சொல்லி இடம் தரச் சொல்லுங்கள்!''

''இது முடிகிற காரியமா?''

''நிச்சயம் முடிகிற காரியம்! முள்ளூர்த் தலைவ! ஆண்பாற் புலவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல் திருமுடிக்காரி, ஒரு பெண்பாற் புலவரை அலட்சியம் செய்து வறிதனுப்பினான் என்கிற அவப் பெயருடன் என் காப்பியத்தில் இடம் பெற வேண்டாம். சிந்தித்து முடிவு கூறுங்கள்!''

வெகு நேரத்துக்கு வெகு நேரமாகச் சிந்தனையில் மூழ்கினான் திருமுடிக்காரி. அறத் துன்பமான அவனுடைய நிலை அவனுக்கே வியப்பை அளித்தது. இப்படி ஒரு சோதனை ஏற்படும் என்பது அவன் எதிர்பாராதது. எத்தனை நம்பிக்கையுடன் நப்பசலையைத் தன்னுடன் சேர்த்து அனுப்பி வைத்தாள் மலையன்தேவி!

''ஒப்புக்கொள்கிறேன்!'' — திருமுடிக்காரியிடமிருந்து வந்த மறுமொழியைக் கேட்டுத் திகைத்துப் போனாள் நப்பசலை.

''ஆனால் ஒரு நிபந்தனை.''

''சொல்லுங்கள்!''

''நான் தமிழைத் தாயாக மதித்து வணங்குபவன். நான் நப்பசலையை ஏற்பது, அபரிமிதமான அழகின் பொருட்டு; அளவு கடந்த புலமையின் பொருட்டல்ல! எனவே...''

''எனவே....''

''உங்களிடம் இருக்கும் தமிழைத் தனியே ஒதுக்கி அல்லது நீக்கிவிட்டு என்னுடன் வர முடியுமானால் நான் உங்களை ஏற்க ஒப்புக் கொள்ளுகிறேன்.''

நாடி ஒரு கணம் நின்றுவிட்டது நப்பசலைக்கு. ''அது எப்படி முடியும் மலையமானே?''

இப்போது தெளிவுடன் கூறினான் திருமுடிக்காரி. ''நானும் என் பட்டத்து அரசியை இதயத்திலிருந்து ஒதுக்கவோ, அல்லது நீக்கவோ முடியாத காரியம்தானே? தமிழ் எப்படி உங்கள் உடலில் இரண்டறக் கலந்து விட்டதோ, அப்படித்தான் மிலாடுடையாளும் என் ஊனில் இரண்டறக் கலந்து விட்டாள்!''

நாவடைத்துப் போனாள் நப்பசலை.

''காரி! என்னைப் பொறுத்தருளுங்கள். உங்கள் பத்தினி விரதத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். வள்ளல் தன்மையைப் புகழ்ந்த அளவுக்கு அதனையும் புகழ்ந்தார்கள். நான் சோதித்துப் பார்க்க வந்தேன். இந்தச் சோதனையில் நீங்கள் வெற்றி கண்டால், நான் பாடவிருக்கும் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவனாக வைத்து உங்களைப் பாட வேண்டும் என்ற உறுதியுடன் ஒளி நிறைந்த திருக்கோவலூரை அடைந்தேன். ஆனால் இருள் நிறைந்த முள்ளூரில் என் புலமை வெற்றி கண்டது; அழகு தோல்வி கண்டது. நீங்களே பேராண்மை மிக்க பெரு வீரர்!''

''தாயே!'' — திருமுடிக்காரியின் நாவில் அதற்கு மேல் சொற்கள் வெளிவர மறுத்து விட்டன. முள்ளூர்ப் பயணம் ஒரு வெற்றிப் பயணமாகவே அவனுக்குத் தெரிந்தது. பசலையாரையே வெற்றி கண்டுவிட்ட பிறகு, வடக்கிலிருந்து படையெடுத்து வருபவர்களைத்தானா வெற்றி காண முடியாது?

'ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப் பகலுடன் கழிந்த வொள்வாள் மலையனது ஒருவேற் கோடியாங்கு!'



மனைவி : ''நீங்கள் கட்டி மாற ஒரு லட்சம் ரூபாய் தர இவர் சம்மதித்த பின்தான், இவரை உங்கள் இருப்பிடத்தைக் காட்ட அழைத்து வந்தேன்!''

அதிசய கிரிக்கெட்!

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் தற்போது நடந்து கொண்டிருக்கும் கிரிக்கெட் டெஸ்ட்களைப் பற்றிப் படித்து மகிழும் ரசிகர்களுக்கு இதோ இன்னொரு பிடி அவல்! ❋

☐ முதன் முதலில் கிரிக்கெட் சுமார் 1548ம் ஆண்டு சிறுவர்களால் விளையாடப்பட்டது.

☐ முதலில் விக்கர், அட்வைலரி கௌண்டி கிரிக்கெட் கமிட்டியால் 1910ம் ஆண்டு அறிமுகப்படுத்தி, அனுமதிக்கப்பட்டது.

☐ 1867ம் ஆண்டு கோரமானவர்களுக்கும் அழகானவர்களுக்கும் பந்தயம் நடந்தது. முடிவு "டிரா!"

☐ அன்று வீசப்பட்ட கடைசிப் பந்துக்கு யாரும் அப்பீல் செய்யவில்லை. பாட்ஸ்மன் பெவிலியனில் டபிள்யூ. ஜி. கிரேஸ்ஸைச் சந்தித்து "நல்ல வேளை யாரும் அப்பீல் செய்யவில்லை; அந்தக் கடைசிப் பந்தில் நான் அவுட் தான்" என்றார். மறுநாள் முதல் காரியமாக கிரேஸ் 'ஹைவஸ் தட்?' என்றார். அம்பயர் அவுட் கொடுத்துவிட்டார். ஆனால் இன்று சட்டம் வேறு.

☐ பந்தயக்களம், போர்க்களமான நிகழ்ச்சி ஒன்று உண்டு. 'கென்ட்'க்கும் 'எஸ்ஸெக்'ஸுக்கும் 1776ம் ஆண்டு டில்பரியில் நடந்த மாட்சில் எழுந்த கலவரத்தில் மூன்று ஆட்டக்காரர்கள் மரிக்க நேரிட்டது.



☐ 'டேவிட் ஹாரிஸ்' என்னும் ஓர் ஆட்டக்காரர் மட்டையுடன் மைதானத்துக்கு வருவார். கூடவே ஒரு நாற்காலியும் வரும். அவர் உடல் நலம் சரியின்றிக் கஷ்டப்பட்டதால் ஒவ்வொரு பந்து வீசப்பட்டதும் அதை அடித்து விட்டோ அல்லது விட்டு விட்டோ நாற்காலியில் உட்கார்ந்து ஓய்வு எடுப்பார்.

☐ மழையால் ஆட்டம் நின்றது என்று தான் கேள்விப்பட்டிருக்கிறோம். பறவைகள் விளையாட்டை நிறுத்தியதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இங்கிலாந்தில் நடந்த ஒரு கௌண்டி பந்தயத்தின்போது மைதானத்தில் நிறையப் பறவைகள் வந்து இறங்கி இடையூறு செய்தன. ஆட்டத்தைச் சற்று நேரம் நிறுத்த நேரிட்டது.

☐ 'நடு ஸ்டம்ப்' விழுந்தாலும் 'பெயில்ஸ்' விழவில்லை, உண்மை! நியூ சௌத் வேல்ஸுக்கும், விக்டோரியாவுக்கும் நடந்த மாட்சில் இது நடந்தது. வெய்யிலில் பெய்ல்ஸின் மேலிருந்த வார்னிஷ் உருகி ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு விட்டதால் விழவில்லை!

☐ பாட்ஸ்மனால் அடிக்கப்பட்ட ஒரு பந்து எத்தனை தூரம்தான் செல்ல முடியும்? நம்புங்கள். மான்செஸ்டரில் விளையாடிக்கொண்டிருந்த 'யூலியெட்' என்பவர் அடித்த பந்து பிராட்ஃபோர்ட் நகருக்குப் போய்விட்டது!



எப்படி? அந்தப் பக்கம் போன ரயில் வண்டிக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து விட்டது! பிராட்ஃபோர்டில் ரயிலில் பந்து கண்டெடுக்கப்பட்டது.

☐ ஆரம்ப காலத்தில் கிரிக்கெட் மட்டையின் அகலத்துக்கு அளவு விதி இல்லை. 1774ல் ஹாம்பிள்டன் மாட்சில் 'ஒயிட்' என்பவர் மிக அகலமான 'பேட்'டை எடுத்து வந்து விக்கெட்டை மறைத்து நிற்க, ஆட்டக்காரர் ஒருவர் அங்கேயே ஒரு கத்தியை எடுத்துவந்து அதை வெட்டி விட்டார். அதன் பின்னர் தான் அளவு விதி ஏற்பட்டது.

☐ முதலில் இரண்டு ஸ்டம்புகள்தாம் இருந்தன. 1775ல் 'ஸ்மால்' என்பவர் எறிந்த பல பந்துகள் இரண்டு ஸ்டம்புகளுக்கும் இடையாகப் போயின. அதற்குப் பிறகு தான் மூன்றாவது ஸ்டம்பின் அவசியம் உணரப்பட்டது.


☐ ஒன்றரை மணி நேரம் ஒரு ரன்கூட எடுக்காமல் விளையாடியவர் இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் 'காட்ஃப்ரி இவான்ஸ்'. இவர் நிறைய ரன்கள் எடுக்கக் கூடியவர்தான். ஆனால் 46–47ல் நடந்த இந்த மாட்சில் மறுமுனையிலிருந்த டெனிஸ் 'காம்ப்டனின்' பந்துகளை எதிர்நோக்கினார்.

☐ ஓர் ஓவரில் எடுக்கப்பட்ட அதிகபட்ச ரன்கள் 32. அடித்தவர் வி. ஸ்மார்ட்; பந்து வீசியவர் ஜி. ஹில். 6–6–4–6–6–4 என்று அடித்தார்!

மூலம் : "தி கில்லெட் புக் ஆஃப் கிரிக்கெட் அண்ட் ஃபுட்பால்."

தொகுப்பு: கே. வி. முரளி

வயிரத்தோடு



"**வா**ங்க, வாங்க அரண்மனைக்கார மாமா, எங்கே மாசக் கணக்கிலே காணமே? அரமனை விடலையா?'' என்று விசாரித்துக் கொண்டே கண்ணம்மாள் கேட்டாள். அவள் கண்களிலே ஒரு சின்னக் குறும்பும் சன்னமாக ஒளிவிட்டது.

வந்து கொண்டிருந்த அந்த ஆள், ''அம்மணிக்கு இதுதான் கேள்வி — எப்ப வந்தாலும்'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான்.

''அரமனையிலிருந்துதானே வந்தீங்க?'' கண்ணம்மாள் மறுபடியும் குறும்புத்தனமாகக் கேட்டாள்.

''பின்னே வேறே எங்கிருந்து வருவேன்? இந்த ஊரை விட்டா அங்கேதான். வேறு எங்கே போவேன்?'' கண்ணம்மாளின் குறும்பை அவன் ரசித்தான்.

''ரொம்ப உடம்பு துரும்பாப் போச்சே? அரமனையிலே கவனிப்புக் குறைச்சலா மாமா?'' என்று கேட்டாள்.

''என்னதான் அரமனையா யிருந்தாலும் உன் கையாலே போடுற சோறு ஆகுமா, அம்மணி?'' அவன் கண்கள் உள்ளத்தின் உணர்ச்சியை நன்கு காண்பித்து விட்டன.

''வாங்க, நீங்க முதல்லே சாப்பிடலாம். அவுங்க வர இன்னும் ரொம்ப நேரம் ஆகும். நீங்க முதல்லே சாப்பிடுங்க'' என்று கனிவோடு அழைத்தாள் கண்ணம்மாள்.

''அப்படி என்ன அம்மணி வேலே இப்போ?'' என்று கூறிக் கொண்டே 'அரமனைக்கார'' மாமன் சாப்பிட உட்கார்ந்தான்.

''அதென்னமோ, எப்பப் பார்த்தாலும் தோட்டத்திலே வேலே. கால் நாழி ஓய்வு ஒழிச்சல் இல்லே.''

''வயிரத் தோடு உனக்கு வாங்கியாச்சா? அதைப் பத்தியே பண்ணைக்காரங்க சொல்லிக் கொண்டிருப்பாங்களே!''

''அதுக்குத்தான் இப்படி ராப்பகலாப்பாடு. யார் இப்போ வயிரத் தோடு கேட்டாங்க? நானும் எத்தனையோ தடவை சொல்லியாச்சு. அவுங்கதான் பிடிவாதமா இருக்கிறாங்கோ.''

''விவசாயத்திலே என்ன அம்மணி வரும்? ஒரு வருஷம் மழை ஒத்துப் பேஞ்சா ஏதோ கெடைக்கும். அடுத்த வருசம் மழைத் துளி இல்லாமப்போனா அதுவும் போயிடும். உழுதவன் கணக்குப் பார்த்தா உழக்கோல்கூட மிஞ்சாது.''

''அது மெய்தான் மாமா. தோடு இல்லாம எனக்கு என்ன கெட்டுப் போச்சு? வேளா வேளைக்குச் சாப்பிடாமல்கூட உடம்பைக் கெடுத்துக்கிறார்'' என்று கண்ணம்மாள் கொஞ்சம் கவலையோடு ஆனால் தன் கணவர் முத்துசாமி கவுண்டருக்குத் தன் மேல் இருக்கும் அளவு கடந்த அன்பையும் அதற்கு ஈடாகத் தன் அன்பையும் குரலிலே தொனிக்கும் படியாகப் பேசலானாள்.

இந்தச் சமயத்திலே முத்துசாமி கவுண்டர் வந்துவிட்டார். அவரைப் பண்ணைக்காரர் என்றுதான் எல்லோரும் அழைப்பது வழக்கம்.

அவரைப் பார்த்ததும் சாப்பிட்டுக் கொண்டிருந்த அரண்மனைக்கார மாமன் ''வாங்க வாங்க பண்ணைக்காரரே, சாப்பிடலாம் வாங்க நம்ம வீட்டிலே'' என்று கூறிக் கொண்டே மரியாதையோடு எழுந்து நின்றான்.

''மாமா, சும்மா உட்கார்ந்து சாப்பிடுங்க. உட்காருங்க. என்ன அரண்மனை உட்டுப் டுதா?'' என்று சிரித்துக் கொண்டே பண்ணையாரும் ஓர் இலைக்கு முன்னால் அமர்ந்தார்.

இந்த அரண்மனை வேறொன்றும் இல்லை. அரசாங்கச் சிறைச்சாலையைத்தான் அவர்கள் அப்படிக் குறிப்பிடுவது. மாமன் சில்லறைத் திருட்டுக்களிலே பெயர் வாங்கினவன். அடிக்கடி அரண்மனையில் பிடித்துப் போட்டு விடுவார்கள். வெளியில் விடும்போது ஆலங்காட்டுப் பாளையத்துக்கே வந்து முத்துசாமிக் கவுண்டருடைய பண்ணையிலே வேலை செய்வான். இப்படி வேலை செய்வது சில மாதங்களில் அவனுக்குப் புளித்துப் போகும். பிறகு அரண்மனைக்குப் போகும் வழியைத் தேடிவிடுவான். ஆனால் அவனிடத்தில் ஓர் அசைக்க முடியாத கட்டுப்பாடு இருந்தது. உள்ளூரிலோ, அக்கம் பக்கத்தில் உள்ள ஊர்களிலோ எதிலும் கைவைக்க மாட்டான். அந்த ஊர்களுக்கு அவன் கொடுத்த மரியாதை அது. அதனால் அவனைப் பற்றிச் சுற்றுப் பக்கத்திலே அதிகமாக யாருக்கும் தெரியாது. அவனுடைய திருவிளையாடல்களை முத்துச் சாமிக் கவுண்டரிடம் மட்டும் அவன் ஒளியாமல் கூறிவிடுவான். அவன் கவுண்டருக்கு எந்த வகையிலும் உறவு இல்லை. அவனுடைய பூர்வோத்திரம் யாருக்கும் தெரியாது. வேலை செய்யும்போது நன்றாகச் செய்வான். அதனால் கவுண்டருக்கும் திருப்தி.

"மாமா! பேசாமல் பண்ணையிலேயே வேலை செய்யுங்க. நம்ம வீட்டிலேயே சாப்பிடலாம். சம்பளம் வேணுமா? அதுவும் கொடுக்கிறேன். இது என்னத்துக்கு இந்தக் கேவலமான தொழில்?" என்று முத்துசாமி கவுண்டர் ஒரு தடவை கேட்டார்.


"பண்ணையிலே வேலைங்களா? கம்மா ஓரிடத்திலேயே இருப்பது எனக்கு ஒத்து வராதுங்க. நான் என்ன செடியா, மரமா?" என்று கண்டிப்பாக மாமன் கூறிவிட்டதால் பண்ணைக்காரர் அந்தப் பேச்சை இப்போதெல்லாம் எடுப்பதே யில்லை. அவனுடைய சுபாவம் அவருக்கு நன்றாகத் தெரியும். அவன் அரண்மனையி லிருந்து திரும்பி வருகிறபோது மட்டும் பண்ணையிலே வேலை கொடுப்பார். வீட்டிலே சாப்பாடு.

உணவருந்திக் கொண்டே முத்துசாமிக் கவுண்டர், "மறுபடியும் எப்போ அரமனைக்கு?" என்று குறும்புச் சிரிப்பும் குத்தலுமாகக் கேட்டார்.

"இந்தத் தடவை அரமனைக்குப் போவதில்லீங்க. ஒரு நல்ல தொழில் செய்யப் போறேனுங்க" என்று புதிர் போட்டது போல மாமன் கூறலானான்.

"அதென்ன அப்படித் தொழில்? எனக்கு அதிலே பங்கில்லையா?" என்று கூறி நகைத்தாள் கண்ணம்மா.

பெ. தூரன்



''அம்மணி, அதெல்லாம் இப்பத் தெரிய வேண்டாம். கடைசியா எல்லாருக்கும் பங்குண்டு'' என்று கூறிப் பேச்சை முடித்து விட்டான் அரண்மனைக்கார மாமன். மாமனுடைய கை பொல்லாததாக இருந்தாலும் கண்ணம்மாளை அம்மணி என்று உறவு வைத்து அழைப்பதில் அவன் வாய் தவறாது. உண்மையாகவே அவனுக்கு அவளிடத்தில் ஓர் உயர்ந்த மதிப்பு இருந்தது. முடியுமானால் அவளுக்கு உதவ வேண்டும் என்ற ஆசையும் இருந்தது.

இரண்டு மூன்று நாட்களிலே அரண்மனைக்கார மாமன் தன் புதிய திட்டத்தைப் பற்றி அந்தரங்கமாக முத்துசாமிக் கவுண்டருக்கு விளக்கினான். எடுத்த எடுப்பிலேயே முத்துசாமி கவுண்டர் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். ''இதெல்லாம் யார் செய்கிற வேலை? பேசாமத் தோட்டத்திலே வந்து வேலை செய். நல்லாப் பாடுபட்டா நல்ல முறையிலே சம்பாதிக்கலாம்.''

''நீங்க சும்மா இருங்க. நான் எல்லாம் பாத்துக்கிறேன். ஒரு நடைக்கு நூறு ரூபா சம்பாதிச்சுடுவேன். நீங்க புட்டிகளை வைச்சிருக்கிறதுக்கு உங்க பண்ணைச் சாளையிலே இடம் கொடுத்தாப் போதும். சரி பாதி உங்களுக்குப் பங்கு'' என்று ஆசை காட்டினான் மாமன்.

''என்னையும் அரமனைக்கு இழுக்கப் பார்க்கிறியா? இந்தக் கள்ளச் சாராய வியாபாரமெல்லாம் எனக்குச் சுத்தமாப் பிடிக்காது.''

''நீங்க ஒண்ணு. இப்படிப் பயப்பட்டா வயிரத்தோடு வாங்கினாப் போலத்தான். நான் சொல்ற தொழிலே மூணு மாசத்திலே பணத்தை வாரிக் கட்டிவிடலாம். அப்புறம் வேணும்னா விட்டுட்டாப் போவுது'' என்று கூறினான் அரமனைக்காரன்.

வயிரத்தோடு என்றவுடன் முத்துசாமிக் கவுண்டருக்குக் கொஞ்சம் நாட்டம் விழுந்து விட்டது.

பண்ணைக்காரர் இள வயதினராக இருந்தாலும் நாணயமும் ஒழுக்கமும் உடையவர் என்று அந்தப் பக்கத்திலே பெயர் எடுத்திருக்கிறார். அதனால் போலீஸ் ஏதாவது ஒரு நாள் வந்தாலும் அவரிடமோ, அவருக்குச் சம்பந்தப்பட்ட இடத்திலோ எதுவும் தப்பாக இருக்காது என்றுதான் நிச்சயமாக நம்பும். இதற்காகத்தான் அரண்மனைக்கார மாமன் அவருடைய சாளையிலே இடம் கேட்டான். தனக்கு அன்போடு சோறு போடும் கண்ணம்மாவுக்கு வைரத் தோடு வாங்கிப் போடுவதில் அவனுக்கு ஓர் அலாதியான அக்கறையும் இருந்தது.

பண்ணைக்காரர் சம்மதம் கொடுத்துவிட்டார். தொழில் நடந்து கொண்டிருந்தது. இரவிலே காடு காடாய்ச் சென்று சரக்கை வாங்கிக் கொண்டு வருவதும் விற்பனை செய்வதும் அரண்மனைக்கார மாமனுக்குச் சிரமமில்லாத காரியமாக இருந்தது. பணமும் குவியக் குவிய அவன் விற்பனையை எல்லை மீறிச் செய்யத் தொடங்கினான். முன்பெல்லாம் அவன் உள்ளூரிலே எந்த விவகாரமும் வைத்துக் கொள்ள மாட்டான். இப்பொழுது உள்ளூரிலும் தீராத தாகம் கொண்டவர்களுக்குத் தாகசாந்தி செய்வதாகச் சொல்லிக் கடைசியிலே புதிய தாகங்களை உண்டாக்குவதிலும் முனைந்து விட்டான். ஊரிலே இளைஞர்களெல்லாம் மதுவிலே மூழ்கலானார்கள்.

அரண்மனைக்கார மாமன் இவ்வளவு பெரிய தொழில் செய்தாலும் எந்த விதமான மதுவையும் தன் வாயில் ஊற்றிக் கொண்டதில்லை. மதுவிலே அவனுக்கு என்றும் கவர்ச்சி இல்லை.

தொழில் நடக்கிற சூட்டிலே மாமன், கவுண்டருடைய வீட்டுக்கு வருவதையும் வெகு நாட்கள் மறந்து விட்டான். ஆனால் திடீரென்று ஒரு நாள் அவன் சோர்ந்த முகத்தோடு கண்ணம்மாளைப் பார்க்க வந்தான். வந்தவன் அப்படியே திண்ணையிலே சுவரில் சாய்ந்து கன்னத்தில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

''என்ன மாமா, எப்படி சவுக்கியம்? என்னமோ தொழில் நடத்தறேன்னு போனீங்க— இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கலையே?'' என்று கண்ணம்மாள் கேட்டாள்.

''எல்லாம் திருட்டு நாய்கள். — என் முதலைத் தின்னவன் உருப்படி ஆக மாட்டான்'' — மாமன் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் கொந்தளித்துக் கொண்டு வந்தன. நேரிடையாக அவன் பதில் சொல்லவில்லை — அத்தனை கோபம் அவனுக்கு.

கண்ணம்மாள் அருகில் வந்து ஒரு மூக்காலியில் அமர்ந்தாள். அவளுக்கு விஷயம் ஒன்றும் சரியாகப் புரியவில்லை.

''பின்னே என்ன அம்மணி! கடனுக்கு ஊத்து, கடனுக்கு ஊத்துன்னு கெஞ்சிக் கெஞ்சிக் குடிச்சிப் போட்டு இப்போ பணம் குடுக்க முடியாதாம் — வேணும்னு போலீசிலே பிராது குடு பார்க்கலாம்னு திருட்டு நாய்கள் எல்லாம் சேர்ந்து பேசிவச்சது போலச் சொல்றாங்கோ — வந்த வரும்படி எல்லாம் தொலைஞ்சுது.''


கண்ணம்மாளுக்கு அப்பொழுதுதான் உண்மை புலனாயிற்று. பிராது கொடுத்தால் கொடுத்தவனே மாட்டிக் கொள்ளும் தொழிலிலே மாமன் ஈடுபட்டிருந்தான் என்று அவள் தெரிந்து கொண்டாள்.

அவள் மௌனமாக இருப்பதைக் கண்ட அரண்மனை மாமன் தன் கொதிப்பைத் தணித்துக்கொள்ள மேலும் பேசலானான்.

''ஆனா நான் ஒண்ணு சொல்றேன் கேளு அம்மணி. ஊரார் முதலைத் தின்னவன் எவனும் உருப்படியாக மாட்டான் — இது நிச்சயம்'' என்று சொல்லிக் கொண்டே அவன் எழுந்தான். திடீரென்று ஏதோ ஒரு புதிய எண்ணம் தோன்றியது போல அவன் நெஞ்சிலே வயிரத்தோடு புறப்பட்டான். அவனுடைய தொழில் ரகசியம் கொஞ்சங் கொஞ்சமாக மனத்திலே விரிந்து பரவிக் கொண்டிருந்ததால் அவனை உணவருந்திச் செல்லும்படி அழைக்கவும் கண்ணம்மாவுக்குத் தோன்றவில்லை.

''இத்தனை பேரு இந்தச் சாராயத்துக்கு இப்படிச் சாவறாங்களே, இதிலே என்னதான் இருக்குமோ?'' என்று எண்ணமிட்டுக் கொண்டே அரண்மனை மாமன் பண்ணைச் சாளைக்கு நடந்தான். அங்கே ஒரே ஒரு புட்டிதான் கள்ளச் சரக்கு மிஞ்சி யிருந்தது. ''கடைசியிலே இதுதான் மிச்சம். காச

அடேயப்பா, வளர்ச்சியின் உச்சநிலை!
இப்படியொரு வேகமான மாறுதலை
விளைவிக்கமுடியுமா ஒரு டானிக்?





ஆம், வளர்ச்சிக்கான
பசியை உங்கள்
குழந்தைக்கு
வளமுடன் வழங்குவது
இன்க்ரிமின் *

இன்க்ரிமின் டானிக் பிரத்தியேகமாகப் பசியைத் தூண்டி, வயிறார உண்ணும் மிருதுவான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றி, வாட்டசாட்டமாக வலுவோங்கச் செய்கிறது. சாப்பிடும் புரத சத்து அனைத்தையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள உதவுகிறது இன்க்ரிமின். நம் உணவில் இல்லாத ஒரு முக்கிய அமினோ அமிலம் செறிந்துள்ள டானிக். வளரும் வயதினிலே (4 வாரம் முதல் 14 வயது வரை) அன்றாடம் கொடுங்கள் : செர்ரிப் பழச் சுவை ததும்பும் இன்க்ரிமின். மறவாதீர்கள் :

இதுவே கண்கண்ட வளர்ச்சிப் பருவம், இன்க்ரிமின்* பருவம்

◀ பெரிய குழந்தைகளுக்கு (இரும்புச் சத்து அடங்கிய) இன்க்ரிமின் ஸிரப்

இளம் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ்
▼





Lederle

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
உலகெங்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பெயராகிய லெடர்லீ தயாரிப்பது இன்க்ரிமின்.
லெடர்லீ டிவிஷன், ஸயானமிட் இந்தியா லிமிடெட், பி.ஓ. பாக்ஸ் 6577, பம்பாய்-18.

*அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

விண்டாஸ்-INC.-14Q TM

பிளேடு தயாரிப்பு முறையில் ஓர் புதிய முன்னேற்றம்

உலகத்திலே சிறந்த பிளேடுகளை தயாரிப்பதில் கையாளப்படும் மிக நவீனமும் ரகசிய தொழில் நுணுக்கமுமான பிரத்யேக முறையான ''மல்டி பேஸட் கிரைண்டிங் ப்ராஸஸ்'' மூலமாக, முதன்முறையாக பனாமா ஒரு புதிய க்ஷவர பிளேடைத் தயாரித்து அளிக்கிறார்கள். அது மட்டும் அல்ல, உலகத்திலேயே வெகு சுகமாக க்ஷவரம் செய்யக் கூடியதும், நீண்ட நாள் நன்கு உழைக்கக்கூடிய பிளேடுகளின் இரு ஓரங்களில் மட்டுமே ரசாயனமுறையில் பூசப்படும் உயர்தர ரசாயனப் பொருளான ''ஹைடென்ஸிடி பாலி டெட்ரா ப்ளுரோ எதிலீன்'' என்னும் கலவைப் பொருள் இப்புதிய பிளேடின் இரு ஓரங்களிலும் பனாமா தொழில் நுணுக்க முறை மூலம் பூசப்பட்டு இருக்கிறது.



வந்தது கொளுவாகப் போச்சு — ஆனா என் மூதலே வாயில் போட்டுக்கிட்ட நாய்களைச் சும்மா விடப் போறதில்லே. கடன் இல்லேன்னு உதைக்க வர்ற கழுதைகள் கடன் கொடுத்தாத் திருப்பிக்கொடுக்காத நாய்கள்'' என்று சொல்லிக்கொண்டே அந்த ஒரு புட்டியில் பாதியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பத்து காலிப் புட்டிகளில் ஊற்றினான். தண்ணீர் விட்டு ஒவ்வொன்றையும் நிறைத்து முழு புட்டி போலாக்கி வைத்து விட்டு, கள்ளச் சரக்கில் மீதியிருந்த அரை புட்டியைத் தன் வாயில் ஊற்றி மடக் மடக்கென்று குடித்தான்.

அவனுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. தொண்டையிலும் வயிற்றிலும் தீப்பற்றி எரிவது போலத் தோன்றியது. ''இந்தச் சனியனுக்கா இப்படி அலையறானுங்க?—சே! ஆனா நானும் அதன் ருசியைப் பார்த்திட்டேன். தூ....தூ இனி நம்ம வேலையைக் காட்டலாம்'' என்று சொல்லிக் கொண்டே அரண்மனைக்கார மாமன் போலீஸ் காவல் நிலையத்தை நோக்கி நடந்தான்.

வாரத்துக்கு இரண்டு முறை அவன் போலீஸிலே ஆஜர் கொடுக்க வேண்டும். இது அவனுடைய கைவரிசைக்குக் கிடைத்த தனி கௌரவம். சிறையிலிருந்து வெளி வந்தால் இந்த விதியை அவன் மீறவே மாட்டான். அந்தப் பக்கத்துப் போலீசுக்கு அவன் நல்ல பிள்ளை. அவன் அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதே இல்லை.

நடக்க நடக்க அவனுக்கு என்றுமில்லாத ஒரு புது உணர்ச்சி உண்டாயிற்று. களி பிறந்தது. உலகமே ஒரு தனிக் காட்சியைக் கொடுத்தது. ''அடே இதிலிருக்குது மந்திரம். நான் இதுவரையிலே கண்டுக்காம உட்டுட்டேனே — அடடா! கண்ட திருட்டு நாய்களுக்கு ஊத்திப் போட்டுக் கெட்டலைஞ்சேன்.''

அவனுக்குக் குஷி பிறந்து விட்டது. பாதையைக் கால் அளக்கிறது. ஒரு தெம்மாங்கு, எப்பவோ படித்தது, வாயிலே வருகிறது.


காவல் நிலையம் வந்து விட்டது. ''அண்ணே, போலீஸ் அண்ணே!'' என்று என்றுமில்லாதவாறு கூவிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

''அண்ணே உங்களுக்குக் கள்ளச் சரக்குத் திருட்டுப் புடிக்க வேணுமா? — நேரே முத்துசாமிக் கவுண்டர் சாளைக்கு சாயங்காலமாகப் போங்க. பத்துப் புட்டியோடு அல்லாரையும் புடிச்சுடலாம்'' என்று அரண்மனை மாமன் துப்புக் கொடுத்தான். வழக்கமாக வருகிறவர்கள் அன்றும் வருவார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

''முத்துச்சாமிக் கவுண்டருமா?'' என்று ஆச்சரியத்தோடு ஒரு கேள்வி வந்தது.

அரண்மனை மாமன் பதில் சொல்லச் சற்றுத் தயங்கினான்.

''அவருந்தான் இருக்கும் — இந்தக் காலத்திலே எவன் குடிக்காமே இருக்கான்? இந்த ஆளு எப்பவும் நிசத்தைச் சொல்லிப் போடும்.'' இது மற்றொரு காவலருடைய தந்திரமான புகழ்ச்சிப் பேச்சு.



அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளில் வேகமாகப் பரவி வரும் பொழுதுபோக்கு விளையாட்டு: நத்தை ரேஸ். -விக்கெண்ட் - பாபு

கள்ளச் சரக்குப் புதிதாக உள்ளே வேலை செய்யவே அரண்மனைக்கார மாமனுக்கு நிலை தடுமாறிப் போய்விட்டது. ஏதோ ஓர் இன்ப வெள்ளத்திலே அவன் மிதந்து கொண்டிருந்தான். அதனால் அவனைக் கொஞ்சம் தூக்கி வைத்துப் பேசவே முற்றிலும் அவன் மயங்கி விட்டான்.

ஒரு புன்முறுவலோடு, ''ஆமா பின்னே எப்படிப் பண்ணைக்காரருக்கு வைரத் தோடு வரும் — எல்லாம் குடிக்கிறதுதான்'' என்று உளறிவிட்டான்.

மறுநாள் தெளிவு ஏற்பட்ட பிறகுதான் அவன் தான் செய்த தவற்றை உணர்ந்தான். அதற்குள்ளாகவே எல்லாரையும் போலீஸ் காவலர் பிடித்துக் கொண்டு போய்விட்டனர். முத்துசாமிக் கவுண்டரை ஜாமீனில் மீட்டு வருவதற்கு ஐந்தாறு பேர் கோயமுத்தூர் சென்றிருப்பது மாமனுக்குத் தெரியவந்தது.

அவன் கண்ணம்மாளைப் பார்த்ததும் கதறி அழுதுகொண்டே அவள் காலில் விழுந்தான். கண்ணம்மாளுக்கு மாமன் செய்த தவறு தெரியாது. ஏதோ தற்செயலாகப் போலீசார் வந்து பிடித்துக் கொண்டார்கள் என்றே அவளும் மற்றவர்களைப் போல் எண்ணியிருந்தாள்.

''அம்மணி, வயிரத் தோட்டுக்கு ஆசைப்பட்டு நான் இந்தத் தொழிலிலே இறங்கினேன். எல்லாம் நான் செஞ்ச தப்பு'' என்று மேலும் விம்மி விம்மி அழுதான்.

பிறகு மாமன் எழுந்து நடக்கலானான். கண்ணம்மாவுக்குப் பரிவு பிறந்தது. ''வயிரத் தோடு, வயிரத் தோடு — இந்தப் பைத்தியம் உங்களையும் பிடிச்சுட்டதா? எனக்குத்தான் அதன் மேலே ஆசையே இல்லையே? சரி — நடந்தது நடந்து போச்சு. சாப்பிட்டுட்டுப் போங்க — எல்லாம் எப்படியோ தப்பிச்சுக்கு வாங்கோன்னு பேசிக்கிறாங்கோ. சாப்பிடுங்க'' என்றாள் அவள்.

''இனி உன் கையிலே சாப்பாடு வேறயா?'' என்று கூறிக் கொண்டே நடந்த அரண்மனைக்கார மாமன் சடக்கென்று ஏதோ ஓர் எண்ணம் உள்ளத்தில் வயிரத்தோடு உதிக்கவே உடனே திரும்பி வந்தான்.

''அம்மணி — இலையைப் போடு'' என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தான். ''உன் கையிலே கடைசிச் சாப்பாடு.''

அதன் பிறகு அரண்மனைக்கார மாமன் அந்த ஊருக்கே வரவில்லை. அரண்மனைக்குப் போவதும் வெளியில் வந்த உடனேயே பகிரங்கமாகக் களவாடி மீண்டும் உள்ளே செல்வதுமாக இருப்பதாக விஷயம் தெரிந்த வட்டாரத்திலே பேசிக் கொண்டார்கள்.



தேவாரப் பண் இசை

பண்களுக்கு ராஜ ராஜ சோழன் புத்துயிர் அளித்த பின் சுமார் ஆயிரம் ஆண்டுகள் பண் இசையின் போக்கு முறை கெட்டுக் கிடந்தது. தமிழிசைச் சங்கம் இன்று காட்டி வரும் ஊக்கத்துக்கும் முயற்சிக்கும் பேராசிரியர் எம். எம். தண்டபாணி தேசிகரும் சங்கீத பூஷணம் எஸ். ராமநாதனும் முதுகெலும்பு போன்றவர்கள். 1966ல் தேசிகர் தேவாரத் திவ்வியப் பிரபந்தத் திருப்புகழ்ப் பாடல்களை ஸ்வர தாளக் குறிப்புடன் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து ராமநாதன் 'திவ்வியப் பிரபந்தப் பண் இசை', தேவாரப் பண் இசை' என்னும் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளதற்கு அன்பர்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளார்கள். எழுபது பக்கங்கள் கொண்ட 'தேவாரப் பண்ணிசை'யில் 37 பாடல்கள் அச்சாகியுள்ளன.

தண்டபாணி தேசிகர் வெளியிட்டுள்ள பதிகங்களுள் 18 மீண்டும் ஏறக்குறைய அதே பாணியில் இப்போது வெளிவந்துள்ளன. வேலை இரட்டிப்பு ஒரு புறம்; ஸ்வர அமைப்புகளில் வேறுபாடுகள் அதிகம் இல்லை. ஆனால் இரு போக்குகளின் இடையில் அன்பர் திணற வேண்டி வரலாம்.

தாளக் கட்டில்லாமல் சுத்தாங்கமாகப் பாட வேண்டிய திருத்தாண்டகமும் மற்ற சில பண்களும் ஸ்வரக் குறிப்புகளுடன் வெளியிட முடியாதென்பது உண்மை. பாடல்களின் வாசகம் மட்டும் அச்சிடப்பட்டுள்ள நோக்கம் விளங்கவில்லை. சுத்தாங்கமாகப் பாடும் முறையை 'விருத்தமாகப் பாடுதல்' என்று விளக்கம் செய்வதுண்டு. ஆகவே அந்த வழக்குக்கும், 'திருவிருத்தம்' என்னும் தலைப்புக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாக்குதல் தேவைப்படும்.

பிள்ளையார் குட்டுக்கு உரிமையுடையதால் வியாழக் குறிஞ்சி மரபை விட்டு 'பிடியதனுரு உமை'யை நாட்டையுடன் தொடங்கும் புதிய மரபு தோன்றியுள்ளது போலும். திருக்குறுந்தொகைப் பதிகமாகிய 'மாசில் வீணை' மாளவகௌளை ராகத்தில் தரப்பட்டுள்ளது. ஆராய்ச்சி முடிவை ஆதாரமாகக் கொண்டே பேராசிரியர் இவ்வாறு பிரசுரம் செய்திருக்க வேண்டும். ஆனால் அடங்கன் முறை அருணாசல தேசிகரின் புராதன மரபின்படி இப்பதிகம் பூர்வி கல்யாணியில் பாடப்படுவதுண்டு. கானடா ராகத்துக்கும் இப்பதிகத்துடன் உறவு உண்டு. 'அடுத்தானை' நவரோஜில் தலைமுறையாக ஊறி வளர்ந்து இன்று யதுகுல காம்போதியிலும் பெருகு ஏறி வருவது ஒரு புதுமை.

இந்நூலின் ஆராய்ச்சி முன்னுரை மிகவும் சுவையுள்ளது. வடமொழியில் பிரபலமாகியுள்ள வீலாமக் கிரமம், மத்யமகால ஸாஹித்யம் போன்ற கருத்துக்கள் பூர்விக தேவார சித்ரக்கவி முறையில் மாலை மாற்று, நாலடி மேல் வைப்பு என்ற பெயர்களில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருந்தன. இசை நுணுக்கங்களை ஆராய்வோருக்கு இவை உபயோகமான தகவல். ஒருமைப்பாட்டை வளர்க்கும் முயற்சியை இன்னும் நீட்டி வளர்த்து சட்சம், அரிகாம்போதி என்னும் சொற்களுடன் ஷட்ஜம், ஹரிகாம்போதி என்னும் பெயர்களுடன் விளக்கம் காட்டல் உசிதம். சங்கீதக் கலைக்கு வழக்குகளைத் தீர்க்க அட்சரங்களுக்கு இலக்கம் தரும் கடபயாதி முறையில் நம்பிக்கையுள்ளவரை, ஹரிகாம்போதி அரிகாம்போதியாக மாறுதல் ஒவ்வாது. பண் இசையில் எதிர் நீச்சலுக்கு மேலும் மேலும் முட்டுக்கட்டைகள் உதவா.

—டி. சங்கரன்

கிடைக்குமிடங்கள்: கலைமகள் இசைக் கல்லூரி, 59, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, சென்னை-5; 1/14, எட்வர்ட் எலியட்ஸ் ரோட், சென்னை-4. விலை ரூ. 3.00.

குமாரசுவாமிப் புலவர்

குமாரசுவாமிப் புலவர் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த வடமொழி, தென்மொழி வல்ல பெரும் புலவர்களுள் ஒருவராவார். அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். கவி புனைவதிலும், கட்டுரை எழுதுவதிலும் கண்டனம் தீட்டுவதிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தனிப் பெருமையோடு திகழ்ந்தவர். சைவமும், தமிழும் தழைக்க வென்றே அவர் தம் வாழ்நாளை அர்ப்பணித்தார்; அத்துறையில் பல நூல்களை எழுதி அழியாப் புகழ் பெற்றார். அவரது தொண்டை அக்காலத்துத் தமிழ் அரசர்களும், புலவர்களும், பிரபுக்களும் பாராட்டியுள்ளனர். இவரது வாழ்க்கை வரலாறு சுருக்கமாக முன்பு வெளிவந்தது. இப்போது தக்க சான்றுகளோடு விரிவான வரலாறு வெளிவந்திருப்பது தமிழ் மக்களின் பாக்கியமாகும்.

எழுதியவர்: கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, புலவரகம், மயிலணி, சுன்னாகம், இலங்கை. விலை: ரூ. 6.50.

பேராதனைப் பல்கலைக் கழகத் திருமுருகன் கீர்த்தனைகள்

இலங்கைவாழ் தமிழர் தமிழ்மொழிக்கு அளப்பரும் தொண்டாற்றி வருகின்றனர். சமயத் துறைக்கும், பக்தி நெறிக்கும், இலக்கிய வளத்துக்கும் அவர்கள் புனைந்துள்ள இசைத் தமிழ் நூல்கள் எண்ணற்றவை. இந்நூலில் நூறு கீர்த்தனைகள் முருகப் பெருமான்மீது இயற்றப்பட்டிருக்கின்றன. பாடல்களில் பக்திச் சுவையோடு இலக்கியச் சுவையும் கலந்து மிளிர்கிறது. இயற்றியவர்: யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயர். கிடைக்குமிடம்: பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கம், பேராதனை, இலங்கை. விலை: ரூ. 1.00.



விக்ஸ் முதல் மாத்திரை சாப்பிட்டவுடனே, உங்களால் உணர முடியும், அதிலுள்ள ஆறு மருந்துகள் எவ்வளவு ஆறுதல் அளிக்கிறது என்பதை! விக்ஸ் வேபொரப்பின் இதமளிக்கும் மருந்துகள் ஒவ்வொரு விக்ஸ் மாத்திரையிலும் அடங்கியுள்ளன; அவை இருமலையும் தொண்டைக் கரகரப்பையும் விரைவில் தணிக்கின்றன.

வாங்குங்கள் விக்ஸ்--
கைக்கடக்கமான
4 மாத்திரைகள் அடங்கிய
ஜிகினுத் தாளுறையிலும்
கிடைக்கிறது விக்ஸ்.



விரைவிலே இதமளிக்கும் இருமல் மாத்திரை

சின்டாஸ்-VKS. IA-140 TM



குடும்பத்தினர் அனைவரும்
திட ஆரோக்கியத்துடன் திகழ
ஃபாஸ்ஃபோமின்®
ஃபாஸ்ஃபோமின்
• சக்தியை அதிகரிக்கிறது
• பசியைத் தூண்டுகிறது
• வலிவைப் பெருக்குகிறது
• நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுகிறது.
SQUIBB
Phosformin
VITAMINS ELIXIR
There's health in Phosformin for all the family
SQUIBB
SARABHAI CHEMICALS
இ.ஆர் ஸ்க்விப் & ஸன்ஸ் இன்-கார்ப்பரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்காகும். கரம் சந்த் ப்ரேம் சந்த் பிரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.
ஃபாஸ்ஃபோமின்...
பழரஸ மணம் கமழும்
பச்சை நிற விடமின்
டானிக்.
Shilpi HPMA-35A/70 Tam

☐ இக்குறியிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.



☐ மகாத்மா காந்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெறுத்தாரேயன்றி, பிரிட்டிஷ்காரர்களை அவர் ஒரு போதும் வெறுக்கவில்லை. இந்த உண்மையை காந்திஜி பல முறை அவரது பிரசங்கங்களில் கூறி வந்திருக்கிறார்.

காந்திஜி அடிச்சுவட்டை அன்று முதல் இன்று வரை தருமம், நேர்மை என்ற அடிப்படையில் பின்பற்றி வரும் ராஜாஜி, தனிப்பட்ட முறையில் இந்திரா காந்தியையோ, தமிழக முதன் மந்திரி திரு கருணாநிதியையோ வெறுக்கவில்லை. நீதிக்குப் புறம்பாகக் காரியங்களைச் செய்து கொண்டு வரும் அவர்களது செய்கையைத்தான் ராஜாஜி கண்டித்துப் பேசியும், எழுதியும் வருகின்றார் என்பதை நேர்மை உள்ளம், அரசியல் அநுபவம் கொண்ட ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்வர்.

தேச நலன், வருங்காலச் சந்ததியின் நல்வாழ்வு, மக்களின் ஜீவாதார உரிமைகள் இவற்றுக்காகவே ராஜாஜி இந்தத் தள்ளாத வயதிலும் அயராது உழைத்து வருகின்றார். அதிகார மாயையில் அழுந்திக் கிடக்கும் சிலருக்கு அவரைப் புரிந்து கொள்வது சாத்தியமில்லை. வெறுப்பு, விருப்பு இன்றித் தூய உள்ளத்தோடு ராஜாஜியின் அறப்போரைக் கவனித்தால், கண்ணன் கீதையில் கூறியவற்றைத்தான் அவர் தம் பணியில் முழுக்க முழுக்கக் கடைப்பிடித்து வருகிறார் என்பதை நன்கு புரிந்து கொள்ளலாம்.

ராஜாஜி நமது தேசத்துக்கு ஏற்படவிருக்கும், இப்பொழுது நடைமுறையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பேராபத்தைத் தமது ஞானக் கண்ணால் கண்டு கொண்டு விட்டார். தூய உள்ளத்தில் கண்ட அந்தப் பேருண்மையை ராஜாஜி தளராமல் மக்களுக்கு எடுத்துரைத்து வருகிறார். அவரது வாக்கை நாம் உதாசீனம் செய்வோமானால், அறநெறி கெட்டவர்களே ஆட்சியை மீண்டும் பிடித்து ஆணவத்தினாலும், அதிகார போதையினாலும் மனம் போன போக்கில் ஆட்சி செய்யத் தலைப்படுவார்கள். அப்படிப்பட்ட ஆட்சியில் அதருமத்தையும், அராஜகத்தையும் தவிர வேறு ஒன்றையும் கண்டிப்பாக எதிர்பார்க்க முடியாது. ஆதலால், தில்லியில் 'ஹிட்லர் ஆட்சி'யை;ஒழிக்க நேர்மையுள்ளம் கொண்ட மக்கள் அனைவரும் ராஜாஜியின் அறப்போரை முழு மனத்துடன் ஏற்று அவர் கூறிய வண்ணம் நடந்து காட்டுவோமாக!

சென்னை — 41
25—2—71 கே. எஸ். பரமேசுவரன்

இடைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் ஒவ்வொரு தொகுதியிலும் வாக்காளர்களின் எண்ணிக்கை சென்ற பொதுத் தேர்தலுக்கு இப்பொழுது வியக்கத்தக்கவகையில் உயர்ந்துள்ளதைக் காண்கிறோம். இதற்கான காரணங்களைப் பலவாறாகக் கூறினாலும், புதிய வாக்காளர்கள் அனைவரும் இருபத்தொரு பிராயத்தைக் கடந்தவர்களாகக் கருத முடியாது. ஏனெனில், பதினெட்டு, பத்தொன்பது வயதுள்ளவர்கள்கூட ஒரு விண்ணப்பத்தை எழுதித் தந்து தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர் என்று கேள்வியுற்றேன். மேற்படி விண்ணப்பங்களை வாங்கிக் கொள்ளும் அரசாங்க அதிகாரிகள் வாக்காளர்களாகப் பதிவுசெய்யக் கோரிக் கொடுக்கும் விண்ணப்பங்களைமட்டுமே பெறுகிறார்களே தவிர அவர்கள் பிறந்த நாள் சான்றிதழையோ மற்றும் பிறந்த நாளை ருசுப்படுத்தும் சாட்சியங்களையோ பெறுவது கிடையாது. விண்ணப்பம் பெறும் சமயமாவது, அதன் பின்னராவது விண்ணப்பதாரரின் வயதைச் சரி பார்ப்பது கிடையாது. ஆகையினால்தான் சில தொகுதிகளில் வியக்கத்தக்க வகையில் வாக்காளர் எண்ணிக்கை பெருகியுள்ளது.

ஈரோடு — 1
24—2—71 டி. வி. சுப்புநாராயணன்

தீனபந்து ஆண்ட்ருஸ் அவர்களைப் பற்றி திரு 'நஜன்' அவர்கள் எழுதியுள்ளார். அதில் தவறான செய்தி வெளியாகியிருக்கிறது. 'வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் கிறிஸ்துவ குல ஆசிரமத்தை இவர் ஸ்தாபித்தார் என அச் செய்தி குறிப்பிடுகிறது. மக்கள் திருப்பணியே இறைவன் திருப்பணி என வாழ்ந்த அன்பர்கள் டாக்டர் சவரிராமன் ஏசுதாசன் அவர்களும் டாக்டர் ஃபாரஸ்டர் பேற்றன் அவர்களும் 1921ம் ஆண்டு மார்ச் திங்கள் 'கிறிஸ்துவகுல ஆசிரம'த்தை நிறுவினர். தன்னலம் கருதாது அன்புப் பணியாற்றிய இவ்வன்பர்களின் இனிய நினைவு தென்னகத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்கும். தீனபந்து அவர்களும் கிறிஸ்துவகுல ஆசிரமத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். டாக்டர் ஏசுதாசன், டாக்டர் பேற்றன் இருவருக்கும் இவர் உற்ற நண்பர். ஆசிரமத்தில் இவர் தங்கித் தியான வழிபாடுகள் நடத்துவது உண்டு. ஆனால் ஆசிரமத்தை நிறுவியவர் ஆண்ட்ருஸ் அல்ல.

சென்னை-7
11—2—71 இலகலி பால்



Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.


Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabficates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



மாஸி-பர்கூஸன் இந்திய விவசாயிகள் முதன்மையாக ஏற்பது

TAFE